சத்தியவசனம் வெளியீடு

# அனுதினமும் தேவனுடன்



கர்த்தர் என் கன்மலையும்,
என் கோட்டையும்,
என் இரட்சகரும்,
என் தேவனும்,
நான் நம்பியிருக்கிற
என் துருகமும்,
என் கேடகமும்,
என் இரட்சணியக் கொம்பும்,
என் உயர்ந்த
அடைக்கலமுமாயிருக்கிறார்
(சங்கீதம் 18:2)

ஜூலை
ஆகஸ்ட்
2010

வருடம் 38 தியானம் 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசுத்த வேதாகமத்தை ஓராண்டிற்குள் வாசித்து முடிப்பதற்கான கால அட்டவணை

### ஜூலை

| திகதி | காலை | மாலை |
|---|---|---|
| 01 | 2நாளா 21,22,23 | அப். 7:41-60 |
| 02 | 2நாளா 24,25 | அப். 8:01-25 |
| 03 | 2நாளா 26,27,28 | அப். 8:26-40 |
| 04 | 2நாளா 29,30 | அப். 9:01-25 |
| 05 | 2நாளா 31,32 | அப். 9:26-43 |
| 06 | 2நாளா 33,34 | அப். 10:01-22 |
| 07 | 2நாளா 35,36 | அப். 10:23-48 |
| 08 | எஸ்றா 1,2 | அப். 11 |
| 09 | எஸ்றா. 3,4,5 | அப். 12 |
| 10 | எஸ்றா. 6,7 | அப். 13:01-13 |
| 11 | எஸ்றா. 8,9 | அப். 13:14-39 |
| 12 | எஸ்றா. 10 | அப். 13:40-52 |
| 13 | நெகே 1,2,3 | அப். 14 |
| 14 | நெகே 4,5,6 | அப். 15:01-18 |
| 15 | நெகே 7,8 | அப். 15:19-41 |
| 16 | நெகே 9,10 | அப். 16:01-24 |
| 17 | நெகே 11,12 | அப். 16:25-40 |
| 18 | நெகே 13 | அப். 17 |
| 19 | எஸ். 1,2 | அப். 18 |
| 20 | எஸ். 3,4,5 | அப். 19:01-22 |
| 21 | எஸ். 6,7,8 | அப். 19:23-41 |
| 22 | எஸ். 9,10 | அப். 20:01-16 |
| 23 | யோபு 1,2,3 | அப். 20:17-38 |
| 24 | யோபு 4,5,6 | அப். 21:01-26 |
| 25 | யோபு 7,8,9 | அப். 21:27-40 |
| 26 | யோபு 10 - 13 | அப். 22 |
| 27 | யோபு 14,15,16 | அப். 23 |
| 28 | யோபு 17 - 20 | அப். 24 |
| 29 | யோபு 21,22,23 | அப். 25 |
| 30 | யோபு 24 - 28 | அப். 26 |
| 31 | யோபு 29,30,31 | அப். 27:01-20 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுதினமும் தேவனுடன்

## (DAILY DEVOTIONS)

## ஜூலை - ஆகஸ்ட்
## 2010

நிர்வாக இயக்குனர் :
திரு. மயுக பெரேரா

தொகுப்பாசிரியர் :
திரு. வஷ்னீ ஏனர்ஸ்ட்

இது ஒரு சத்தியவசன வெளியீடு

தபால் முகவரி:
சத்தியவசனம்
த.பெ. 1012,
கொழும்பு, இலங்கை.

நேரில்:
120A, தர்மபால மாவத்தை
கொழும்பு 7
இலங்கை

TEL: 011-2695441, FAX: 011-2698843
Email: svsl@backtothebible.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*'நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது!'*
*(யாக்கோபு 1:17)*

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

இந்த வருடத்தின் மூன்றாவது வெளியீடாக வெளிவரும் இந்த "அனுதினமும் தேவனுடன்" சத்தியவசன தியான நூல் ஊடாக உங்களைச் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.


"எந்தவொரு மனிதனுடைய வாழ்வும் மரணமும் அவனது கைகளில் இல்லை" என்ற சத்தியத்தை தேவன் வேதாகமத்திலிருந்து திரும்பத்திரும்ப கற்றுக்கொடுத்து வருவதை நாம் அறிந்துகொள்கின்றோம். அவ்வாறே தேவனே தமக்குச் சித்தமானவர்களுக்கு தமக்குச் சித்தமானதை ஏற்றநேரத்திலே கொடுக்கிறார். ஆகவே, தேவனுடைய வார்த்தையை தியானிக்கும்போது, நமது வாழ்விலே, நன்மையான சகல ஈவுகளையும் ஆண்டவரிடத்திலிருந்து நிச்சயமாக பெற்றுக் கொள்வோம். இந்த விசுவாசத்துடனும் நிச்சயத்துடனும் இத் தியானங்கள் உங்களுடைய ஆவிக்குரிய வாழ்வுக்கு ஆசீர்வாதமாக அமைய வேண்டுமென்று ஜெபத்தோடு வெளியிடுகின்றோம். இதைக் குறித்த உங்கள் சாட்சிகளையும் கருத்துக்களையும் தவறாமல் எமக்கு எழுதித் .தெரிவியுங்கள்.

இம்முறை ஜூலை மாதத்திற்கான தியானங்களை தானியேலின் புத்தகத்திலிருந்து வேதபடிப்பாக **சகோதரி சாந்தி பொன்னு** அவர்களும், ஆகஸ்ட் மாத தியானங்களை பல்வேறு தலைப்பிலான தியானங்களாகவும் தொகுத்து தந்துள்ளோம். இவை உங்களுக்கு ஆசீர்வாதமாக இருப்பதை அறிந்து, கர்த்தரை நன்றியோடே துதிக்கின்றோம்.

கர்த்தருடைய வார்த்தைகளைக் கற்றுக்கொண்டு அந்தச் சத்தியங்களுக்குக் கீழ்ப்படிந்து, அனுதினமும் தேவனுடன் வாழுகின்ற உங்களுக்கு நமது ஆண்டவரின் தெய்வீக பாதுகாப்பும் ஆசீர்வாதமும் எப்போதும் அனைவரோடும் கூட இருப்பதாக!

இப்படிக்கு,

அன்புடனும் ஜெபத்துடனும்,



***சகோதரன் வஷ்னீ ஏனர்ஸ்ட்***

(தொகுப்பாசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
1
வியாழன்

வாசிப்பு: தானியேல் 3:13-17

# சவால்

'நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன்....'
(தானியேல் 3:17)

தானியேல் புத்தகத்திலிருந்து தியானங்களைத் தொடருவோம். நாம் தானியேலின் நண்பர்களுக்கு நடந்தவற்றை சிறுவயதிலிருந்து அறிந்திருக்கி றோம். அவர்கள் செய்த அறிக்கையை வைத்து இந்நாட்களில் பாடல்கள்கூட வந்துவிட்டன. ஆனால் இவர்கள் வாழ்வில் நடந்த சம்பவமும், அது நமக்கு தரும் சவாலும் நமது வாழ்வில் தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கின்றதா என்ற கேள்வியை நாம் கேட்டுப் பார்ப்பது நல்லது. காரியங்களை அறிவது அறிவு. அவ்வறிவை ஞானமாய் செயற்படுத்தாவிட்டால் அது வெறும் செத்த அறிவுதான். அந்த அறிவு உயிருள்ளதாயின் நமது அன்றாடக வாழ்விலும் கிரியையிலும் அது வெளிப்படவேண்டும். இதுவரையில் நமக்கு ஏற்பட்ட இக்கட்டுகளில் நெருக்கங்களில் 'நான் ஆராதிக்கின்ற தேவன்' என்ற அறிக்கையை நாம் பயமின்றி செய்ததுண்டா?

இந்த மூன்று நண்பர்களும், அக்கினிச் சூளைக்கு முன்னேயும், அந்த அக்கினியில் தம்மைத் தள்ளிவிட வல்லவனான ராஜாவின் முன்னிலையிலும் சாவுக்குப் பயமின்றி தைரியமாக நின்று, 'நாங்கள் ஆராதிக்கிற தேவன்' என்று அறிக்கைசெய்தார்கள். அந்தளவிற்கு அவர்கள் தமக்குச் செத்து, தேவனுக்கென வாழ்ந்துகொண்டிருந்தவர்கள் என்பது விளங்குகிறது. இல்லாவிட்டால் இந்தப் பெலன், தைரியம், வைராக்கியம் அவர்களுக்குள் வந்திராது. காரியங்கள் இலகு வாக இருக்கும்போது எவ்வித சவால்களும் நம்மை எதுவும் செய்ய முடியாது. காரியங்கள் கடினமாக இறுகும்போதுதான், இப்படியான சவால்கள் நம்மைப் பயமுறுத்துகின்றன. ராஜா சொன்னபடியே செய்து உயிரைக் காப்பாற்றிவிட்டால், வாழ்நாள் முழுவதும் தேவனை ஆராதிக்கலாமே என்று அன்று அவர்கள் எண்ணியிருந்தால், இன்று அவர்களுடைய பெயர்கள் இந்த வேதாகமத்திலே இடம்பெற வாய்ப்பு இருந்திராது.

பேச்சிலே வைராக்கியமுள்ள நாம், செயற்பாட்டிற்கு வரும்போது தடுமாறுவது ஏன்? விசுவாசிக்கிறோம் என்று முழக்கம் எழுப்புகின்ற நாம், விசுவாசம் சோதிக்கப்படும்போது பின்வாங்குவது ஏன்? சோதனைகளும் பாடுக ளும் சவால்களும்தான் நமது உண்மை நிலைமையை விளங்கவைக்கின்றன. மாத்திரமல்ல, தேவனுக்கென்று வைராக்கியமாய் செயற்பட அவைதான் நமக்கு அருமையான தருணங்களாகவும் அமைகின்றன. ஆனால் நாமோ சவால்க ளுக்கு முகங்கொடுத்து தேவ நாமத்தை மகிமைப்படுத்துவதை விட்டுவிட்டு, தப்பிக்கொள்ளப் பார்க்கிறோம். அதுதான் ஏன்? ஆண்டவர் நம்மில் எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறார். அந்த நம்பிக்கையை நாம் பொய்ப்பிக்கலாமா?

"கர்த்தாவே, என் தடுமாற்றங்களை அழித்துப்போடும். உம்மை ஆராதிக்கும் நான், அந்த ஆராதனைக்கு சாட்சியாக வாழவும் அருள் தாரும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜுலை
**2**
வெள்ளி

வாசிப்பு: சங்கீதம் 66:1-7

# அக்கினியில் இறங்குவாயா?

'நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்.' (தானியேல் 3:17)

'சர்வ வல்லமையுள்ள கர்த்தாவே' என்று வாயார துதிக்கின்ற நாம் தேவ வல்லமைக்கு எவ்வளவு மதிப்பெண்கள் கொடுத்திருக்கிறோம். தலைவலி, இடுப்புவலி சுகப்படுத்தும் அளவுக்கா? அல்லது, வீடு கட்டுகின்ற, பரீட்சையில் சித்திபெறுகின்ற அளவுக்கா? வெறும் லாபத்தையே கருத்தில்கொண்ட சில்லறை வியாபாரிகளைப்போலவே நாம் வாழுகிறோம். எதைப் பற்றியும் அறிவு மாத்திரம் போதாது; அனுபவமும் வேண்டும். அப்பொழுதுதான் அதன் பெறுமதி புரியும்.

தேவனுடைய வல்லமையானது ஒப்புயர்வற்றது என்பதை இந்த மூன்று நண்பர்களும் தம் வாழ்வில் ருசித்திருக்கிறார்கள். இல்லையானால், 'தப்புவிக்க வல்லவர்' என்று முழங்கியிருக்கமுடியாது. இந்த அறிக்கை சாதாரண இடத்தில் செய்யப்படவில்லை. தேவவல்லமையானது, ஒரு மூர்க்க குணமுள்ள ராஜாவின் முன்னேயும், பயங்கரமான அக்கினிச் சூளைக்கு முன்னேயும் சோதனைக்கு நிறுத்தப்பட்டிருந்தது. அந்த இடத்திலே வல்லமை விளங்கவேண்டுமென்றால் பல வழிகள் இருந்தன. வானத்திலிருந்து ஒரு தூதன் இறங்கியிருக்கலாம். அக்கினிச் சூளை அணைந்துபோயிருக்கலாம். ராஜாவுக்கு வலிப்பு வந்திருக்கலாம். நமது மலிந்த மூளை, கர்த்தருடைய வல்லமையை இப்படித்தான் அடக்கிவைக்க முயற்சிக்கும். கர்த்தருக்கே ஆலோசனை சொல்லி ஜெபிக்கவும் நாம் தவற மாட்டோம். தேவ வல்லமையானது மகா மேன்மையானது. அதை நமது அறிவுக்குள் அடக்க நினைப்பது மடமைத்தனம். அந்த வல்லமையின் மகா மேன்மை நிரூபணமாக வேண்டுமென்றால், ஒரேயொரு வழிதான். அவர்கள் அக்கினியில் இறங்கவேண்டும். இந்த இடத்தில்தான் மனித அறிவு தோற்றுப் போகிறது. இது இலகுவான காரியமில்லைத்தான். ஆனால் ஒரு விடயம். இந்த ராஜாவை ஏற்படுத்தியது யார்? அக்கினியும் காற்றும் மழையும் யார் கட்டுப்பாட்டிலே இருக்கின்றன? சகலத்தையும் படைத்தாளுகின்ற சர்வ வல்லவருடைய கட்டுப்பாட்டில் இருக்கின்ற எதைக் குறித்தும், அவராலேயே சிருஷ்டிக்கப்பட்ட மனிதன் பயப்படுவது ஏன்? அதே அக்கினிதான் நியாயத்தீர்ப்பில் தேவகட்டளைப்படி பற்றி எரியப்போகிறது, அப்போது என்ன செய்வோம்!

தேவபிள்ளையே, தேவவல்லமையை நாம் நிரூபித்துக்காட்டவேண்டிய அவசியமில்லை. அவருக்காக நாம் வழக்காடத் தேவையில்லை. இந்த அக்கினியை அணையும் என்று கதறி ஜெபிக்கத்தேவையில்லை. நாம் தேவனுக்குள் திடமாக ஸ்திரமாக வாழுவோமானால், அக்கினியும் அதைப்போன்ற சோதனைகளும்கூட தேவனுடைய கட்டுப்பாட்டில் இருப்பதை நிரூபிக்கலாமே. தேவனை நம்பி அக்கினியில் இறங்கலாமே. நம்மால் அது முடியுமா?

"இயேசுவே, அக்கினிபோன்ற சிலுவையை ஏற்று வெற்றி சிறந்தீர் அந்த மகா வல்லமை என்னிலும் வெளிப்பட நீரே என்னையும் நடத்தும் ஐயா. ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
**3**
சனி

வாசிப்பு: சங்கீதம் 111:1-10

# விடுவிக்காமற்போனாலும்....

'அவர்... விடுவிப்பார். விடுவிக்காமற்போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை. நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள்வதுமில்லை.' (தானி 3:18.19)

பலவேளைகளிலும் நமது ஜெபங்களையும் அறிக்கைகளையும் செய்கைகளையும்கூட நமது திட்டப்படி ஒரு வரையறைக்குள் அடக்கிப்போடுகிறோம். வாக்குத்தத்தங்களையும் நமக்குப் பிடித்தமான அல்லது நமது விருப்பங்களுக்கும், நாம் முகங்கொடுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் பொருத்தமான வசனங்களையும் மாத்திரம் இறுகப்பிடித்து ஜெபித்துவிட்டு, நாம் செய்யவேண்டிய காரியங்களை மறந்து இறுமாப்புடன் இருந்துவிடுகிறோம். இதனால்தான் நமது வாழ்வில் பெரிய காரியங்களைச் செய்ய கர்த்தரால் முடிவதில்லை.

'உங்கள் வாழ்க்கையில் தேவன் குறித்ததான திட்டத்தை சீர்குலைப்பதற்கு இப்பூவுலகில் ஒருவர் இருக்கக்கூடுமென்றால், அது நீங்கள் ஒருவர்தான். மற்றப்படி ஒருவரும் சீர்குலைக்கமுடியாது.' இப்படியாக சகரியா பூணன் அவர்கள் எழுதியுள்ளார்கள். இது எத்தனை உண்மை. நமக்கு எப்போதும் காரியங்கள் இலகுவாக இருப்பதுதான் பிடிக்கும். அதனால் அப்படிப்பட்ட ஒரு காரியத்தையே தேவனும் செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். அப்படியாக அந்த மூவரும் எதிர்பார்த்திருந்தால் 'நாங்கள் ஆராதிக்கும் தேவன் எங்களை விடுவிப்பார்' என்று தற்காலத்தில் நாம் சத்தமிட்டு ஒருவித அதிகாரத்தோடே பாடுவதுபோல அவர்களும் பாடிவிட்டு நிறுத்தியிருப்பார்கள். ஆனால் அவர்களோ, 'விடுவியாமற்போனாலும்...' என்று சொன்னார்களே, அது ஏன்? அவர்களுக்கு தேவன்மீது சந்தேகமா? அல்லது, தற்சமயம் அத்தண்டனை நிறுத்தப்படாமற்போனால்.... கர்த்தருடைய நாமம் தோற்றுப்போய்விடக்கூடாது என்று தேவனுக்காக இவர்கள் பேசினார்களா? அல்லது, தேவன் விடுவிக்காமற்போனாலும் தாம் தேவனை விடமாட்டோம் என்று சுயபெருமையை அவிழ்த்துவிட்டார்களா?

இவை எதுவும் இல்லை. தேவன் ஒரு பெரிய அற்புதம் செய்து தாம் காப்பாற்றப்படவேண்டும் என்ற மனநிலை இருந்திருக்குமானால் முதலாவது அவர்களிடம் பயம் வெளிப்பட்டிருக்கும். இவர்களோ தைரியமாக பேசினார்கள். அக்கினிக்கு வெளியேயும், அக்கினிக்கு உள்ளேயும் தேவ நாம மகிமைக்காக எதுவும் செய்ய தங்களை தேவனுடைய கைகளிலே கொடுத்திருந்தனர். அதாவது, அக்கினியில் போடப்படுவதுதான் தேவசித்தமானால் அதற்கும் ஆயத்தமாயிருந்தனர். அவர்கள் தங்கள் பங்கு வேலையை உண்மைத்துவத்துடன் செய்ய தம்மை அர்ப்பணித்திருந்தனர். அதனால்தான் இன்றும் அவர்கள் பேசப்படுகிறார்கள். நமது வாழ்வுக்கென்று நாம் போட்டிருக்கும் வரையறைகளைத் தகர்த்து, நம்மைப் பூரணமாக தேவனுடைய கரத்தில் ஒப்புவித்தாற்தான் தேவனும் நம் வாழ்வில் பெரிய காரியங்களைச் செய்யமுடியும்.

"பிதாவே, என் வாழ்வில் நானே கட்டுப்பாடுகளை விதிக்காதபடி, எப்போதும் உமது பூரண சித்தத்தினுள் வாழ என்னை ஒப்புவிக்கிறேன். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
4
ஞாயிறு

வாசிப்பு: யோபு 1:6-12; 1-7

# தேவன் போட்ட வேலி

'ஆனாலும் உம்முடைய கையை நீட்டி அவனுக்கு உண்டானவையெல்லாம் தொடுவீரானால்....' (யோபு 1:11)

நம்மைச் சுற்றிலும் தேவன் போட்டிருக்கிற வேலியைக் குறித்து நாம் எவ்வளவுதூரம் நம்பிக்கையுள்ளவர்களாக இருக்கிறோம்? கர்த்தரை மீறி எதுவும் நடக்காது என்ற நம்பிக்கை இருக்குமானால் நாம் ஒருபோதும் அசைக்கப்பட மாட்டோம் என்பது உறுதி. இந்த விஷயத்தை நாம் எவ்வளவாய் நம்புகிறோமோ இல்லையோ, சாத்தான் இதை நன்கு அறிந்திருக்கிறான். தேவகட்டுப்பாட்டை மீறி சாத்தானால் நம்மைத் தொடமுடியாது. அந்த உறுதி நமக்குள் குறையும்போது, அல்லது தேவனுடைய பாதுகாப்பை வெறுமனே அறிந்துகொண்டு அதைச் செயற்படுத்த தைரியம் இல்லாதவர்களாக இருக்கும்போதுதான் நாம் வாழ்வில் அதிகமாக தோற்றுப்போகிறோம். நமக்கேற்படும் தோல்விகளில் அதிகமானவை இந்தக் காரணத்தினால்தான் ஏற்படுகின்றன.

அன்று சாத்தான் முன்கூட்டியே யோபுவின் குடும்பத்தைச் சுற்றிப்பார்த்து விட்டுத்தான் கர்த்தருடைய சந்நிதானத்திற்கு வந்திருந்தான். 'நீர் அவன் வீட்டையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சுற்றி வேலியடைக்கவில்லையோ' என்ற கேள்வியை அவன் சும்மாவா கேட்டான். கர்த்தர் போட்டிருந்த வேலியை யோபு அறிந்திருந்தாரோ இல்லையோ, சாத்தான் அறிந்திருந்தான். ஆகவேதான், 'நீர் உம்முடைய கையை நீட்டி அவனுக்கு உண்டானவையெல்லாம் தொடுவீரானால்...' என்று கர்த்தருக்கே சவால்விட்டான். கர்த்தர்தாமே தாம்போட்டிருந்த வேலியை மெதுமெதுவாகத் திறக்கும்வரைக்கும் சாத்தானால் யோபுவை நெருங்க முடிந்ததா? இரண்டாந்தரமும், நீர் உம்முடைய கையை நீட்டி... என்று சவால்விட்டான். அப்போது கர்த்தர் இன்னும் கொஞ்சம் அகலமாக அந்த வேலியைத் திறந்தார். அதற்காக அவர் வேலியை அதாவது தம்முடைய பாதுகாப்பை முற்றாக அகற்றிவிட்டாரா? இல்லை. அங்கேயும் ஒரு எல்லையை வைத்தார். அதை மிஞ்சி சாத்தானால் யோபுவை நெருங்கமுடியவில்லை.

இதே நம்பிக்கைதான் அக்கினி முன்பாக நின்ற அந்த மூன்று நண்பர்களிடமும் இருந்தது. தம்மைச் சுற்றிலும் தேவன் போட்டிருக்கிற வேலியை அவர் அனுமதியின்றி யாராலும் தகர்க்கமுடியாது என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். அதனால்தான், விடுவிக்காமற்போனாலும்... என்று தைரியமாக சூளுரைக்க முடிந்தது. இந்த நம்பிக்கைதான் நமக்கும் வேண்டும். தேவன் தமது பிள்ளைகளைச் சுற்றிலும் பாதுகாப்பு வேலி வைத்திருக்கிறார். நமக்காக ஜீவன் தந்த ஆண்டவரை மீறி நமது வாழ்வில் எதுவும் நடந்திடமுடியாது என்ற உறுதி நமக்கு இருக்குமானால் யார் நம்மை அசைக்கமுடியும்? யாரையும் நாமும் பகைக்க வேண்டியதில்லையே. கர்த்தரையே சார்ந்து, திடநம்பிக்கையுடன் வாழலாமே!

"பிதாவே, நீர் என்னைச் சுற்றிலும் அடைத்திருக்கிற வேலியை உணரும்படி என் ஆவிக்குரிய கண்களை இன்றே திறந்தருளும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
5
திங்கள்

வாசிப்பு: பிலிப்பியர் 3:4-14

# நாம் போட்ட வேலி

'அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன். குப்பையுமாக எண்ணுகிறேன்.' (பிலிப்பியர் 3:11)

வீட்டுக்கு சுற்றுமதில் கட்டுவதற்காக பனைஓலையால் போடப்பட்டிருந்த வேலியைக் கழற்றினார் ஒருவர். திடீரென ஏற்பட்ட பணக் குழப்பத்தினால் மதில் கட்டும் வேலை சற்று தாமதமானது. அந்த இடைவெளியில் தன் வீட்டுவேலியைப் பழுதுபார்த்துக்கொண்டிருந்த அடுத்த வீட்டுக்காரர், அவ்வேலியை இவர்களது வீட்டு நிலப்பரப்பிற்குள் மெதுவாக நகர்த்தியேவிட்டார். கோபம்கொண்ட இவரை அந்த வீட்டின் மூத்தவராகிய தகப்பன் பார்த்து, 'மகனே, நீ உன் வீட்டு வேலியைக் குலைத்துப் போட்டதனால்தானே அடுத்தவன் உன் எல்லைக்குள் நுழைந்தான். இப்படித்தான் நமது வாழ்க்கையிலும் நடக்கிறது என்பதை ஒரு பாடமாக எடுத்துக்கொண்டு அமைதலாக உன் காரியத்தைக் கவனி' என்றார்.

கர்த்தர், நமக்குப் பாதுகாப்பு வேலியாக இருப்பது ஒன்று; நாமே நமக்கு வேலிகளை அமைத்துக்கொள்வது இன்னொன்று. பவுல் சவுலாக இருந்தபோது அதைத்தான் செய்திருந்தார். அவரைச் சுற்றிலும் 'தான் யூதன்' என்ற வேலி மிக உறுதியாக இருந்தது. மேலும், தகுதி தராதரம் படிப்பு பட்டம் பதவி அந்தஸ்து பணம் மதம் மதவைராக்கியம் என்று பலவித வேலிகளை மிக ஸ்திரமானதாகப் போட்டிருந்தார். தன்னை யாரும் அசைக்கமுடியாது என்றதொரு வைராக்கியம் அவருக்குள் இருந்தது. அந்த வேலியைத் தகர்த்துப்போட தேவன் சித்தம் கொண்டார். 'நீ ஏன் என்னைத் துன்பப்படுத்துகிறாய்' என்று கர்த்தர் கேட்டவுடன், பவுலைச் சுற்றி பவுலே பாதுகாப்பாய் போடப்பட்டிருந்த வேலி தகர்ந்து விழுந்தது. அவர் தன்னை தேவகரத்தில் ஒப்புக்கொடுக்கத் தயாரானார். அதனால்தான் தேவ நாமத்தினிமித்தம் சிறைவாசம் அனுபவித்த வேளையிலும்கூட, "என் எல்லாமே குப்பை" என்று அவரால் எழுதக்கூடியதாக இருந்தது. அன்றுமாத்திரம், மாயையான இவ்வுலக வேலியைத் தகர்த்தெறிய தன்னைக் கொடுத்திராவிட்டால் இன்று பவுல் என்ற ஒருவரை உலகம் அறிந்திராது.

ஏராளமான யூத வாலிபர்கள் மத்தியில் ராஜாவால் தெரிந்தெடுக்கப்பட்ட தானியேலின் நண்பர்களுக்கு எவ்வளவு பெருமை இருந்திருக்கவேண்டும். இந்த ராஜாவில் அவர்கள் தமது நம்பிக்கையையும் வைத்திருக்க வாய்ப்பிருந்தது. ஆனால் அவர்களோ தம்மைச் சுற்றிலும் மாயையான எந்தவொரு வேலியையும் இட்டுக்கொள்ளத் தயாராய் இருக்கவில்லை. தேவபிள்ளையே, நமது வாழ்வில் நாம் போட்டிருக்கிற வேலிகள் பல உண்டு. அவற்றைத் தகர்த்தெறிய நம்மால் கூடாமல் இருக்கலாம். ஆனால் தேவனால் கூடாதது எதுவுமே இல்லை. அதைத் தகர்த்துப்போட நம்மைத் தேவகரத்தில் ஒப்புக்கொடுக்கும்வரைக்கும் தேவனால் நம் வாழ்வில் எதுவுமே செய்யமுடியாது. நம்மை ஒப்புக்கொடுப்போமா!

"பிதாவே, என் வாழ்வைச் சுற்றியிருக்கும் மாயையான வேலிகளைத் தகர்த்துப் போட்டு, உமது வேலியால் அடியேனைப் பாதுகாத்துக்கொள்ளும் ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
6
செவ்வாய்

வாசிப்பு: 2தீமோத்தேயு 4:4-8

# வாழும்போதே செத்துவிடு!

"...விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்." (2தீமோத்தேயு 4:7)

நமது சாவுக்குரிய நாள் குறிக்கப்பட்டுவிட்டால் நமது மனநிலை எப்படியிருக்கும்? நாம் என்ன செய்வோம்? என்ன சொல்லுவோம்? நான் ஆண்டவரிடம் தானே போவேன் என்று இப்போது சொல்லலாம். ஆனால் உண்மையிலேயே அப்படியொரு இக்கட்டான சூழ்நிலையில் அகப்படுவோமானால், பயம் கோபம் துக்கம் ஏக்கம் என்று எல்லாவித உணர்வுகளாலும் தாக்குண்டு போவோம்.

ஆனால் இந்த மூன்று நண்பர்களும் அக்கினிமுன்பாகவும் பொல்லாத ராஜாவின் முன்பாகவும் நின்று, "நாம் ஆராதிக்கிற தேவன் நம்மை விடுவிப்பார்; விடுவியாமற்போனாலும்..." என்று எவ்வளவு தைரியமாகச் சொன்னார்கள். இப்படி சொல்ல அவர்களால் எப்படி முடிந்தது? ஒன்று, கீழ்ப்படிவு. தேவனுடைய வார்த்தையைத் தவிர வேறெதற்கும் கீழ்ப்படிவதில்லை என்ற உறுதியான மனம். இது நமக்கும் வேண்டும். இரண்டாவது, விசுவாசம். இது, கர்த்தர் நிச்சயம் விடுவிப்பார் என்ற விசுவாசம் அல்ல. விடுவியாமற்போனாலும்... அதாவது, அக்கினிக்கு வெளியேயும் தப்புவித்துக் காக்கவும் தேவன் வல்லவர்; அக்கினியின் மத்தியில் காக்கவும் தேவன் வல்லவர். உயிரோடு தப்புவது அல்ல அவர்களது நோக்கம், உயிர்விட்டுத்தான் தேவநாமம் மகிமைப்படுவது தேவனுக்குச் சித்தம் என்றால் அதற்கும் அவர்கள் தயாராயிருந்தனர். நமது விசுவாசமோ, அக்கினிக்குள் போடப்படாமல் காக்கப்படுவதிலேயே ஊசலாடும். கடைசியாக, தேவ நாம மகிமைக்காக தமது ஜீவனையும் இழக்க அவர்கள் தயாராய் இருந்தனர். இது நமக்குக் கடினம்தான். தடைகள் ஏற்படப்போகின்றது என்று கேள்விப்பட்டாலே குழம்பி தவிக்கின்ற நாம், சாவு வருகிறது என்றால் சும்மா இருப்போமா?

பவுலடியாரின் அறிக்கை மிக மேன்மையானது. தனது சாவு நெருங்கிவிட்டதை அறிந்தபின்பும், 'நான் பானபலியாக வார்க்கப்படுகிறேன்' என்று சொல்கிறார். இதிலிருந்து, ஏற்கனவே பவுல் தன்னை பலிபீடத்தில் பலியிட்டுவிட்டார் என்பது தெரிகிறது. அத்துடன், ஆண்டவர் தன்னைச் சந்தித்ததிலிருந்து கீழ்ப்படிவிலும் விசுவாசத்திலும் தான் உறுதியாயிருப்பதன் நிச்சயம் அவருக்கிருந்தது. இல்லையானால், நீதியின் கிரீடம் நீதியுள்ள நியாயாதிபதியால் தனக்குக் கொடுக்கப்படும் என்று சாவின் விளிம்பில் நின்று அவரால் சொல்ல முடிந்திருக்குமா? தேவபிள்ளையே, நமது காரியம் என்ன? விசுவாசம், கீழ்ப்படிவு, சுயத்திற்கு மரித்தல் எல்லாமே நாம் அறிந்தவைதான். அப்போது நமது அறிவுக்கும் வாழ்வுக்கும் ஏன் வித்தியாசம்? வாழும்போதே கிறிஸ்துவுக்குள் சாவதற்குக் கற்றுக்கொண்டால், அதைக் காத்துக்கொள்வோம். அதுமாத்திரமல்ல, சாவின் விளிம்பிலும் நமது விசுவாசம் ஒருபோதும் தளும்பாது.

"பிதாவே, வாழும்போதே உமக்குள் சாகவும் கிறிஸ்துவோடு உயிர்த்து கீழ்ப்படிவிலும் விசுவாசத்திலும் உறுதியாய் வளரவும் கிருபை தாரும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜுலை

7

புதன்

வாசிப்பு: மாற்கு 8:34-38

# எதை இழந்தாலும்...

'என்னிமித்தமாக.... தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதை இரட்சித்துக்கொள்ளுவான்.' (மாற்கு 8:35)

யார்தான் செத்துப்போக விரும்புவோம்? எல்லோரும் வாழும் வழியைத் தான் நாடி ஓடுகிறோம், அதில் தவறில்லை. ஆனால் நாம் நினைக்கின்றபடி இவ்வுலகில் வாழும் வாழ்வு தானா வாழ்வு? இவ்வுலக வாழ்வு ஒருநாளைக்கு முடிந்துபோவது உறுதி. சரீர மரணத்திற்கு அப்பால் அழியாத வாழ்வு ஒன்று உண்டு என்பதுவும் நிச்சயம். அந்த நித்தியத்தில் நித்தியமாக நித்தியானந்தமாக தேவனோடு வாழும் அந்த வாழ்வுக்கான ஆயத்தவாழ்வே நாம் வாழும் இந்த வாழ்வு. ஆகவே, நித்திய வாழ்வு என்ற பொக்கிஷத்தைப் பெற்றுக்கொள்வதற் காக இந்த அநித்திய வாழ்வில் நாம் எதைத்தான் இழந்துபோனால் என்ன?

'இருண்ட கண்டம்' என ஆபிரிக்கா அழைக்கப்பட்ட காலப்பகுதியில், கிறிஸ்துவின் சுவிசேஷத்தைச் சுமந்துகொண்டு, அந்த மக்களின் விடுதலையை மாத்திரமே நோக்காகக்கொண்டு தன் படிப்பு, வேலை யாவையும் விட்டுவிட்டுப் புறப்பட்டுச் சென்ற டேவிட் லிவிங்ஸ்டன் என்ற தேவஅடியானை நாம் மறக்க முடியாது. அங்கே அவர் வாழ்ந்த காலம் இலகுவானவை அல்ல. சிங்கத்தால் தாக்கப்பட்டார். ஒரு சந்தர்ப்பத்தில் அவருடைய வீடு அழிந்தது. அவரது உடல் நிலை அடிக்கடி பாதிக்கப்பட்டது, மனைவி இறந்தாள். இப்படியாக பலவித இன்னல்களை அவர் அனுபவித்தார். இந்த மிஷனரியிடம் ஒருவர், 'ஐயா, சுவிசேஷத்திற்காக நீங்கள் பல இழப்புகளைச் சந்தித்துவிட்டீர்கள்' என்றாராம். அதற்கு அவர், 'இழப்பா! கர்த்தருடைய சித்தத்திலிருந்து விலகி வாழுவதைத் தவிர ஒரு இழப்பு மனித வாழ்வில் இருக்கமுடியாது' என்றாராம். இப்படியொரு அறிக்கையை இன்று நம்மால் கூறமுடியுமா?

தானியேலின் மூன்று நண்பர்கள் வாழ்விலும் இதைத்தான் நாம் காண்கி றோம். உயிர்வாழ்வது பெரிதல்ல; தேவனோடுள்ள உறவை இழந்துபோகாமல் இருப்பதுதான் காரியம். அதற்காக இந்த உலகவாழ்வை இழந்துபோகவும் அவர்கள் தயாராயிருந்தார்கள். சரீர மரணம் என்பது சந்திக்க கடினமான ஒரு காரியம்தான். ஆனால் அதற்கும் மேலாக நமது ஆத்துமா தேவனைவிட்டுப் பிரியுமானால் அதைப்போன்ற சாபக்கேடு வேறு எதுவுமே இருக்கமுடியாது. ஆகவேதான், உன் உரிமைகளை எடுத்துக்கொண்டு வா என்று அழைக்காமல், உன் சிலுவையை எடுத்துக்கொண்டு வா என்று இயேசு அழைக்கிறார். கர்த்தருக்காகச் செய்யும் சேவைகள் பெரிதல்ல; அவருடைய நாம மகிமைக்காக எதை இழக்கிறோம் என்பதுதான் சிந்திக்கவேண்டிய விடயம். தேவனின் சித்தம் செய்வதில் இழப்புகள் வரலாம், உடற் சாவும் வரலாம். ஆனால் அதுதான் மெய்யான வாழ்வுக்கு ஒரே வாசல். நாம் எந்த வாசலில் நிற்கிறோம்?

"பிதாவே, இவ்வுலக வாழ்வில் எதை இழந்தாலும், எந்த நிலையிலும் உமது சித்தத்தை இழந்துவிடாத கிருபை எனக்கு ஈந்திடும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜுலை

**8**

வியாழன்

வாசிப்பு: தானியேல் 3:19; யோவான் 15:18-23

# மாறுபடும் முகம்

'அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினதுண்டானால், உங்களையும் துன்பப்படுத்துவார்கள்.' (யோவான் 15:20)

'என்னுடன் ஒருவர் மிகவும் அன்பாகப் பேசிக்கொண்டிருந்தார். அவரது பேச்சுக்கு நான் இணங்கவில்லை என்பது தெரிந்ததும் அவர் முகம்வேறுபட்டது. என்னை ஒரு எதிரிபோல பார்க்கத் தொடங்கினார். அவருக்குள் இப்படியொரு முகம் இருக்கும் என்று நான் நினைத்திருக்கவில்லை'. இப்படியாக ஒருவர் தன் அனுபவத்தைப் பகிர்ந்துகொண்டார். உங்களுக்கும் இந்த அனுபவம் நேரிட்டதுண்டா? அல்லது, நாமே பிறரோடு இப்படியாக நடந்து கொண்டிருக்கிறோமா? தனக்குச் சாதகமாக இருந்தால், மிக்க மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வது, எதிர்த்தால் அவரையே எதிரியாகப் பார்ப்பது. இது எதைக் குறிக்கிறது? முதலில் காட்டிய அன்பும் பாசமும் பொய் என்பதையே காட்டுகிறது.

தானியேலின் மூன்று நண்பர்களுடனும் பேசிக்கொண்டிருந்த ராஜா, இன்னொரு தருணம் கொடுக்கவும் தயாராயிருந்த ராஜா, திடீரென கடுங்கோப முற்றான். அவனுடைய முகம் வேறுபட்டது என்று வாசிக்கிறோம். காரணம் என்ன? மரணத்திலும் தங்கள் தேவனுக்கு உண்மையாயிருந்த இந்த மூன்று பேரும் அந்த ராஜாவின் பேச்சுக்கு இணங்கவில்லை என்பதே. இணங்கியிருந்தால் ராஜ மரியாதையோடு ராஜா அவர்களை விடுவித்திருப்பான். அது அவர்களுக்கு அன்று இலகுவாக இருந்திருக்கும். ஆனால் இன்றும் அவர்கள் பேசப்படத்தக்கதாக அவர்களைக் குறித்த சாட்சியை நாம் கேட்டிருப்போமா?

நாம் உலகத்தோடு ஒத்து வாழ்ந்தால் உலகம் நம்மை நிச்சயம் நேசிக்கும். இவ்வுலகில் இலகுவாக வாழ ஏதுவாயிருக்கும். ஆனால், தேவனுக்கு கீழ்ப்படியும்போது நிச்சயமாக இவ்வுலகம் நம்மைச் சும்மாவிடாது. இதுவரை நேசிக்கிறதுபோல பாசாங்கு செய்த இந்த உலகத்தின் உண்மையான முகம் அப்போதுதான் தெரியவரும். ஆண்டவர் இயேசுவுக்கும் அதுதான் நடந்தது. இவ்வுலக ராஜ்யத்திற்கு ஏற்ப அவர் வாழ்ந்திருந்தால் அவருக்கு சிலுவை கிடைத்திராது. அவர் தம் பிதாவின் சித்தத்தை நிறைவேற்ற முன்வந்ததால்தான் உலகம் அவரைச் சிலுவையில் அறைந்தது. அதனால் இயேசு தோற்றுப் போனாரா? இன்றும் வெற்றி வேந்தனாகவே ஜீவிக்கிறார். தேவபிள்ளையே, வெளிப்படையான முகங்களைப் பார்த்து ஏமாறாதே. அவர்கள் பாதை தவறு என்று கண்டு நீ விலகிப்பார், அங்கேதான் உண்மை முகத்தைக் காணமுடியும். ஆனால் அதைக் கண்டு பயப்படாதே. உலகமும் உலகத்தாரும் உன்னை எதிர்க்கிறார்கள் என்றால் நீ கர்த்தருடைய வழியில் நிற்கிறாய் என்பது தெளிவு. இறுதி வெற்றி உனக்குத்தான். ஆகவே மாறுபடும் முகங்களைக் கண்டு நீ பயப்படாதே. அவ்வாறே நீயும் இரட்டை முகத்தோடு பிறரோடு பழகாதே.

"பிதாவே, இவ்வுலகம் காட்டும் போலிமுகத்தைக் கண்டு ஏமாறாமல், எந்த நிலையிலும் உமக்கு மாத்திரமே உண்மையாயிருக்க அருள் தாரும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
9
வெள்ளி

வாசிப்பு: தானியேல் 3:19-23

# எழுபது மடங்கு....

'அந்த மூன்று புருஷரும் கட்டுண்டவர்களாய் எரிகிற அக்கினிச் சூளையின் நடுவிலே விழுந்தார்கள்.' (தானியேல் 3:23)

'சாத்ராக் மேஷாக் ஆபெத்நேகோ அக்கினியின் நடுவே விழுந்தது போல நானும் வாழ்க்கையில் வீசப்பட்டுள்ளேன்' என்று ஒருவர் கண்ணீர்விட்டார். அப்போது, உண்மையாகவே அக்கினியில் வீசப்பட்ட அந்த மூவரையும் சிந்தித்து பார்த்தேன். நம்பிக்கையற்றுப்போன நிலைமையிலும் சிலசமயம் ஒரு சிறு கீறல் நம்பிக்கை தன்னும் தோன்றலாம். ஆனால் இந்த வாலிபருடைய விடயத்திலே சூளையோ ஏழு மடங்காய் பற்றி எரியத்தொடங்கியிருந்தது. இராணுவத்திலேயே பெரிய பலசாலிகள் அவர்களைக் கட்டி, அக்கினியிலே தூக்கி வீசினார்கள். ஆனால் அவர்களோ அக்கினி சூளையின் நடுவிலே விழுந்தேவிட்டார்கள். இனி தப்புவதற்கு எந்த வழியுமில்லை, எரிந்து சாம்பலாகவேண்டியதுதான். நம்பிக்கை முற்றிலும் அழிந்துவிட்ட நிலையது.

இப்படித்தான் நமது வாழ்விலும் பல சூழ்நிலைகளுக்குள் நாம் பலவந்தமாகத் தூக்கி வீசப்படுகிறோம். எந்தவகையிலும் தப்புவதற்கு வழியில்லாதவர்களாக அழிவுக்குள் தள்ளப்படுகிறோம். நம்பிக்கை துளிர்விடவே முடியாதபடி எரிந்து சாம்பலாகிவிடக்கூடிய சூழ்நிலைகளில் எறியப்படுகிறோம். நாம் ஒரு காரியத்தை மறக்கக்கூடாது. இந்த மூன்று நண்பர்களுக்கும் இந்த நிலை ஏற்பட்டது ஏன்? அவர்கள் குற்றம் செய்தனரா? ஆம், அந்த ராஜாவின் பார்வையில் அவர்கள் செய்தது குற்றம்தான். ஆனால், தேவனுக்கு முன்பாக அவர்கள் நீதிமான்களாகவே காணப்பட்டார்கள். தம்மை விழுங்கிவிடத் துடித்துக் கொண்டிருந்த அக்கினியையும், தம்மைக் கயிறுகளால் கட்டிக்கொண்டிருந்த இராணுவ வீரரையும் பார்த்த போதாவது, அவர்கள், மனம்மாறி விடுதலைக்காக அலறியிருக்கலாம். ஆனால் அவர்களோ வாயே திறக்கவில்லை. அக்கினிச் சூளையின் நடுவே விழுந்தார்கள் இந்த தேவபிள்ளைகள்.

தேவபிள்ளையே, இன்று நீ கூட இப்படிப்பட்டதொரு சூழ்நிலையில் இருக்கலாம். அன்று தேவன் தப்புவிப்பாரா இல்லையா என்பதிலும், தேவனுக்குக் கீழ்ப்படிவதிலேயே அவர்கள் வைராக்கியமாய் இருந்தார்கள். அதன் பலன் என்ன என்பது இன்று நமக்குத் தெரியும். நெருப்பைப்போல உன் பாடுகளும் ஏழுமடங்காக பற்றி எரிய எரிய, ஒன்றை நினைவுபடுத்திக்கொள். கர்த்தருடைய வல்லமையும் எழுபது மடங்காக பலங்கொண்டு எழும்ப அதுதான் உகந்த தருணம். நீ கர்த்தருக்காக வைராக்கியம் காட்டும்போது கர்த்தர் உனக்காக தமது சர்வ·வல்லமையோடு எழும்புவார். ஏனெனில் நீ அவர் பிள்ளை. ஆகவே எந்தவித பாடுகளைக் குறித்தும் நீ பயப்படத்தேவையில்லை. கர்த்தர் கூடவே இருப்பார். ஆனால் நீ கர்த்தருடன் இருக்கிறாயா என்பதை உறுதிப்படுத்திக்கொள்.

"பிதாவே, என் வாழ்வில் அக்கினி ஏழு மடங்காய் பற்றியெரிந்தாலும், நீர் என்னுடன் இருப்பீர் என்ற நம்பிக்கைக்காய் ஸ்தோத்திரம் ஐயா. ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
10
சனி

வாசிப்பு: தானியேல் 3:23-25

## பாடுகளைக் கண்டு...

'நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய். அக்கினிஜுவாலை உன்பேரில் பற்றாது.' (ஏசாயா 43:2)

ஒரு சம்பவத்தின் உச்சக்கூட்டத்திற்கு வந்துவிட்டோம். அகங்காரத்துடன் உட்கார்ந்திருந்த ராஜா பிரமித்துப்போய் இருக்கையைவிட்டே எழுந்துவிட்டான். ஏற்கனவே, அந்த மூன்று வாலிபரையும் அக்கினியில் தூக்கிப்போட்ட இராணுவ வீரர்கள் இறந்துவிட்டனர். அப்படியே இந்த வாலிபர்களுக்கும் ஆகும் என்று இறுமாப்புடன் எதிர்பார்த்திருந்த ராஜா இப்போது இரு அதிசயங்களைக் காண்கிறான். ஒன்று, கட்டிப்போட்ட வாலிபர் கட்டுகளின்றி அக்கினிக்குள் உலாவுகிறார்கள். அடுத்து, மூன்றுபேரைப் போட இப்போது நாலுபேர் காணப்படுகிறார்கள்.

ஒரு முக்கிய விடயத்தை நாம் கவனிக்கவேண்டும். அந்த மூன்றுபேரும் அக்கினியை விலக்கியிருந்தால் இந்த அதிசயம் நடந்திருக்குமா? அவர்கள் அக்கினியை விலக்கவில்லை. தாம் ஆராதிக்கும் தேவனுக்கு தம்மை முற்றிலும் அர்ப்பணித்திருந்ததாலும், அந்த அர்ப்பணத்தினிமித்தம் ஏழு மடங்கு வெப்பம் வீசும் அக்கினிக்கும் பயப்படாமல், மூர்க்க கோபம்கொண்ட ராஜாவின் காலடியில் விழுந்து தம்மைத் தப்புவிக்க எண்ணாமல், அக்கினிக்குள் வீசப்பட தம்மை விட்டுவிட்டதாலுமே கர்த்தர் அளித்த விடுதலையை அவர்களால் அனுபவிக்க முடிந்தது. இவர்களது இந்த செயல் அந்த புறஜாதி ராஜாவையும் இருக்கையைவிட்டு எழுப்பிவிட்டது. மாத்திரமல்ல, இந்த ராஜா எப்போதாவது தேவபுத்திரனைப் பார்த்திருக்கிறானா? இல்லை. ஆனால் நாலாம் ஆளையும் பார்த்தான், அவர் தேவ புத்திரன் என்பதையும் உணர்ந்தான்.

தேவபிள்ளையே, கர்த்தர் தமது வார்த்தையில் மாறாதவர். ஏசாயா மூலம் உரைத்த வாக்கு இந்த இடத்திலே அப்படியே நிறைவேறியது. நமது நாட்டு யுத்த சூழ்நிலையில் எத்தனையோ மக்கள், தேவன் தம்மை அற்புதமாய் தப்புவித்த சாட்சிகளைப் பகிர்ந்துகொண்டனர். அப்படியிருக்கும்போது, தேவனுக்கென்று வைராக்கியமுள்ள சாட்சிகளாக, முழுஅர்ப்பணத்துடன், உலகத்தின் பயமுறுத்தலுக்குப் பயப்படாமல் நிமிர்ந்து நிற்கும்போது கர்த்தர் நம்மைக் கைவிடுவாரா? ஆனால் நாமோ அந்தளவிற்கு பரீட்சிக்கப்படுவதற்கு நம்மை விட்டுக் கொடுக்க விரும்புவதில்லை. நாம் தப்புச் செய்யாதிருக்கலாம். ஆனால் அதேசமயம் கர்த்தருக்காக வைராக்கியமாய் நிற்கவேண்டிய இடங்களையும் தவிர்த்துவிடுகிறோம். அக்கினிக்குள் விழும்வரை, நாலாம் நபரின் ஒத்தாசை கூட்டுறவு நமக்குக் கிடைக்காது. புறவின மக்களும் நமது தேவனுடைய வல்லமையைக் காணமுடியாது. பாடுகளைத் தேடிப் போகவேண்டிய அவசியமில்லை. ஆனால் பாடுகள் வந்தாலும் தேவனுக்காக நான் வைராக்கியமான சாட்சியாய் விளங்குவேனா என்பதுவே காரியம்.

"கர்த்தாவே, பாடுகளைக் கண்டு நான் பயப்படுகிறேன். எந்த நிலையிலும் உமக்கென்று வைராக்கியமாய் எழுந்து நிற்கப் பெலன் தாரும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
**11**
ஞாயிறு

வாசிப்பு: ஏசாயா 41:8-13; 2தீமோத்தேயு 3:21-17

# தேவன் நம்மோடு!

'அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்.' (2தீமோத்தேயு 3:12)

தனித்துநின்று போராடவேண்டியிருந்த தருணங்களை சந்தித்திருக்கிறீர்களா? எல்லாராலும் கைவிடப்பட்டதுபோன்ற சந்தர்ப்பங்களுக்கு முகங்கொடுத்திருக்கிறீர்களா? அந்தவேளைகளில் என்ன நடந்தது என்று சற்று அமர்ந்திருந்து சிந்திப்போமாக. கர்த்தர் நம்மைக் கைவிட்டாரா? தேவ தூதர்களைப்போல ஆட்களை அனுப்பி நமக்கு உதவி செய்தாரல்லவா? பணமின்றித் தவித்தபோது, அந்நாளிலேயே நமக்குச் சேரவேண்டிய பணம் நம் கைக்குக் கிடைக்கவில்லையா? வியாதிப்பட்டுத் தவிக்கையில் யார் யாரோ நமக்கு உதவிசெய்யவில்லையா? சிந்தித்துப் பார்ப்போமா?

நாம் தியானித்துவரும் இம் மூன்று வாலிபரின் சங்கதியில் ஒரு முக்கிய விடயத்தை நாம் மனதில் இருத்திவைத்துக்கொள்வது நல்லது. ஏனெனில் இவ்வுலக வாழ்வில் துன்பதுயரத்தையோ உபத்திரவங்களையோ தவிர்க்க முடியாது. அதிலும் கிறிஸ்துவின் வார்த்தையில் வைராக்கியமாய் தேவபக்தியோடு வாழ மனதிருந்தாலே போதுமாம்; பவுல் எழுதுகிறார், அவர்களுக்குத் துன்பம் வரும். இந்த உலகமும் பிசாசும் நம்மைச் சும்மாவிடாது. இந்த வாலிபர்கள் எந்தவிதத்திலும் தப்பிக்கொள்ள முடியாதபடி ராஜா அவர்களைக் கட்டுவித்துத்தான் அக்கினியில் போடுவித்தான். அவர்கள் அக்கினிக்குள் விழுந்தபோதுதான் அந்தக் கட்டுக்கள் அறுந்தன. அல்லேலூயா! எப்படி இது ஆனது. அவர்கள் ஆராதிக்கின்ற தேவன் அவர்களோடு கூடவே இருந்தார் என்பதுதான் உண்மை. கர்த்தர், தாம் நம்மோடுகூட இருக்கிறார் என்பதைப் பலவிதங்களில் நமக்கு உறுதிப்படுத்த எப்போதும் தயாராகவே இருக்கிறார். அப்படியாக அற்புதங்கள் நடக்கும்போது, பிறர் நம்மைப் புகழுவார்கள். பெரிய அர்ப்பணிப்பு என்று போற்றுவார்கள். ஆனால் தன் வாழ்வை உண்மையாகவே தேவமகிமைக்காக ஒப்புவித்த ஒரு தேவபிள்ளையின் அறிக்கை வித்தியாசமாகவே இருக்கும். 'இது என் அர்ப்பணம் அல்ல. கர்த்தர் என்னோடே கூட இருக்கிறார் என்பதுவே காரியம். அதனால் கிடைத்த இந்த விடுதலையை அவருடைய பிரசன்னத்தை உலகில் வேறு எதனோடும் ஒப்பிடமாட்டேன்' என்றுதான் அவன் சொல்லுவான்.

தேவபிள்ளையே, சோதனைகள் பாடுகளைக் கண்டு ஓடாமல், தேவ பெலத்தோடு, அர்ப்பணத்தோடும் வைராக்கியத்தோடும் அவற்றை எதிர்கொள்வோமாக. அக்கினிக்குள் விழத் தள்ளப்பட்டாலும், இவ்வுலக இன்பங்களையும் சலுகைகளையும் துச்சமாக எண்ணி திடமனதோடு நிற்போமாக. நிச்சயமாக பரலோகமே, நமது நிமித்தம் களிகூரும் என்று திட்டவட்டமாக நம்புவோமாக. கர்த்தர் நம்மோடு இருக்கிறார் என்பதை நாம் வாயினால் சொன்னால் போதாது, வாழ்வில் அது வெளிப்படவேண்டும். உபத்திரவங்களைக் கண்டு பயப்படவேண்டாம். தேவன் நம்மோடு இருக்கிறார். நமக்கு வெற்றி நிச்சயம்.

"பிதாவே, நமக்கு உபத்திரவமும் உண்டு, ஆனால் நீர் நம்மோடு இருக்கிறீர். இது எத்தனை ஆறுதலும் பெலனுமாயிருக்கிறது. நன்றி ஐயா. ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
12
திங்கள்

வாசிப்பு: தானியேல் 3:26-27; எபேசியர் 1:17-23

# அந்த வல்லமை

'தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே...' (எபேசியர் 1:19)

எல்லாம் முடிந்தது என்று நினைத்தபோதுதான் ஒரு மிகப் பெரிய ஆரம்பமே உண்டானது. இதுதான் நமது வாழ்வும். ஆனால் நாம் இதை நம்புவதில்லை. நமது வாழ்க்கை நாம் நினைத்தபடி அமையவேண்டும் என்பதுதான் நமது அடிமனதில் வேரூன்றியிருக்கும் ஆசை. இதனால்தான் தேவன் தமது மகத்துவமான வல்லமையை நமது வாழ்வில் விளங்கவைக்கமுடியாதிருக்கிறது. இந்த உண்மையைச் சிந்திக்கக்கூட நாம் தயாரில்லை என்பதுதான் உண்மை.

இந்த இளம் வாலிபர்களின் கதை முடிந்தது என்று ராஜா கர்ச்சித்திருப்பான். தன்னை அவமதித்தவர்களை அழித்துவிட்டதாக முழங்கியிருப்பான். அவனைப் பொறுத்தளவில் எல்லாமே முடிந்துவிட்டது. ஆனால் எல்லாமே அப்போதுதான் ஆரம்பமானது என்பது அவனுக்கு எப்படித் தெரியும்? அவனே ஆரம்பிக்கிறான். உங்கள் தேவன் தப்புவிப்பாரோ? என்று கேலி செய்தவன், தான் செய்வித்த சிலை அருகிலிருந்தபடியே, 'உன்னதமான தேவன்' என்றான். அவர்களைக் கட்டி அக்கினியில் வீசி எறியுங்கள் என்று கட்டளையிட்டவன், அவர்களின் பெயர்களையும் உச்சரித்து, 'வெளியே வாருங்கள்' என்கிறான். ஆம், அவர்களது சரீரங்கள் எரியவில்லை. தலைமயிர் கருகவில்லை. சால்வை சாம்பலாகவில்லை. நெருப்பின் வாடையே அவர்களில் வீசவில்லை. ஆனால், அவர்களைக் கட்டியிருந்த கட்டுக்கள் மாத்திரம் அறுந்துபோயின.

தேவபிள்ளையே, இவை கட்டுக்கதையல்ல. நடந்த சம்பவம். பலவித இன்னல்களால் வாழ்க்கையில் தோற்றுப்போய் வழிதெரியாது உழன்றுகொண்டு இருக்கின்ற நீ ஒரு காரியத்தை நம்பலாம். கர்த்தர் உன்னை விடுவிக்க சித்தம் கொண்டால் உன்னை யாரும் கட்டிவைக்கமுடியாது. எந்தக் கட்டும் உன்னைக் கட்டுப்படுத்த முடியாது. இந்த மூன்று வாலிபரையும் விடுவித்த அதே வல்லமை இன்று நமக்கும் விடுதலை தர விரைந்துவரும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பிய அதே வல்லமையை, அவரை விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலும் காண்பிக்க தேவன் சித்தமாயிருக்கிறார் என்பதை நாம் பூரணமாக நம்பலாம். நமது முடிவு உலகத்தின் கைகளில் இல்லை. நம் முடிவு தேவகரத்தில் இருக்கிறது. எல்லா சூழ்நிலைகளிலும் அவர் இருக்கிறார் என்று கூறுவதைவிட, சூழ்நிலைகளுக்கும் மேலாக உயர்ந்திருக்கிறார் என்பதுதான் சத்தியம். நமது வாழ்வில் நடக்கும் எல்லாக் காரியங்களுக்கும் ஒரு நித்திய நோக்கம் இருக்கிறது என்பதை விசுவாசிப்போமானால் எதுவும் நம்மைச் சேதப்படுத்தாது. ஏனெனில் நாம் நமது பிதாவின் கரங்களில் இருக்கிறோம். அவர் மகிமைப்பட நாம் நம்மை விட்டுக்கொடுக்கவேண்டாமா!

"பிதாவே, உமது வல்லமையை நான் சந்தேகித்த தருணங்களை மன்னியும். என்றும் உமது நாம மகிமைக்காக வாழ நீரே என்னை நடத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
13
செவ்வாய்

வாசிப்பு: ஏசாயா 43:8-15

# நீதான் சாட்சி!

"....நீங்களே என் சாட்சிகள். என்னைத்தவிர தேவனுண்டோ!"
(ஏசாயா 44:8)

ஒரு சகோதரி அழகாய் செய்திகொடுப்பார்கள் என்றும், அழைப்புக் கொடுக்கும்படியும் ஒரு வேண்டுகோள் வந்தது. அவருடைய வாழ்வில் சாட்சியே இல்லை, அவரை அழைக்கவேண்டாம் என்று வேறு பலர் தடுத்துவிட்டனர். அதனை உறுதிப்படுத்தியபோது, நாம் சொல்லும் சாட்சி அல்ல; நம் வாழ்க்கை யின் சாட்சியே முக்கியமானது என்பதை இன்னனொரு தடவை நினைத்துப் பார்த்தேன். நாம் சொல்லும் சாட்சிகளும் செய்திகளும் நமது வாழ்வில் உண்மையானதா? என்பதை முதலில் கவனிக்கவேண்டும். இல்லையானால் அவற்றைக் கேட்கிறவர்களிடம் அது தாக்கத்தை அல்ல, குழப்பத்தையே கொண்டுவரும். நாம் வாழுவதற்கு ஒரு அர்த்தம் வேண்டாமா?

இந்த மூன்று வாலிபரும் வாயினால் மாத்திரமல்ல வாழ்க்கையினாலும் செய்கையினாலும் தேவனுக்கென்று, அக்கினி முன்பாக சாட்சியாக நின்றார்கள். அந்த சாட்சி கொண்டுவந்த தாக்கம் இன்றும் நமது வாழ்விற்கும் பெலனாய் இருக்கிறதல்லவா! இவர்கள் தம்மை சாவுக்கு அர்ப்பணித்தனர். இவ் அர்ப்பணிப் புத்தான் அவர்களது விடுதலைக்கு வழிவகுத்தது. யூதக் குலத்தையே தலை நிமிரச்செய்தது. ராஜா ஏற்படுத்திய சிலைக்குத் தலைவணங்கிய யூதரைத் தலைகுனிய வைத்தது. கோபம்கொண்டு கர்ஜித்த ராஜாவின் வாயடைத்தது. பொல்லாத ராஜாவுக்கு தேவ புத்திரனைக் காட்டியது. எல்லாவற்றுக்கும் மேலாக, 'இவ்விதமாய் இரட்சிக்கத்தக்க தேவன் வேறொருவரும் இல்லை' என ராஜாவையே சாட்சிகூற வைத்தது. இத்தனைக்கும் காரணம், ராஜாவைக் குற்றப்படுத்தாமல், வசைச்சொற்களால் ராஜாவை வையாமல், தேவனுக்கென்று வைராக்கியமாய், பொறுமையாய், மௌனமாய், வரப்போகும் கிறிஸ்துவின் சாயலை வெளிப்படுத்தியவர்களாய் அந்த வாலிபர்கள் அக்கினியைச் சந்தித்தார்கள் என்பதுதான்.

தேவபிள்ளையே, ஆதித்திருச்சபை மக்கள் மாத்திரமல்ல, அன்றும் இன்றும் ஏராளமான தேவபிள்ளைகள் தமது ஜீவனுக்குப் பங்கம் வரும் என்று தெரிந்தும் தமது சாட்சியுள்ள வாழ்வில் பின்வாங்கிப்போகாதிருந்து தேவனுக் கென்று பெரிய காரியங்களைச் சாதித்திருக்கிறார்கள். அநேகரை காப்பாற்றியும் இருக்கிறார்கள். அப்படியிருக்க சின்ன சின்ன விடயங்களில்தன்னும் இவ்வுலகிற் குப்பயந்து நாம் பின்வாங்கிவிடுவது ஏன்? நமது அர்ப்பணம் நம்மை மட்டுமல்ல, முழு உலகையுமே அதிரவைக்க வல்லது. தேவனுக்கு முன்பாக யாவரினதும் முழங்கால்களை முடங்கவைக்கத்தக்கது. அதை உணர்ந்து இனிவரும் காலங் களிலாவது நாம் உண்மையுள்ள சாட்சிகளாக வாழுவோமாக.

"பிதாவே, உலகிற்கும் உற்றாருக்கும் பயந்து என் சாட்சியை இழந்து பின்வாங் கிப்போனதை மன்னித்து, உமது வழியில் என்னை உறுதிப்படுத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
14
புதன்

வாசிப்பு: தானியேல் 3:26-28

# பிறருக்கு சாட்சியாய்...

'அவர்கள் தங்களுடைய தேவனைத்தவிர வேறொரு தேவனையும், சேவித்துப் பணியாமல், அவரையே நம்பி, ராஜாவின் கட்டளையைத் தள்ளி.....' (தானியேல் 3:28)

ஒரு முதியவர் சில மாணவர்களுக்கு பாடம் கற்றுக்கொடுத்தார். இவரது கண்டிப்பை விரும்பாத ஒரு முரட்டு மாணவன் கையோங்கி அவரை அடித்தான். அவரோ மௌனமாக நின்றிருந்தார். அவன் தன் ஊருக்குப் புறப்பட்டுப் போய் விட்டான். பல வருடங்களுக்குப் பின்னர் அந்த ஊருக்குச் சென்ற ஒரு மிஷனரி மரணப்படுக்கையிலிருந்த அவனைப் பார்க்கும்படி அழைத்துச்செல்லப்பட்டார். மிஷனரி போனபோது, 'பல வருடங்களுக்கு முன்னர் நான் ஒரு பெரியவரை அடித்தேன். அவரது பதில்செய்கையே மெய்த்தேவனை எனக்கு உணர்த்தியது. அவர் வணங்கும் தேவனே தேவன் என்று ஏற்றுக்கொண்டேன். எனக்கு ஞானஸ்நானம் வேண்டும்' என்று கண்ணீரோடு வேண்டுதல் செய்தானாம்.

தானியேலின் நண்பரின் செய்கை நேபுகாத்நேச்சாரின் வாழ்வில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. ராஜா தனது கட்டளையைத் தானே முறித்து, வாலிபருடைய தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தினான். அவன் இந்த வாலிபரைக் குறித்துச் சொன்ன அறிக்கை மிகவும் முக்கியமானது. இந்த வாலிபர் தங்கள் தேவனைத் தவிர வேறு தேவர்களைச் சேவிக்கவில்லை என்று சொன்னான். அவரை மாத்திரமே அவர்கள் நம்பினார்கள் என்றும் ராஜாவின் கட்டளையையே தள்ளினார்கள் என்றும் வெட்கமின்றிச் சொன்னான். தங்கள் தேவன்மீது வைத்த நம்பிக்கையினிமித்தம் தங்கள் சரீரங்களையே ஒப்புக்கொடுத்தார்கள் என்றான். மாத்திரமல்ல, தேவன், தமது தூதர்களை அனுப்பித் தமது பிள்ளைகளைக் காப்பாற்றினார் என்றும் சொன்னான். அவர்களது தேவனுக்கு விரோதமாக யாரும் பேசக்கூடாது என்றான். இவ்விதமாய் இரட்சிக்க வேறொரு தேவன் இல்லை என்றான். இத்தனைக்கும் காரணம், அந்த வாலிபர் தாம் விசுவாசித்தவர் இன்னார் என்று உறுதியாய் நம்பியிருந்தார்கள் என்பதே. இவர்களது சாட்சியுள்ள அர்ப்பணம், புறஜாதியானைச் சாட்சி சொல்லவைத்தது.

தனி ஆளாக, சபையாக, கிறிஸ்தவ சமுதாயமாக நமது வாழ்வின் சாட்சி, புறவின மக்களை என்ன சாட்சி சொல்ல வைக்கிறது? மரித்துப்போன அந்த மனுஷன், முதியவரின் பொறுமையிலும் கனிவான பார்வையிலும் மெய்த் தேவனைக் கண்டான். இன்று நம்மில் மெய்த்தேவனைக் காணும்படி நமது வாழ்க்கை உள்ளதா? நமது வாழ்க்கையே நமக்குப் போராட்டமாய் இருக்கும் போது சாட்சியுள்ள வாழ்க்கையை எப்படி வாழுவது? நமது வாயினால் சொல்லும் சாட்சி அல்ல; பிறர் சாட்சி சொல்லுமளவு நமது வாழ்க்கை சாட்சியாய் இருப்பதே காரியம். அதற்கு முழுமையான அர்ப்பணம்வேண்டும். இந்த நாளில் ஒருவராவது நமது வாழ்வில் மெய்த்தேவனைக் கண்டுகொள்ளக் கூடுமோ?

"பிதாவே, என்னில் முழுமையான அர்ப்பணம் இல்லை ஐயா. என்னை உமக்குச் சாட்சியாய் நீரே நிறுத்தும். இப்போதே என்னைத் தருகிறேன். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
15
வியாழன்

வாசிப்பு: தானியேல் 3:28,29

# பிறர் காண...

"இவ்விதமாய் இரட்சிக்கத்தக்க தேவன் வேறொருவரும் இல்லையென்றான்." (தானியேல் 3:29)

'ஒரே அறையிலே ஐந்து வருடங்களாக ஒன்றாக வாழ்ந்த என் நண்பனின் வாழ்வில் 'இயேசு' என்ற இரட்சகரைக் கண்டேன்.' இந்த சாட்சியைச் சொன்ன சகோதரன் இன்று, தன் தொழிலையும் விட்டு முழுநேர ஊழியனாய், ஒரு சபைப் போதகராய் தன் சொந்த ஊரிலேயே பணிபுரிகிறார். நாம் அநேக காரியங்களைச் சொல்லலாம். மற்றவர்களும் அதைக் கேட்கலாம். கேட்பவை எல்லாமே மனதிலே படிந்துவிடும் என்று சொல்லமுடியாது. ஆனால், கண்களால் காண்பவற்றை மறப்பது கடினம் என்பதையும் மறுக்கமுடியாது.

தாங்கள் ஆராதிக்கின்ற தேவன் தங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார் என்றும், அவர் எரிகின்ற அக்கினிச் சூளைக்கும், ராஜாவின் கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார் என்றும் தானியேலின் மூன்று நண்பர்களும் உறுதியாகச் சொல்லியிருந்தார்கள். அதை ராஜா சொந்தக் காதுகளாலேயே கேட்டான். அதற்காக அதை அவன் நம்பினானா? இல்லை. பதிலுக்குக் கோபம்கொண்டவனாக, அக்கினியை ஏழுமடங்கு சூடாக்கக் கட்டளையிட்டான். தேவபிள்ளைகள் சொன்னதை அவன் நம்பவில்லை. ஆனால், எரிகின்ற சூளையில் தேவ பிள்ளைகள் போடப்பட்டதை அவன் கண்டான். அந்த அக்கினி நடுவிலே அவர்களோடு இன்னொருவரும் சேர்ந்து நால்வராக உலாவுவதை அவனே தன் கண்களால் கண்டான். அதன் பின்னர்தானே, இவ்விதமாய் இரட்சிக்கதக்க தேவன் வேறொருவர் இல்லை என்பதை அறிக்கைசெய்தான்.

தேவபிள்ளையே, நம்மைச் சுற்றிலும் வாழுகின்ற அனைவரும் மெய்த் தேவனாகிய கிறிஸ்துவை அறிந்துகொள்ளவேண்டும் என்று நீ வாஞ்சிக்கிறாயா? உன் வாஞ்சை நிறைவேற தேவன் உன்னைத்தான் அழைக்கிறார். இன்று நீ தேவனுக்காக வைராக்கியமாக நிற்கலாம், வார்த்தையின் வழியிலே உறுதியாக வாழலாம். அதைப் பார்த்து அநேகர் உன்னை எதிர்க்கலாம்; உலகத்தை அனுபவிக்கத் தெரியாத பைத்தியம் என்றும் சொல்லலாம். அது ஆச்சரியமல்ல. அப்படித்தான் உலகம் நம்மை எதிர்க்கும். ஆனால் அதே ஜனங்கள் நமது வாழ்க்கையில் தேவ வல்லமை விளங்குவதைப் பார்க்கவேண்டும், அதுவரை அவர்களுக்கு நம்புவது கடினம்தான். அதற்கு நாம் செய்யவேண்டியது என்ன? நமக்கு வருகின்ற அக்கினிபோன்ற சூழ்நிலைக்குள் தைரியமாகக் கால்வைக்க வேண்டும். நாம் கால் வைக்கும்போதுதான் தேவனும் தம் கரத்தை உயர்த்த முடியும். நம்மில் மக்கள் தேவனைக் காணவேண்டும். மக்கள் யாவரும் இயேசுவண்டை வரவேண்டும். அவரை மண்டியிட்டு வணங்கவேண்டும். அந்த ஒரே உறுதியோடு நம்மை தேவகரத்தில் ஒப்புவிப்போமா!

"ஒருவரும் கெட்டுப்போவதை விரும்பாத என் ஆண்டவரே, என் வாழ்வில் உமது வல்லமை விளங்க, நீரே என்னை எடுத்துப் பயன்படுத்தும் ஐயா. ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பு: சங்கீதம் 3:1-8

# தேவனிடமிருந்து...

"...கர்த்தாவே, நீர் என் கேடகமும், என் மகிமையும், என் தலையை உயர்த்துகிறவருமாயிருக்கிறீர்." (சங்கீதம் 3:3)

நாம் ஆண்டவரை நம்புகிறோம். அவரது வாக்குகளை விசுவாசித்து ஜெபிக்கிறோம். பல ஆவிக்குரிய அனுபவங்களைப் பெற்றிருக்கிறோம். எனினும், பிரச்சனைகள் தலைதூக்கும்போது, தேவன் நம்மைக் கைவிட்டாரோ என மனம் உடைந்துபோகிறோம். பிரச்சனையிலும் தேவன் நம் பக்கம்தான். அதை அன்று தாவீது உணர்ந்திருந்தார். அவர் அபிஷேகம் பெற்ற ராஜாவாயிருந்தும், சொந்த மகனின் பகையால் ஒளித்திருக்க வேண்டியதாயிற்று. அதற்காக அவர் ஆண்டவரைச் சந்தேகிக்கவில்லை. இக்கட்டிலும் கர்த்தரே துணை என்று நம்பினார். தலைக்கும் மேலே ஆபத்துக்கள் சூழ்ந்தாலும்கூட கர்த்தரே தன் தலையை உயர்த்துகிறவர் என்பதில் தாவீது உறுதியாயிருந்தார். ஆகவே, தன் சொந்த முயற்சியால் சிங்காசனத்தில் உட்கார முயலவில்லை. அபிஷேகம்பெற்றிருந்தும், கர்த்தர் தன்னை உயர்த்தும்வரைக்கும் காத்திருந்தார். கர்த்தர் அவரை உயர்த்தியபோது அதை யாராலும் தடுக்கவும் முடியவில்லை.

இதைத்தான் சாத்ராக், மேஷாக், ஆபத்நேகோ என்பவர்களின் வாழ்விலும் காண்கிறோம். ராஜா தமக்கு உயர் பதவி தரவேண்டுமென்று அவர்கள் விரும்பியிருந்தார்களா? அதற்காகவா தாம் அக்கினிக்குள் போடப்படுவதைத் தடுக்காதிருந்தார்கள்? இல்லை. ஆனால் ராஜா அவர்களை பாபிலோன் தேசத்திலே உயர்த்தினான். எப்படி? இந்த உயர்வு கிடைக்கமுன்னர் ஒருகாரியம் நடந்தது. அந்த வாலிபர் தங்களை சாவுக்கு ஒப்புக்கொடுத்தார்கள். இதைக் கர்த்தர் கனப்படுத்தினார். இதுதான் உயர்வின் இரகசியம்.

தேவபிள்ளையே, உயர்நிலை என்பது இன்று அநேகருடைய முக்கிய நோக்கமாகிவிட்டது. இன்று அநேகருடைய உயர்வு வந்த வேகத்திலேயே விழுந்து சரிந்தும்போகிறது. இதுதான் உலகம். ஊழியம் என்றாலென்ன, வாழ்வில் எந்த நிலையானாலென்ன, உயர்வு என்பது தேவனிடத்திலிருந்து வர வேண்டும். அப்போது அது நம்மைப் பெருமைகொள்ள விடாது. ஏன் தெரியுமா? நாம் நமக்குள் சாகும்வரைக்கும், தேவனுடைய வல்லமை நமது வாழ்வில் விளங்குவது கடினம். இந்த உலகிற்குச் சாகக் கற்றுக்கொள்கின்றவன் எந்த உயர்விலும் பெருமையடைய வாய்ப்பில்லை. ஏனெனில் அவனுக்குள் கர்த்தர் வாழுகிறார். ஆனால் அன்று அந்த வாலிபருக்கு வந்த உயர்வு இன்றைய சமுதாயத்திலே நமக்குக் கிடைக்கும் என்பது சந்தேகம்தான். கடவுள் பயம் இந்த உலகத்திற்கு எதிரான காரியம். ஆனாலும், கர்த்தருடைய ராஜ்யத்திலே நமக்கு உயர்ந்த இடத்தைக் கர்த்தர் வைத்திருக்கிறார். ஆகவே நாம் தைரியமாக இவ்வுகிற்குச் செத்து தேவனுக்கென்று வாழ முன்செல்லலாம்.

"பிதாவே, உம்மிடமிருந்து வராத எந்த உயர்வும் எனக்குத் தேவையில்லை. நீர் என் தலையை உயர்த்துகிறவர். நான் என்றும் உமக்கே சொந்தம். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
17
சனி

வாசிப்பு: தானியேல் 4:1-8

# மெய்யான இரட்சிப்பு

'இரட்சிப்பு கர்த்தருடையது.' (சங்கீதம் 3:8)

இரட்சிப்பு அல்லது மீட்பு என்பது இன்று எவ்வளவு மலிவானதாகி விட்டது! 'இரட்சிப்பு கர்த்தருடையது' (சங்கீதம் 3:8). இதை யாராலும் மாற்ற முடியாது. இன்று அநேகர் தமக்குத் தாமே கடவுள்களாக மாறுகின்றனர். அவர்கள் சொல்லுகின்ற இரட்சிப்பை தேவனுடைய இரட்சிப்போடு ஒப்பிடுவதே பாவம். மேலும், அநேகர் தாம் இரட்சிப்படைந்தோம் என்று சொல்லுவதோடு நின்றுவிடுகிறார்கள். உணர்ச்சி மேலீட்டினால் அறிக்கைசெய்து ஞானஸ்நானமும் பெற்றுவிடுகிறார்கள். ஞானஸ்நான ஆராதனையே கொண்டாட்டமாக மாறிவிடும் சந்தர்ப்பங்களும் உண்டு. இரட்சிப்பு என்பது முதலில் மனிதனுடைய அந்தரங்க ஆத்துமாவில் இரட்சகருக்கும் அவனுக்கும் இடையே ஏற்படுகின்ற ஒரு அந்த ரங்க உறவாகும். அது அவனுக்குள் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும். அவனுக்கும் அவனை இரட்சித்த இயேசு கிறிஸ்துவுக்கும் ஒரு இணையில்லா பிணைப்பில் உறுதிப்படும். அந்தப் புதிய மாற்றம் வெளிவாழ்விலே அறிவிக்கப்படுவதிலும் பார்க்க, பிறரால் கண்டுகொள்ளப்படுவதுவே அதன் மேன்மையாகும். அந்த உறவில் நாம் இணைந்திருக்கிறோமா? அல்லது நமது வாழ்வு வெறுமனே இயேசுவை அறிந்து, வெறுமனே அறிக்கை செய்த வாழ்வா?

'இவ்விதமாய் இரட்சிக்கத்தக்க வேறொரு தேவன் இல்லை' என்று பறைசாற்றிய நேபுகாத்நேச்சார் உண்மையாகவே மனந்திரும்பினானா? அந்த உண்மையான தேவனை ஏற்றுக்கொண்டானா? முன்னொரு தடவை முகங்குப் புற விழுந்து தானியேலை வணங்கி, 'உன் தேவனே தேவன்' என்று அறிக்கை செய்த இவன், இந்த அறிக்கையிலே எழுதியது என்ன? தான் கண்ட சொப்பனத் திற்கு விளக்கம் கேட்டறிய தானியேலை அழைப்பித்த அவன், 'என் தேவனு டைய நாமத்தின்படியே பெல்தெஷாத்சார் என்னும் பெயரிடப்பட்டு, பரிசுத்த தேவர்களின் ஆவியையுடைய தானியேல்...' என்று தானியேலைக் குறித்து எழுதுவதைக் கவனிக்கிறோம். அப்படியானால் முன்னர் அவன் செய்த அறிக்கை என்ன? இப்போது திரும்பவும் 'என் தேவனுடைய நாமத்தின்படியே' என்று தன் இஷ்ட தெய்வத்தைப்பற்றி எழுதியது என்ன? தேவைகள் ஏற்படும்போது ஒரு மனது, தேவை மாறியதும் இன்னொரு மனது. இதுவா மனமாற்றம்?

இன்று நம் அநேகருடைய வாழ்வும் இப்படித்தான். கஷ்டதுன்பம் ஏற்படும்போது கதறி அழுது, தேவ பாதத்தில் விழுகின்றவர்கள், வசதிகளும் சுகமும் கிடைத்துவிட்டால் யாவற்றையும் மறந்துவிடுகிறார்கள். இது இரட்சிப்பா? இன்று நாம் பெற்றுக்கொண்டிருக்கிற இரட்சிப்பு உண்மையானதுதானா? அல்லது உணர்ச்சிகளின் வடிவமா? உணர்ச்சிகள் கெட்டுப்போனாலும் உண்மை கெடாது.

"என் இரட்சகராகிய இயேசுவே, உணர்ச்சிகளுக்கு அடிமையாகாமல் என்றும் உம்மைப் பற்றி வாழும் விடுதலையின் வாழ்வைத் தாரும் ஐயா. ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
18
ஞாயிறு

வாசிப்பு: லூக்கா 18:18-30

# தடையாகும் ஐசுவரியம்

'ஐசுவரியமுள்ளவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிதாயிருக்கிறது.' (லூக்கா 18:24.)

'எல்லா மனிதரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளராயிருக்கிறார்' (2தீமோ.2:4) அப்படியிருக்க தேவன் பணம் படைத்தவர்களைத் தள்ளிவைப்பாரா? இல்லையே! பணம் பாவமா? வசதிகளோடு வாழுவது பாவமா? நாட்டின் தலைவனாய் மேன்நிலையில் வாழுவது பாவமா? இக் கேள்விகளுக்கு பதில் ஆம் என்றால், நம்மிலும் எத்தனையோ பேருக்கு பரலோகவாசம் சந்தேகத்திற்கு இடமாகிவிடும். பணமோ செல்வமோ பாவமில்லை. ஆனால், அவை நம்மிடம் எல்லாம் இருக்கிறது என்று, கடவுளின் ஒத்தாசை தேவையில்லை என்று, தேவனைத் தேடாதபடி நம்மைத் தடுத்து தூர தள்ளிப்போடும் அபாயத்தை அது ஏற்படுத்திவிடுகிறது என்பதை மறுக்கமுடியாது. பணம் இல்லாதவரைக்கும் சரிதான்; ஆனால் அது சேரத் தொடங்குமானால், அதனாலுண்டாகும் ஆசை நம்மைச் சும்மாவிடாது. பணம் அதிகரிக்க தேவைகளும் அதிகரிக்கும். அது நம்மைக் கேட்டுக்கு இட்டுச் செல்லக்கூடும்.

நேபுகாத்நேச்சாருக்கு, உன்னதமான தேவனைக்குறித்த அடையாளம் நன்றாயிருந்தது. அந்த வாலிபரின் தேவன் உன்னதமானவர்தான் என்பதுவும் தெரிந்திருந்தது. மற்றவர்களுக்கு அதை எழுதி பெருமை சேர்க்கவும் அவனுக்கு தெரிந்திருந்தது. ஆனால் அந்த உன்னத தேவனைத் தன் சொந்த தேவனாக ஏற்றுக்கொள்ள அவனால் முடியவில்லை. 'சவுக்கியமாய் அரண்மனையிலே சுகமாக வாழுந்துகொண்டிருக்கும் ஒருவன்' என்று அவன் தன்னைக் குறித்தே எழுதினான். ஆம், அவனுக்கு எல்லாச் செழிப்பும் இருந்தது. தேவை ஏற்படும் போது மாத்திரம் தானியேலின் தேவன் தேவை. பின்னர் தன் தேவர்களிடம் திரும்பிவிடுவான். பூமியெங்குமுள்ள ஜனத்திற்கு ஒட்டுமொத்தமாக எழுதுமளவுக்கு அதிகாரம் கொண்டிருந்த அவன் மாத்திரம் உண்மையாகவே மெய்த் தேவனுக்குத் தன் வாழ்வை முற்றாய் கொடுத்திருப்பானானால், அன்றைய சூழ்நிலையில், அவன் ஆட்சிக்குட்பட்ட அத்தனை ஜனங்களும் அந்த மெய்த் தேவனை அனுபவித்திருப்பார்கள்.

வசதி சுகத்தோடு வாழ்ந்துகொண்டு, தேவனுடைய கிருபையை இழந்துவிடாதிருப்போமாக. நாம் மேன்நிலையிலோ பண வசதியுள்ளவர்களாகவோ இருக்கலாம். அதுவும் தேவன் அருளிய ஈவுதானே. அவற்றை தேவ நாமத்திற்கென்று ஒப்புவிப்போமானால் நம்மைக் கொண்டும் தேவன் பெரிய காரியம் செய்யக்கூடும்? சொத்து சுகம் தேவனைவிட்டு நம்மைத் தள்ளிவிடாதபடி, அன்று இயேசுவைவிட்டு துயரத்தோடு போய்விட்ட பணக்காரன் நிலை நமக்கு வராதபடி, சகலத்தையும் தேவனின் சித்தத்திற்குள் ஒப்புவித்துவிடுவோமாக.

"பிதாவே, உம்மிடம் கிருபையாய் பெற்ற வாழ்வின் வளங்களினால் உம்மிடம் நான் நெருங்க தடைவந்துவிடாதபடி என்னைக் காத்தருளும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
**19**
திங்கள்

வாசிப்பு: தானியேல் 4:10-17; 1கொரி.10:5-11

# முன்எச்சரிப்பு

உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாகும்படி எழுதப்பட்டும் இருக்கிறது. (1கொரிந்தியர் 10:11)

மழைக்கு முந்திய மந்தாரமும், பஞ்சத்திற்கு முந்திய வரட்சியும் இயற்கை தரும் எச்சரிப்புக்களே. தொடாதே சுடும்! என்றும், குடி குடியைக் கெடுக்கும்! என்றும் அன்றாடம் எத்தனை முன்னெச்சரிப்புகள். சில இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுகிறது என்றாலும், அவற்றுக்கும் சில முன்எச்சரிப்புகள் இருக்கத்தான் செய்கின்றன. இப்படியாக நாம் எச்சரிக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறோம். அந்த எச்சரிப்புக்களுக்கு நாம் எவ்வளவாய் செவிகொடுக்கிறோம்? கீழ்ப்படிகிறோம்? வாழ்வைக் குறித்தும், வாழ்வின் முடிவைக் குறித்தும் எத்தனை எச்சரிப்புகள்! இரண்டாம் வருகை, நியாயத்தீர்ப்பு, நித்திய வாழ்வு எல்லாவற்றைக் குறித்தும் எச்சரிக்கப்பட்டிருக்கிறோம். அத்தோடு, முன்னோரின் வாழ்வு, அவர்களுக்கு நேர்ந்தவைகளைக்கூட எச்சரிப்பாக தேவன் எழுதிவைத்துள்ளார். அப்படியிருந்தும் நாம் எவ்வளவுதூரம் தேவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறோம்?

அன்று நோவா காலத்தில், தேவன் எச்சரிப்புக் கொடுத்தார்; எட்டுப்பேர் தான் காப்பாற்றப்பட்டார்கள். பார்வோனுக்கும் தேவன் எச்சரிப்புக் கொடுத்தார். எகிப்தில் எத்தனை மூத்த ஆண்பிள்ளைகள் காப்பாற்றப்பட்டார்கள்? கடைசிக் காலத்திற்கும் தேவன் எச்சரிப்புக் கொடுத்துள்ளார். எத்தனைபேர் எடுத்துக் கொள்ளப்படப்போகிறோம்? மொத்தத்தில் தேவன் முன்எச்சரிப்பின்றி எதுவும் செய்யவுமில்லை, செய்யப்போவதுமில்லை. நமது வாழ்வின் தேவைகளுக்கான எதையாவது தமது வார்த்தையில் கொடுக்காமல் விட்டிருக்கிறாரா? நேபுகாத்நேச்சார் ஒரு புறவின மனிதனாய் இருந்தும், தேவன் அவனையும் சொப்பனம் மூலமாக எச்சரித்தார். சொப்பனத்தில் அவனுடைய செழிப்பைக் காட்டிய தேவன், அவனுக்கு வரப்போகிற வீழ்ச்சியையும் வெளிப்படுத்தினார். அச் சொப்பனத்தில் வானபரியந்தம் புகழ் ஈட்டிய ராஜாவும் அவனே; மனுஷரிலிருந்து தள்ளிவிடப் படுகிறவனும் அவனே; உன்னதமான தேவனே மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகைசெய்து தமக்குச் சித்தமானவனுக்கு அதைக் கொடுக்கிறார் என்பதை அவன் அறியுமட்டும் இந்தத் தண்டனை தொடரும் என்று தானியேலும், ராஜா கண்ட சொப்பனத்திற்கு விளக்கம் சொல்லிவிட்டார். இதைவிட வேறென்ன எச்சரிப்பு வேண்டும் அந்த ராஜாவுக்கு! ஆனால் நடந்தது என்ன? இதைக் கேட்டு அவன் மனந்திரும்பினானா? விழிப்பாயிருந்தானா? இல்லை.

தேவபிள்ளையே, தேவன் நம்மை நேசிக்கிறார். நம்மை வேதனைப் படுத்த அல்ல; நாம் தம்மண்டை சேரவேண்டுமென்பதற்காகவே கட்டளைகளை எச்சரிப்புகளைத் தந்திருக்கிறார். கீழ்ப்படியாமையின் தீமையையும் கீழ்ப்படிவின் நன்மையையும்கூட அறியத் தந்திருக்கிறார். இதன்பின்னும் இருதய கடினம் ஏன்?

“பிதாவே, தேவையான எதையும் மறைக்காமல் எல்லாவற்றையும் வெளிப்படுத்தி யிருக்கிறீர். கீழ்ப்படிந்து வாழ்ந்து உம்மண்டை வர கிருபை தாரும். ஆமென்.”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
20
செவ்வாய்

வாசிப்பு: மாற்கு 13:11; 1கொரிந்தியர் 2:9-13

# வெளிப்பாடு

'நீயோ இதைத் தெரிவிக்கத்தக்கவன். பரிசுத்த தேவர்களுடைய ஆவி உனக்குள் இருக்கிறதே....' (தானியேல் 4:18)

'இந்த நாட்களிலே என்ன வெளிப்பாடு கிடைத்தது?' பலர் கேட்கின்ற கேள்வி இது. பரிசுத்த வேதாகமத்திலே இல்லாத என்ன புதிய வெளிப்பாடு நமக்கு வேண்டும்? இன்று கள்ளப்போதனைகள், வஞ்சகங்களைக் கண்டறியத் தக்க வெளிப்பாடுதான் நமக்கு அவசியம். அவற்றைப் பகுத்தறிந்து விழிப்புடன் ஜெபித்திருக்க தேவனிடம் பெலன் கேட்போமாக. இந்நாட்களில் வெளிப்பாடுகள் கேட்பதில் கிறிஸ்தவ மக்கள் காட்டும் ஆர்வம் அதிகரித்து வருகிறது. இவர்கள் யாரிடம் வெளிப்பாடு கேட்கப் போகிறார்கள்? யார் யார் தேவனோடு நல்லுறவில் இருக்கிறார்கள் என்று தாங்கள் நினைக்கிறார்களோ அவர்களிடம்தான் போகின்றார்கள். இந்த இடத்தில்தான் தவறுகள் நேரிடுகின்றன. தேவபிள்ளையே, நீ தேவனோடு நல்லுறவில் இருப்பதைக் கண்டு யாரும் உன்னை நாடி வந்தால், தேவையற்ற காரியங்களைவிட்டு, இக் கடைசிக் காலத்தில் தேவன் எச்சரிக்கும் செய்திகளை வெளிப்படையாக பயமின்றி சொல்ல நீ ஒருபோதும் தயங்காதே.

அடுத்தது, அதிகாரங்கள் முன்னிலையிலும், ஆட்சியாளர் முன்னிலையிலும் உன்னை சாட்சியாக நிறுத்த தேவன் காத்திருக்கிறார். அந்தவேளையிலே நீயல்ல; தேவஆவியானவர்தாமே உனக்குள் இருந்து பேசுவார். சத்தியத்தை அறியாத அவர்களுக்கு அது வெளிப்பாடாகத்தான் வெளிப்படுகிறது. தானியேலுக்கு நடந்ததும் அதுதான். முதற் தடவையும் ராஜாவின் சொப்பனத்திற்கு தானியேல்தான் அர்த்தம் சொன்னார். இந்தத் தடவையும் ராஜா தானியேலையே நாடினான். ராஜாவின் முன்னிலையில் பயமின்றி பேசும் கிருபை வரத்தையும், சொப்பனத்தின் வெளிப்பாட்டையும், தேவன் தானியேலுக்குத்தான் கொடுத்திருந்தார். தானியேல் அதைக்கொண்டு பணம் புகழ் சேர்த்தாரா? தன்னைத் தானே உயர்த்தினாரா? மாறாக, வானபரியந்தம் புகழடைந்த ராஜாவுக்கு சவாலாக நின்றிருந்தார் தானியேல். தேவனுடைய கர்த்தத்துவத்தின் சாட்சியாக நின்றிருந்தார். ராஜ்யங்களும் ராஜாக்களும் அதிரத்தக்கதாக நின்றிருந்தார்.

தேவபிள்ளையே, ஆண்டவர் உனக்கு சில விசேஷித்த கிருபையை அளித்திருக்கக்கூடும். அவை உன்னையல்ல; தேவனுடைய மகத்துவத்தை உயர்த்துவதற்காகவே கொடுக்கப்படுகிறது. சத்தியம் தேவனுடையது. வெளிப்பாடுகளும் அவருக்கே உரியது. சத்தியத்தை சத்தியமாக வெளிப்படுத்தும் கிருபையை தேவன் நம்மிடமே தந்திருக்கிறார். அதை வைத்து உனக்குப் புகழ் தேட முயலாதே. மாறாக, யார் முன்னிலையிலும் சத்தியத்தை சத்தியமாக வெளிப்படுத்தவோ, சத்தியத்திற்குப் புறம்பானதைக் கண்டிக்கவோ தயங்காதே. கர்த்தர் உனக்குள்ளே வாசம் பண்ணுகின்றாரே!

"பிதாவே, எந்த அதிகாரமோ, எந்த மனுஷனோ, யார் முன்னும் சத்தியத்தை சத்தியமாகப் பேச எனக்கு உமதாவியின் கிருபைவரம் தாரும் ஐயா. ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
21
புதன்

வாசிப்பு: நீதிமொழிகள் 24:17,18; தானியேல் 4:19

# மன்னிக்கும் இதயம்

'உன் சத்துரு விழும்போது சந்தோஷப்படாதே. அவன் இடறும்போது உன் இருதயம் களிகூராதிருப்பதாக.' (நீதிமொழிகள் 24:17).

'நானும் என் குடும்பமும் துக்கப்படுத்தப்பட்டபோது நமக்கு உதவ யாரும் முன்வரவில்லை. இப்போது நம்மைத் துக்கப்படுத்தினவனுக்குத் துக்கம் வந்திருக்கும்போது அவனுக்கு உதவிசெய்ய நம்மைத் தவிர யாருமில்லை. கடவுளுக்காகத்தன்னும் அதைச் செய்யத்தானே வேண்டும்' பெருமூச்சுடன் கூடிய இப்படிப்பட்ட பேச்சுக்களைக் கேட்டிருக்கலாம். சிலசமயங்களிலே நாமும்கூடச் சொல்லியிருக்கலாம். நமக்குத் தீமை செய்தவர்கள் என்று நாம் எண்ணுகிறவர்களுக்குத் தீமை ஏற்படுவதைக் காணும்போது நமது மனநிலை எப்படியிருக்கிறது? அவர்களது விழுகையில், உணர்வுகளை வெளிக்காட்டாவிட்டாலும், மனதளவிலாவது சிலசமயங்களில் 'இவர்களுக்கு இது வேண்டும்' என்பதுபோல் நடந்துகொள்கிறோம். அவர்களது கஷ்டத்தில் பங்கெடுக்காமல் ஒதுங்கிவிடுகிறோம். இந்த இருதயத்தைத் தேவன் காண்கிறார் என்றும் அது அவர் பார்வைக்குப் பொல்லாப்பானது என்றும் வேதம் நம்மை எச்சரிக்கிறது.

தானியேலின் சொந்த இடத்தை அழித்து, குடும்பத்தைவிட்டுப் பிரித்து, சிறைப்பிடித்து, வெகுதூரத்திலுள்ள பாபிலோனுக்குக் கொண்டுவந்து, இப்படியாக பல தீமைகள் செய்த இந்த ராஜாவுக்கு ஒரு தீமை வரப்போகிறதை தானியேல் தெரிந்துகொண்டார். நான் அந்த இடத்தில் இருந்தால், இவனுக்கு நன்றாய் வேண்டும் என்றும், இப்பொழுதும் இவன் சொப்பனத்திற்கு வெளிப்பாடு சொல்ல நான்தானே இவனுக்குத் தேவை என்றும், கடவுளின் பிள்ளை என்னைத் துக்கப்படுத்தினால் கடவுள் இவனைத் துக்கப்படுத்துவார் என்பதை இப்பொழுதாவது இவன் உணரட்டும் என்றும் சொல்லியிருப்பேனோ? ஆனால் தானியேல், ராஜாவின் சொப்பனத்திற்கு அர்த்தத்தை தெரிந்துகொண்டதும் ஒருகணம் திகைத்தார். சிந்தித்து கலங்கினார். 'உம்முடைய பகைவரிடத்திலும்கூட அந்த சொப்பனம் பலிக்கக்கூடாது' என்று தானியேல் சொன்னாரே, அவரது மன்னிப்பின் உண்மையான உள்ளமும், எதிரியானாலும் எஜமான் என்பதால் ராஜாவின் மீது அவர் கொண்டிருந்த கரிசனையும் இங்கே பிரதிபலிக்கிறதல்லவா!

நம்மால் இது கூடுமா? மன்னிப்பு என்பது கடந்தவற்றை நமக்குப் பின்னால் விட்டுவிடுவது. மறப்பது என்பது பழி உணர்வோ, கரிசனையற்ற மனதோ இல்லாதிருப்பது. இவை நம்மிடம் இல்லாததால்தான் நம்மில் அநேகரை தேவன் தமது நாமத்திற்கென்று எடுத்துப் பாவிக்க முடியாதிருக்கிறார். இந்நாளில் நமக்குத் தீமைசெய்து இதுவரை மன்னிக்கமுடியாதிருக்கிற யாராவது இருந்தால் அவர்களை மன்னித்து உண்மையான அன்பை வெளிப்படுத்துவோமாக. தேவன் நம்மில் மகிழ்ந்திருந்தால் அதுதான் நமக்கு மெய்யான மகிழ்ச்சி.

"பிதாவே, மன்னிக்கவோ மறக்கவோ முடியாதிருக்கிற என் மனதை மாற்றி, உமது அன்பினால் அடியேனை நிரப்பி, என்னை வழிநடத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜுலை
22
வியாழன்

வாசிப்பு: 1கொரிந்தியர் 1:24-31

# நீ பலவீனனா?

**'உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்துகொண்டார்.' (1கொரிந்தியர் 1:28)**

'நான் இறையியல் படிக்கவில்லை. படிக்க முயற்சி செய்தும் முடிய வில்லை. சபையில் படித்து பெற்றுக்கொள்ளக்கூடிய சாதாரண அருளுரையாளர் பத்திரம்கூட என்னிடம் இல்லை. எதுவித தகுதியும் எனக்கில்லை. நான் ஒரு உதவாக்கரை' இப்படியாக தனக்குள் புழுங்கித் தவித்த ஒரு தேவபிள்ளை இன்று கர்த்தரால் அற்புதமாகப் பாவிக்கப்படுவதை நான் அறிவேன். படிப்பு அவசியந் தான்; உலகத்தில் வேலை செய்ய சில பத்திரங்களும் அவசியந்தான். ஆனால் இவை இல்லாதவிடத்தும் தேவன் உங்களை எடுத்துப் பாவிக்க வல்லவர். உலகத்தின் கணிப்பில் பைத்தியமானவைகள், பலவீனமானவைகள், இழிவான வைகள், அற்பமாய் எண்ணப்பட்டவைகள், இல்லாதவைகள், இவைகளில் யாராகவாவது நாம் இருக்கிறோமா? இருக்கட்டும். ஆனால், நாம் ஒன்றுக்கும் உதவாதவர்கள், தகுதியற்றவர்கள் என்கிற எண்ணம் நமக்குள் வேரூன்ற இடமளிப்போமானால் நம்மைக் கொன்றுபோட அது போதும்.

ஜோன் வெஸ்லி ஐயரின் வாழ்வின் நடந்த ஒரு சம்பவம் இது. பெரிய சர்வகலாசாலையில் இறையியல் படித்துக்கொண்டிருந்த வெஸ்லி அவர்கள், அங்கே பணிபுரியும் ஒரு வேலையாளைச் சந்தித்தாராம். மாற்றுடைகூட இல்லாத நிலையில், அன்றாட உணவுக்கே அல்லலப்படும் அவன் வெறும் நீரைக் குடித்து விட்டும் ஆண்டவருக்கு நன்றி செலுத்தினதைக் கண்டாராம். இது எப்படி என்று வெஸ்லி அவர்கள் கேட்டபோது, 'ஆண்டவர் எனக்கு ஜீவன் தந்தார். அவரை நேசிக்கும் இதயம் தந்தார். அவருக்கு சேவை செய்யும் மனதைத் தந்தார். இது போதாதா நான் ஆண்டவரைத் துதிக்க?' என்று பதிலளித்தானாம் அந்த வேலையாள். இது வெஸ்லி அவர்களின் இருதயத்தை உலுப்பியதாம்.

தானியேலின் தகுதி தராதரம் நாம் அறியோம். ஆனால் அவர் இப்போ ஒரு சிறைக்கைதி. அவரால் சுயமாக எதுவும் செய்யமுடியாது. அப்படிப்பட்ட ஒருவரைக்கொண்டே, பலவானும் உலகமே நடுங்குகிறவனுமாகிய நேபுகாத் நேச்சார் என்ற அரசனை தேவன் கலங்கடித்தார். ஞானிகளும் செல்வந்தரும் அறிவாளிகளும் பாபிலோனிலே இருந்தும், ராஜாவுக்கு, தன் வேலையாளாகிய தானியேல்தான் தேவைப்பட்டார். இது எப்படி? இது தேவனாலே மட்டுமே ஆனது. தேவபிள்ளையே, நீ இழிவானவன், பெலவீனமானவன் என்று உலகம் சொன்னா லும், உன்னைக் குறித்து அப்படிப்பட்ட தாழ்வுமனப்பான்மை நீ கொள்ளாதே. நீ தேவனை நம்பினால், அவர் வழி நின்றால், உன்னைக் கொண்டே ராஜ்யங்க ளையும் அதிபதிகளையும் அவரால் அசைக்கமுடியும். நீ சாதாரணமானவன் இல்லையே! நீ தேவனால் தெரிந்தெடுக்கப்பட்ட பிள்ளை என்பதை மறவாதே.

"பிதாவே, உலகம் என்னைப் புறக்கணித்தாலும் நீர் என்மீது நோக்கமாயிருக்கி றீர், இது எனக்கு எவ்வளவு ஆனந்தமாயிருக்கிறது ஐயா. ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை

23

வெள்ளி

வாசிப்பு: எசேக்கியேல் 3:17-21; 1தீமோத்தேயு 1:6-8

# பயம் வேண்டாம்!

"தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்." (2தீமோத்தேயு 1:7)

பிறர்மீது அன்பும் கரிசனையும் இருப்பது மெய்யென்றால் தேவையான நேரங்களில் தேவையானதை அவர்களுக்கு எடுத்துச் சொல்ல நமக்கு ஏன் தயக்கம்? 'நான் ஜெபிக்கிறேன், ஆனால் நேரிலே பேசி பகையை வளர்க்க நான் விரும்பவில்லை' என்று நாம் அநேகந் தடவைகளில் தட்டிக்கழிக்கிறோம். இதன் உண்மை நிலை என்னவெனில் நமக்குள் 'பயம்' இருக்கிறது என்பதுதான்.

'நீர் மாடுகளைப்போல புல்லை மேய்ந்து ஆகாயத்துப் பனியிலே நனைவீர்' என்று ஒரு ராஜாவைப் பார்த்துச் சொல்லுவது என்பது இலகுவான காரியம் அல்ல. இது தானியேலுக்கு உயிராபத்தைக் கொண்டுவரக்கூடிய சந்தர்ப்பம். ஆனால் தானியேலோ உண்மையாகவே ராஜாமீது அன்பும் கரிசனையும் கொண்டிருந்தார். ஆகையினாலே தனக்கு நேரிடும் தீங்கைக் குறித்தல்ல, ராஜாவைக் குறித்ததான மனப்பாரத்துடன் சொப்பனத்தின் விளக்கத்தைப் பயமின்றி சொன்னார். அதற்காக ராஜா தானியேலைத் தண்டித்தாரா?

சத்தியத்தை சத்தியமாய் சொல்ல நாம் ஏன் பின்நிற்கிறோம்? ஏனெனில் நமக்குள் இருக்கும் பயம்தான் காரணம். 'சாகவே சாவாய் என்று நான் துன்மார்க்கனுக்குச் சொல்லுகையில், ....நீ அவனை எச்சரிக்காமலும் இருந்தால், அந்தத் துன்மார்க்கன் சாவான். அவன் இரத்தப்பழியையோ உன் கையிலே கேட்பேன்' (எசே.3:18). நீதிமான் தன் நீதியைவிட்டுத் திரும்பி நீதிகேடு செய்யும் போதும், .....நீ அவனை எச்சரிக்காவிட்டால், அவன் சாகும்போதும் அவனது இரத்தப்பழியையும் உன் கையிலே கேட்பேன் என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார். இப்படியிருக்க நாம் பயந்திருப்பது எப்படி? 'கர்த்தருக்குப் பயப்படுகிறவனுக்குத் திடநம்பிக்கை உண்டு; அவன் பிள்ளைகளுக்கும் அடைக்கலம் கிடைக்கும்' (நீதி.14:26) இதைத்தான் அன்று பவுலும் தீமோத்தேயுவுக்கு வலியுறுத்தி எழுதினார். தேவன் நமக்குப் பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியைத் தந்திருக்கிறார். அந்த ஆவியை நாம் அவித்துப்போடலாமா? உண்மைதான், சத்தியத்தைச் சொன்னால், மனந்திரும்பாவிட்டால் அழிவு என்று சொன்னால், தவறுகளை எடுத்துச் சொன்னால், உலக இன்பத்தில் சுகித்திருக்கிற மக்கள் நமக்கு எதிராக எழும்புவார்கள். ஆனால், அதற்காக இவ்வுலகிற்கு நாம் பயப்படத்தேவையில்லை. நமது ஆத்துமாவைத் தொட வல்ல தேவனுக்கன்றி நாம் ஏன் யாருக்கும் பயப்படவேண்டும்? நம்முடைய கர்த்தரைப் பற்றிய சாட்சியைக் குறித்து வெட்கப்படாமல் தைரியமாகப் பேசலாமே. தானியேல் எப்படி தைரியமாக ராஜாவுடன் பேசினார்? அதே கர்த்தருடைய ஆவி உனக்குள்ளும் இருக்கிறார் என்றால் பயத்தை நீக்கிவிட்டு தைரியமாக எழுந்துநில். கர்த்தர் பேசுவார்.

"பிதாவே, எனக்குள் இருக்கும் பயத்தின் ஆவியை நான் இனங்கண்டு அகற்றிப் போட்டு, தைரியமாக உமது செய்தியைச் சொல்ல கிருபையாயிரும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
24
சனி



# பெருமை அழியட்டும்!

'அவருடைய கிரியைகளெல்லாம் சத்தியமும், அவருடைய வழிகள் நியாயமுமானவைகள். அகந்தையாய் நடக்கிறவர்களைத் தாழ்த்த அவராலே ஆகும்.' (தானியேல் 4:37)

நேபுகாத்நேச்சாரின் சம்பவம் இந்த நான்காம் அதிகாரத்துடன் முடிந்தது. ஆனால் அவன் செய்த கடைசி அறிக்கை இன்றும் ஜீவனுள்ளதாயிருக்கிறது. மிருகங்ளோடு சஞ்சரித்திருந்த அவனுடைய கண்கள் திறந்து புத்தி திரும்பி வந்த போது, அவன் தேவனைத் துதித்தான். தனக்கு நேர்ந்த அந்த அவமானத்தைக் குறித்து அவன் ஆத்திரமடையவில்லை. தேவனுடைய நீதியான செயல்களை உணர்ந்தான். கர்த்தருடைய வழிகள் நியாயமானவையே என்பதை ஏற்றுக் கொண்டான். மாத்திரமல்ல, அவன் தன்னையும் உணர்ந்தான். பெருமைக்கும் அகந்தைக்கும் தேவன் எவ்வளவாக எதிர்த்து நிற்கிறவர் என்றும், அவரை எதிர்த்து நிற்க யாராலும் கூடாது என்பதையும் உணர்ந்தான்.

இவன் ஒரு பலவானாக இருந்தும், பல வெற்றிகள் ஈட்டிய ராஜாவாக இருந்தும் அவனிடத்திலும் பல பலவீனங்கள் காணப்பட்டன. அப் பலவீனங்களே அவனது தோல்விக்குக் காரணமாயிற்று. முதலாவது, அவன் தன்னைத்தானே உயர்த்தி, வணங்கப்படுவதற்காக சிலையையும் செய்வித்தான். தன்னை யாரும் மிஞ்சிவிடக்கூடாது என்ற பயம் அவனுக்குள் இருந்ததால்தான் இப்படி செய்தான். ஏழு மடங்கு சூடேற்றப்பட்ட அக்கினி முன்பாக அவன் தோற்றுப்போனான். அடுத்தது, அவனுக்குள் குடிகொண்டிருந்த பெருமை, தன் கண் காண்கின்ற யாவும் தன்னுடையது என்று எண்ணவைத்தது. ஒரு நொடிப்பொழுதிலே அது அவனை விழுத்திப்போட்டது. மேலும், கடவுள் தமது வல்லமையை பலவிதங்க ளில் அவனுக்கு வெளிப்படுத்தியும், அவற்றுக்கு அவன் நேர்முக சாட்சியாக இருந்தும் அடிக்கடி அதை அவன் மறந்துபோனான். அது அவனை மிருகங்க ளுடன் சஞ்சரிக்க வைத்தது.

'கர்த்தருடைய செய்கையெல்லாம் சத்தியமுமாயிருக்கிறது' (சங்.33:4) என்று சங்கீதக்காரன் பாடியுள்ளார். 'இருதய சிந்தையில் அகந்தையுள்ளவர் களைச் சிதறடித்தார். பலவான்களை ஆசனங்களிலிருந்து தள்ளி, தாழ்மையுள்ள வர்களை உயர்த்தினார்' என்று மரியாள் பாடினார். (லூக்கா 1:52) இந்த தேவன் முன்னே நிற்கத்தக்கவன் யார்? நேபுகாத்நேச்சாரின் வாழ்விலிருந்து இரு பெரிய உண்மைகளை நாம் கற்றுக்கொள்கிறோம். ஒன்று, கடவுளைக் கடவுளாகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொண்டு கீழ்ப்படிந்து நடக்காவிட்டால் வாழ்வின் பெரிய பாக்கியத்தை நாம் இழந்துவிடுவது உறுதி. அடுத்தது, கட்டுக்கடங்காத பெருமை அழிவுக்குள் நம்மை இட்டுச்செல்லும். தானியேலுக்குள் இருந்த தாழ்மை எப்படி அவரை உயர்த்தியது என்பதையும், ராஜாவுக்குள் இருந்த பெருமை எப்படி அவனை அழிவுக்கு நடத்தியது என்பதையும் சிந்திப்போமாக.

"பிதாவே, உமது ஆளுகைக்குள் கீழ்ப்படிந்திருக்கவும், என்னை அழித்துவிடும் பெருமையிலிருந்து பூரண விடுதலை பெறவும், என்னை நடத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
25
ஞாயிறு

வாசிப்பு: எபேசியர் 3:7-13

# திடநம்பிக்கை

'(நீதிமான்) துர்ச்செய்தியைக் கேட்கிறதினால் பயப்படான். அவன் இருதயம் கர்த்தரை நம்பித் திடனாயிருக்கும்.' (சங்கீதம் 112:7)

உண்மைவழி நடக்கின்ற உத்தமனுக்கு என்றும் கர்த்தர் துணை என்று பாடுகின்ற நாம், கர்த்தரே நமக்குத் துணை என்பதனை விசுவாசிக்கிறோமா? கர்த்தருக்குப் பயப்படுகிறவனுக்குத் திடநம்பிக்கை உண்டு (நீதி.14:26). இது சாதாரண நம்பிக்கை அல்ல; அசைக்கமுடியாத திடநம்பிக்கை. இது வாழ்விலும் தாழ்விலும், மரணத்திலும்கூட நம்மைத் தலைநிமிர்ந்து நிற்க வைக்கும். எந்த உறவும், நம்மை நாடி வரும் எந்த உயர்வும் இதனைத் திசைதிருப்ப முடியாது.

இந்த திடநம்பிக்கையைத்தான் சாத்ராக், மேஷாக், ஆபெத்நேகோ என்பவர்கள் வாழ்விலும் காண்கிறோம். சந்தோஷத்திலும் துக்கத்திலும் சுத்த மனதோடே ஒருவரோடொருவர் இணைந்து நின்ற உத்தமமான நண்பர்கள் இவர்கள். இந்த நட்பு, தேவனோடு அவர்களுக்கிருந்த உறுதியான பற்றுதலைக் குலைத்துப்போட அவர்கள் இடமளிக்கவில்லை. குற்றவாளிகளாக நிறுத்தப்பட்ட போதும், வெற்றிகள் தோல்விகள் பதவிகள் வந்தபோதுகூட அவர்களுக்குள் வேற்று நினைவுகள் வந்ததில்லை. எல்லா நிலையிலும் ஒரேமனதாயிருந்தார்களே, எப்படி? இதுதான் கர்த்தருக்குள்ளான உண்மையான நட்புறவு. தேவனோடுள்ள உறவை பிரித்துப்போடாமல், உலக சோதனைகளில் தாமும் பிரிந்துவிடாமல், சந்தோஷ வாழ்விலும், அநியாய குற்றச்சாட்டிலும் சாவிலும்கூட ஒருவரையொருவர் காட்டிக்கொடுத்துத் தப்பிவிடாமல், கர்த்தருக்காக ஒன்றாகக் கட்டப்பட்டார்களே, எப்படி? இதுதான் கர்த்தரிடத்தில் கொண்டிருந்த நம்பிக்கை.

குடும்பங்களாக நண்பர்களாக சபையாக ஒன்றிணைந்து கர்த்தரை நம்புகிறோம். ஆனால் நெருப்பு பற்றி எரியும்போதும், அநியாயமாய் குற்றம் சாட்டப்படும்போதும், சலுகைகள் நாடி வரும்போதும் ஒருமித்து நிற்கிறோமா? எத்தனை கருத்துவேற்றுமைகள், மாறுபாடான நினைவு, எத்தனை மோதல்? நட்புகள் பிரிகின்றன; குடும்பங்கள் சிதைகின்றன; சபைகள் கிழிக்கப்படுகின்றன. அப்போது நமது நம்பிக்கை எங்கே? 'அவரைப் (கிறிஸ்து) பற்றும் விசுவாசத்தால் அவருக்குள் நமக்குத் தைரியமும் திடநம்பிக்கையோடே தேவனிடத்தில் சேரும் சிலாக்கியமும் உண்டாயிருக்கிறது' (எபே.3:12) இந்த திடநம்பிக்கைதான் பவுலை எல்லா இக்கட்டிலும் சிரைச்சேதம் வரைக்கும் தலைநிமிர்ந்து நிற்கவைத்தது. தைரியமாக சாட்சி சொல்ல வைத்தது. அப்படியிருக்க, நாம் தடுமாறலாமா? சாவிலும் தேவனுக்கென்று வைராக்கியம் பாராட்டவேண்டிய நமது நட்புறவுகள் சிதைந்துபோகலாமா? கர்த்தருக்குப் பயப்படும் பயமும், கர்த்தர் எதிர்பார்க்கும் உண்மை வழியும் நமக்கிருந்தால் நாமும் திடநம்பிக்கையோடே எதையும் சந்திக்கலாம், சாதிக்கலாம்.

"பிதாவே, தடுமாறும் என்னைத் திடப்படுத்தி, உறவுகளில் உமக்குள்ளான ஒருமைப்பாட்டைக் காத்து, உமக்காக வாழ உதவிசெய்யும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
26
திங்கள்

வாசிப்பு: தானியேல் 4:24-27; சங்கீதம் 51:1-4

# பிறருக்குச் செய்தவற்றையும்...

'...சிறுமையானவர்களுக்கு இரங்கி, உமது அக்கிரமங்களையும் அகற்றிவிடும். அப்பொழுது உம்முடைய வாழ்வு நீடித்திருக்கலாம் என்றான்.' (தானியேல் 4:27)

"உள்ளம் உடையத்தக்கதான செய்தி. வார்த்தைக்குக் கீழ்ப்படியாவிட் டால் என்னவாகும் என்பதுவும் தெரிவிக்கப்பட்டது. அத்தோடு நிறுத்தப்படாமல், இறுதியிலே, உங்கள் பாவங்களைவிட்டு மனந்திரும்புங்கள், உங்களுக்கு ஒரு நம்பிக்கை உண்டு என்ற செய்திமட்டும் அன்றையதினம் கொடுபட்டிராவிட்டால் நான் என்ன செய்திருப்பேனோ தெரியாது' என்று ஒரு சகோதரி தன் அனுபவத் தைச் சொன்னார். உண்மைதான், சத்தியம் சொன்னால் போதாது, குற்றங்களை யும் எடுத்துச் சொல்லிவிட்டாலும் போதாது. மேற்கொண்டு செய்யவேண்டியதை யும், குற்றத்திலிருந்து வெளிவரக்கூடிய வழியையும் காட்டாவிட்டால் நமது பணி முடியவில்லை என்பதுதான் அர்த்தம்.

அன்று தானியேல் அதைத்தான் செய்தார். ராஜாமீது அன்பும் கரிசனை யும் கொண்டிருந்த தானியேல், ராஜாவுக்கு நேரிடப்போகிற ஆபத்தை மறைக்கா மல் எடுத்துச்சொன்னார். அத்தோடு நிறுத்திவிடவில்லை. ராஜாவை மனந்திரும்பு தலுக்கு அழைத்த தானியேல், ராஜா செய்யவேண்டியதைப் பயமின்றி எடுத்துச் சொன்னார். ஒன்று, 'உமது பாவம்'. அதாவது, ராஜாவின் அந்தரங்க பாவம். இதைக் குறித்துத்தான் நாம் அதிகமாகச் சொல்லக் கேட்டிருக்கிறோம். ஆம், ஒருவன் தன் பாவத்தை மறைத்தால் அவன் வாழ்வடைய மாட்டான் என்று வேதம் நமக்கு எச்சரிக்கிறது. ஆகவே, நமது வாழ்வு கட்டாயம் சீர்ப்படுத்தப் பட்டே ஆகவேண்டும். ஆனால், அது மாத்திரம் போதாது. தானியேல் தொடருகி றார்: 'சிறுமையானவர்களுக்கு இரங்காத அக்கிரமம்'. இவர் ராஜாவாக இருந்து பிறருக்கு செய்த அக்கிரம செயல்கள், அவையும் சீர்ப்படுத்தப்பட வேண்டும். அப்பொழுதுதான் வாழ்வு நீடிக்கும் என்றார் தானியேல்.

எமது பாவங்களைக் குறித்து, நாம் மனந்திரும்புவதைக் குறித்தே நாம் அதிகமாக சிந்திப்பதுண்டு. அது செய்யக்கூடியது, செய்யப்படவேண்டியது. ஆனால், அத்துடன் காரியம் முடிந்துவிடுவதில்லை. நம் நிமித்தம் பிறர் அடைந்த வேதனைகள், துயரங்களும், நம்மால் பிறருக்கு நேர்ந்த உடைவுகளும் இழப்பு களும்கூட சரிசெய்யப்படவேண்டியது அவசியம். பிறரோடு ஒப்புரவாகவேண்டியது மிக மிக அவசியம். ஏனெனில் நாம் அந்தரங்கத்தில் பெற்றுக்கொள்கின்ற மன மாற்றம், பிறரோடுள்ள உறவில்தான் வெளிப்படுகிறது. இங்கேதான் அநேகர் தடுமாறுவதுண்டு. ஏனெனில் நமது தன்மானத்திற்கு அது சவாலாகிவிடும். அப்படியாக தடுமாறுவோமானால், நாம் பெற்றுக்கொண்ட மனமாற்றமும் கேள்விக்குறியாகிவிடும். அன்று சகேயு அதை அழகாகச் செய்தார். ஒரு சகேயு வால் அதைச் செய்யக்கூடுமானால், ஏன் நம்மால் செய்யமுடியாது?

"பிதாவே, என் பாவங்கள் மாத்திரமல்ல, பிறருக்கு நான் செய்த அக்கிரமங்களை யும் உணர்ந்து மனந்திரும்ப என்னை நீரே நடத்தும் ஐயா. ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
27
செவ்வாய்

வாசிப்பு: லூக்கா 13:1-5

# எச்சரித்த பின்புமா!

'நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன். ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து. மனந்திரும்பு.' (வெளிப்படுத்தல் 3:19)

ராஜாவுக்கு, மனந்திரும்புதலுக்கான ஒரு தருணம் கொடுக்கப்பட்டிருந் தும், சொல்லப்பட்டபடியே ராஜாவுக்கு நடந்தேறிவிட்டது. இது எப்படி ஆனது? ஒரேயொரு வார்த்தை. 'என் வல்லமையின் செயல், என் மகிமைக்கென்று, நான் கட்டின மகா பாபிலோன்.' இந்த வார்த்தைகளைச் சொல்லிமுடிக்க முன்பே, எல்லாம் நடந்து முடிந்துவிட்டது. அரமனைமேல் உலாவிக் கொண்டிருந்தபோது ராஜா தன் ராஜ்யத்தைப் பார்த்தான், பெருமைகொண்டான். பெருமை வார்த்தை யாக வெளிப்பட்டது. ஒரு கணத்தில் எல்லாம் முடிந்துவிட்டது. என்ன பரிதாபம்! சொல்லி வைத்தும் அவன் தன்னை மாற்றிக்கொள்ளவில்லை.

பிலாத்து சில கலிலேயருடைய இரத்தத்தை அவர்களது பலிகளோடு கலந்தான் என்று இயேசுவுக்குச் சொல்லப்பட்டது. 'அந்தக் கலிலேயர் பாவிகள்' என்று இயேசு சொல்லுவாரா என்று இயேசுவைச் சோதிப்பதே கேட்டவர்களது நோக்கம். அவர்களுடைய இருதய சிந்தனையை அறிந்திருந்த இயேசு, 'நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்' என்று பதில் கொடுத்தார். தேவபிள்ளையே, தம்மிடத்தில் அன்புகூருகிறவர்கள் எவரும் மாத்திரமல்ல, ஒரு துன்மார்க்கன்கூட கெட்டுப்போவது தேவனுடைய விருப்பம் அல்ல. இல்லாவிட்டால் தம்முடைய ஒரேபேறான குமாரனை இந்த உலகுக்கு ஏக பலியாகத் தந்திருப்பாரா?

நமது மனந்திரும்புதலுக்கு வேண்டிய சகலத்தையும் மனதுருக்கத்துடன் ஆண்டவர் தந்துவிட்டார். அவற்றை நமக்கு அறியத் தந்ததுடன் நின்றுவிடாமல், தம்மையும் பலியாகத் தந்து, அந்த மீட்பை அருளியும் விட்டார். அதன்பின்புதான், 'நீ. மனந்திரும்பாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, என் வாயின் பட்டயத்தால் அவர்களோடே யுத்தம்பண்ணுவேன்' என்றார். (வெளி. 2:16) கர்த்தர் நம்மை சிலசமயம் சிட்சைக்குள் நடத்துவது நம்மில் கோபம்கொண்டதால் அல்ல; நாம் மனந்திரும்பவேண்டும் என்பதற்காகத்தான். நாம் விழுந்துபோக ஒரு விநாடி போதும். நேபுகாத்நேச்சாருக்கு அதுதான் நடந்தது. அவனைத் தமது ஊழியன் (எரேமியா 43:10) என்று கர்த்தர் சொல்லியிருந்தும், அவனைக் கர்த்தர் சிட்சித்தார். ஏனெனில் ராஜ்யங்களும் ராஜ்யபாரங்களும் கர்த்தருடையது என்பதை அவனுக்கு உணர்த்தி அவனை உயர்த்த தேவன் சித்தம்கொண்டிருந் தார். தேவபிள்ளையே, உனக்கும் தேவன் எத்தனையோ தருணங்களைக் கொடுத்திருக்கிறார். நீ விழுந்துபோக ஒரு கணம் போதும். ஆனால், நாம் மனந்திரும்பவேண்டும் என்றே கர்த்தர் விரும்புகிறார். அவரோடு நாம் இன்னும் போராடிக்கொண்டிருக்கலாமா? மனந்திருப்புவோமாக.

"பிதாவே, நீர் தரும் தருணங்களைம் எச்சரிப்புக்களையும் உதாசீனம்செய்யாமல், இதோ இப்போதே உம் பாதம் வருகிறேன், என்னை ஏற்று நடத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
28
புதன்

வாசிப்பு: 2பேதுரு 3:8-14

# இன்றைக்கே...

'...பன்னிரண்டு மாதம் சென்றபின்பு....' (தானியேல் 4:29)

எச்சரிப்பு மாத்திரமல்ல, மனந்திரும்பி வாழ்வைச் சீர்ப்படுத்த தேவன் உரிய தருணமும் கொடுக்கிறார். நேபுகாத்நேச்சாருக்கு தேவன் சொப்பனத்தின் மூலம் நடக்கப்போவதை எச்சரித்து, தானியேல்மூலமாக மனந்திரும்புதலின் அழைப்பும் கொடுத்திருந்தார். அதற்காக சொல்லப்பட்ட எதுவுமே உடனடியாக நடக்கவில்லை. ராஜா கர்த்தருடைய வல்லமையை நன்கு அறிந்தவன். அக்கினியில் உலாவிய நான்காம் நபரை அவன் சொந்தக் கண்களே கண்டது. இப்போ சொப்பனத்தின் மூலம் கிடைத்த எச்சரிப்பு சாதாரணமானதல்ல என்பதை அவன் அறிந்திருப்பான். இல்லாவிட்டால் தானியேலுக்கு அவன் தீங்குசெய்திருக்கக் கூடும். எல்லாம் தெரிந்திருந்தும் அதைக் குறித்துக் கரிசனைகொள்ளாத ராஜா, எதுவித முயற்சியும் எடுக்காமல், தன் வழியை மாற்றிக்கொள்ளாமல் தன் வாழ்வை அவன் தொடர்ந்தான். பன்னிரண்டு மாதங்கள், அதாவது ஒரு வருட காலம் சென்றுவிட்டது. அதன் பின்பே சொல்லப்பட்டவை நிறைவேறின. தன்னை குறித்துச் சிந்திக்கவும், மனந்திரும்பவும் கர்த்தர் நீண்ட தருணத்தை அவனுக்கு அளித்திருந்தார். அவன் மனந்திரும்பாத பட்சத்தில் எதுவித எச்சரிப்பும் இன்றி நடக்கவேண்டியது நடந்தேறியேவிட்டது.

ஆதித் திருச்சபையிலே பல இன்னல்களுக்கும் உபத்திரவங்களுக்கும் உள்ளான கிறிஸ்தவர்களுக்கு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை தாமதமாகிறதே என்ற உணர்வு ஏற்பட்டதில் ஆச்சரியமில்லை. ஆனால் தேவன் ஒருபோதும் காரணமின்றி தாமதிக்கிறவரல்ல. அவரது காலங்கள் நமது கணிப்புகளுக்குள் அடங்கியவை அல்ல. அவர் வரத் தாமதிக்கும் ஒவ்வொருநாளும் ஒவ்வொரு விநாடியும் நமக்கு அளிக்கப்பட்டிருக்கும் தருணம் என்று நாம் சிந்திக்கிறோமா? (2பேதுரு 3:9) அன்று நேபுகாத்நேச்சாருக்கு ஒரு வருட தருணம் அளிக்கப்பட்டது. இன்று நமக்கு வாழ்நாட்களே தருணங்களாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆண்டவர் வரத் தாமதிக்கிறதினாலே நாம் எவ்வளவு துணிகரம் கொண்டு வாழு கிறோம்? என்றாலும், பல எச்சரிப்புக்களை தேவன் தந்து கொண்டேயிருக்கிறார். இத்தியானம் எழுதிக்கொண்டிருக்கும்போதுதான் வெடித்துக் குமுறிய எரிமலையி லிருந்து மேலெழும்பிய புகைமண்டலம் ஐரோப்பா நாடுகளின் வான்பரப்பை மூடியதால், விமானசேவைகள் யாவும் ரத்துச் செய்யப்பட்டுவிட்டன என்ற செய்தி வந்தது. பூகம்பங்கள், வெள்ள அழிவுகள், என்று எத்தனை! இன்னும் நமக்கு மனந்திரும்ப எவ்வளவு காலம் வேண்டும்? இன்றே ஆண்டவர் நம்மோடே பேசுகிறார். தாமதம் வேண்டாம். தேவன் தந்திருக்கின்ற தருணங்களை உதாசீனம் செய்யாமல் இன்றே அவரது வார்த்தைகளைப் பற்றிக்கொண்டு நமது வாழ்வைச் சீர்ப்படுத்துவோமாக.

"பிதாவே, நீர் அடியேனுக்குத் தந்தருளின தருணங்களை உணர்ந்து, இன்றே மனந்திரும்பி உம்மைப் பற்றிக்கொண்டு வாழ கிருபை தாரும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜுலை
29
வியாழன்

வாசிப்பு: தானியேல் 4:31-33; லூக்கா 6:46-49

# கடவுளா! ஆண்டவரா!

'என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற்போகிறதென்ன?' (லூக்கா 6:46)

சமீபத்திலே ஒரு தேவ ஊழியர்மூலம் கேட்ட சில காரியங்கள் என்னைச் சிந்திக்கவைத்தது. கடவுளை, கடவுளாக ஏற்றுக்கொள்வதற்கும், அவரையே ஆண்டவராக ஏற்றுக்கொள்வதற்கும் பெரிய வித்தியாசமுண்டு என்று சொன்னார். பாடல்கள் பாடி, வாத்தியங்களைப் பலமாக இசைத்து கடவுளுக்கு ஆராதனை செய்து, அவருடைய நாமத்தில் பல காரியங்களை நிறைவேற்றுவது மிகவும் சுலபம். ஏனெனில் நாம் தேவனை நம்புவதால் அவரை ஆராதிக்கலாம். ஆனால் ஆண்டவர் என்பது அவரது ஆளுகையைக் குறிக்கும். ஆளுகையை ஏற்றுக்கொள்வது என்பது அவருடைய நீதிக்கும் கட்டளைகளுக்கும் அடங்கி, வார்த்தையின்படி நடப்பதைக் குறிக்கும். நமக்கோ அதுதான் கடினம். ஆண்டவரே, உம்மை நேசிப்பேன், அடுத்தவனை நேசிப்பதைக் கேட்கவேண்டாம் என்பதுபோல நாம் வாழுகிறோம். நமக்குக் கடவுள் வேண்டும், அவருடைய அற்புத அதிசயங்கள் வேண்டும். ஆனால் அவருடைய வார்த்தையின்படி நடப்பது என்பது விரும்பப்படாத செய்யமுடியாத காரியமாக இருப்பது ஏன்? இந்த நிலையில் கடவுள் நம்மில் மகிழுவாரா? தமக்குக் கீழ்ப்படியாத பட்சத்தில் நம்மில் வெறுப்படைவாரா? இதுதான் அந்த செய்தி.

நேபுகாத்நேச்சாரின் பிரச்சனையும் இதுதான். கெம்பீரமும், பராக்கிரமமும் மிக்க இந்த ராஜா, தலைமயிர் கழுகுகளுடைய இறகுகளைப்போலவும், நகங்கள் பட்சிகளுடைய நகங்களைப்போலவும் மாற்றமடைந்த நிலையில், வெளியிலே புல்லை மேய்ந்துகொண்டிருந்தார் என்பதை கற்பனைபண்ணிப் பார்க்கவே கடினமாக இருக்கிறது. ஏன் இந்த நிலைமை? இந்த தேவனே தேவன் என்று சொல்லுமளவுக்கு தானியேலின் தேவனை அவன் அறிந்திருந்தான். தேவ வல்லமையை அவன் கண்டிருந்தான். ஆனால் தேவனுடைய சத்தத்திற்குச் செவிசாய்த்து தன்னைத் திருத்திக்கொள்ள அவன் மறுத்துவிட்டான். தற்பெருமை அகங்காரம் மேட்டிமை எதனையும், விட்டுக்கொடுக்க அவன் விரும்பவில்லை. மொத்தத்தில், தன் அதிகாரத்தை விட்டுவிட்டு, தேவஅதிகாரத்திற்கு அவன் கீழ்ப்படியாதிருந்தான் என்பதுதான் உண்மை.

தேவபிள்ளையே, நீ கர்த்தரை நேசிக்கிறாய், ஆராதிக்கிறாய்; சேவிக்கிறாய். ஆனால், 'ஆண்டவரே ஆண்டவரே என்று சொல்லுவதல்ல, பாடுவதல்ல. முக்கியம். என் வார்த்தைக்கு, எச்சரிப்புக்கு நீ இணங்குகிறாயா?' என்றே நம் ஆண்டவர் கேட்கிறார். வார்த்தைக்குக் கீழ்ப்படியாத எவனும் மணல்மேல் கட்டப்பட்ட வீடுபோல இடிந்துபோவது உறுதி. கடவுள் உனக்கு வெறுமனே கடவுளா? அல்லது, கடவுளாகவும் ஆண்டவராகவும் அவரை ஏற்றிருக்கிறாயா?

"பிதாவே, நீர் என் கடவுள், ஆண்டவர், எல்லாமும் நீரே. என் வாழ்வில் உமக்குக் கீழ்ப்படியாத பகுதிகளை என்னைவிட்டு அகற்றிவிடும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
**30**
வெள்ளி

வாசிப்பு: தானியேல் 4:34-37

# வானத்துக்கு நேராக...

...நான் என் கண்களை வானத்துக்கு ஏறெடுத்தேன். என் புத்தி எனக்குத் திரும்பிவந்தது. (தானியேல் 4:34)

பெற்றோரும் பெரியோரும் அறிவுரை சொல்லும்போது நாம் அதைக் கேட்டு நடப்பது மிகக் குறைவு. அநேகமாக அடிபட்டு அனுபவித்துத்தான் நாம் உணர்வடைய வேண்டியிருக்கிறது என்பது நமது அனுபவங்களிலிருந்தே விளங்கும். அப்படியாவது மனந்திரும்பிவிட்டால் தப்பித்துக்கொள்ளலாம். அடிபட்டும் உணர்வடையாதிருந்தால் அதன் முடிவு பரிதாபமே! ஆனால், சத்தியத்தைக் கேட்டும், அதற்குக் கீழ்ப்படிந்து நம்மைத் திருத்திக்கொள்ள முடியாதிருப்பது ஏன் என்ற கேள்வியை நம்மை நாமே கேட்டுப் பார்ப்பது நல்லது.

நேபுகாத்நேச்சார், தானியேல் 2:47ல் தேவன் மறைபொருள்களை வெளிப்படுத்துகிறவர் என்பதை ஏற்றுக்கொண்டிருந்தான். 3:28ல் தான் அக்கினியில் போடுவித்த மூன்று வாலிபரையும் அந்த தேவனே விடுவித்தார் என்று தானே அறிக்கைசெய்திருந்தான். கடவுள் ஒருவர் இருக்கிறார், அவர் அதிசயங்களைச் செய்கிறவர் என்பது தெரிந்திருந்தும் அவன் கடவுளை ஆண்டவராக ஏற்றுக்கொள்ளாதிருந்தான் (4:30). மனந்திரும்ப மனதில்லாதிருந்தான். இப்படிப் பட்ட ராஜா, உலகின் பல நாடுகளையும் கைப்பற்றி வெற்றிசிறந்த இந்த ராஜா, ராஜாதி ராஜாவினால் ஒருநாள் பிடிக்கப்பட்டான். இது எப்படி ஆனது? அவன் தன் கண்களை வானத்துக்கு நேராக ஏறெடுத்தான், இதுதான் நடந்தது. அவன் தன் கண்களை வானத்துக்கு நேராக ஏறெடுக்கும்வரைக்கும் கர்த்தர் அவனது வாழ்வில் எதுவும் செய்யவுமில்லை, அவனது வாழ்வில் மாற்றம் ஏற்படவுமில்லை. அந் நிலைக்கு அவன் வருவதற்கு பல சூழ்நிலைகள், பல வருடங்கள், பல அதிசய அனுபவங்களுக்கூடாகக் கடந்துவர நேர்ந்தது. தானியேல் தேவாதி தேவனை அறிமுகம் செய்தபோது, அவன் தானே தேவனுடைய மகத்துவத்தைக் கண்டபோது மனம் திருந்தியிருந்தால் புல்லைத் தின்றிருக்கவும் தேவையில்லை, பனியில் நனைந்திருக்கவும் தேவையில்லை.

அநேகருடைய வாழ்க்கையும் இப்படித்தான். எத்தனை பிரசங்கங்கள், தீர்க்கதரிசனங்கள், நமது பாஷையிலேயே பரிசுத்த வேதாகமம், புத்தகங்கள் பாடல்கள் என்று பலவிதங்களில் நாளாந்தம் நாம் போதிக்கப்படுகிறோம், எச்சரிக்கப்படுகிறோம். நமக்குத் தெரியாதது என்று என்ன இருக்கிறது? அப்போ தவறு எங்கே இருக்கிறது. நாம் தேவனை நோக்கிப் பார்க்கிறோமா என்பதிலேயே பதில் தங்கியுள்ளது. நாம் தேவபெலத்தை நாடும்வரைக்கும் தேவனால் நம் வாழ்வில் எதுவுமே செய்யமுடியாது. அவர் எவரையும் கட்டாயப்படுத்துகிறவர் அல்லவே! தேவனுடைய சிட்சையைச் சந்தித்துத்தான் மனந்திரும்புவேன் என்று ஏன் கடின இதயத்துடன் வாழவேண்டும்? இன்றே, தேவனை நோக்கித் திரும்புவோமாக.

"பிதாவே, என் கண்களை உமக்கு நேராய் ஏறெடுக்கிறேன். என் வாழ்வின் தாறுமாறுகளை உணர்த்தும். என்னை ஏற்று நடத்தியருளும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
31
சனி

வாசிப்பு: லூக்கா 15:3-7

# தேவன் மகிழுகிறார்!

'...மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.' (லூக்கா 15:7)

'ஆகையால் நேபுகாத்நேச்சாராகிய நான் பரலோகத்தின் ராஜாவைப் புகழ்ந்து, உயர்த்தி, மகிமைப்படுத்துகிறேன். அவருடைய கிரியைகளெல்லாம் சத்தியமும், அவருடைய வழிகள் நியாயமுமானவைகள்; அகந்தையாய் நடக்கிறவர்களை தாழ்த்த அவராலே ஆகும்' (தானியேல் 4:37). இஸ்ரவேலன் அல்லாத பாபிலோனிய ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் அனுபவித்து எழுதிய வார்த்தைகள் இவை. நேபுகாத்நேச்சார் ஒரு புறவின ராஜாவாக இருந்தும், அவனது வாழ்க்கை நமக்கு சிறந்ததொரு பாடமாயிருக்கிறதை மறுக்கமுடியாது. புகழ்பெற்ற உலக ராஜாக்களுக்குள் கர்த்தரால் உபயோகப்படுத்தப்பட்ட இந்த ராஜாவைப்போல வேறு யாரும் இருந்ததில்லை எனலாம்.

கர்த்தர் இந்த ராஜாவின் வாழ்வில் பலவிதங்களில் இடைபட்டார். பல வெற்றிகளை அனுமதித்தார். ஆனால் அந்த வெற்றிகளெல்லாம் தேவதிட்டங்களைத்தான் நிறைவேற்றின. தன் அரமண்மனையின் வேலையாட்களாக திறமை மிக்க யூதரை சிறைப்பிடித்துக்கொண்டு செல்ல தேவன் தாமே அனுமதித்திருந்தார். ஆனால் தானியேல் என்ற வாலிபனைக்கொண்டு தேவன் செய்யவிருந்தவற்றை ராஜா அறிந்திருக்கவில்லை. மூன்று வாலிப நண்பர்களையும் நெருப்பில் போட தேவன் ராஜாவை அனுமதித்தார். அதன்மூலம் மனிதனுடைய வாழ்வும் சாவும் அவனது கைகளில் இல்லை என்பதைத் தேவன் கற்றுக்கொடுத்தார். சொப்பனத்தின்மூலம் அவனை எச்சரித்து, அகந்தைக்குக் கிடைக்கும் பலனையும், தேவனே தமக்குச் சித்தமானவர்களுக்கு ஆளுகையைக் கொடுக்கிறார் என்பதையும் உணரவைத்தார்.

இறுதியில் ராஜா, தேவனுடைய வழிகள் நியாயம் என்றான். நாமும், தேவனுடைய ஆளுகையிலிருந்து விலகி, நமக்கு நாமே கடவுள்களாகி, நமது சுயத்திலும் பெருமையிலும் நம்பிக்கை வைக்கும்போதெல்லாம், தேவனுடைய கிரியைகளை நாம் காணமுடியாமற் போகிறோம். இதை நாம் சிந்திக்கவேண்டும். இன்று உலகம் நமக்கு இடும் சவால்களை வென்று, தேவனை மாத்திரமே நம்பி வாழவும், தேவ நாமத்தை மகிமைப்படுத்தவும் நமக்கு தேவவார்த்தையின் வழி நடத்துதல் உண்டு. பிரச்சனைகள் மத்தியிலும், விளங்காத சூழ்நிலைகளிலும், நம்மை நமக்கு உணர்த்தி, நமது பெலவீனங்களைச் சுட்டிக்காட்டி அது நம்மை எச்சரிக்கிறது. அந்த வார்த்தைக்குச் செவிகொடுத்து மனந்திரும்பும்போது நாம் மாத்திரமா, முழு பரலோகமுமே நமது நிமித்தம் களிகூர்ந்து மகிழும் என்று இயேசு சொன்னாரே. அந்த மகிழ்ச்சியை நாம் ஏன் கொடுக்கக்கூடாது. நாம் தேவனை நம்புகிறோம் என்றால் நமது வாழ்வின் போக்கும் அப்படியே இருக்க வேண்டுமே. சிந்திப்போம்.

"பிதாவே, இதோ இன்றே உமது ஆளுகைக்குள் என்னைத் தருகிறேன். நான் என்றும் உம்மை மகிழ்வித்து வாழும் வாழ்வை எனக்குத் தாரும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆகஸ்**
**1**
**ஞாயிறு**

வாசிப்பு: ரோமர் 5:1-5, பிலிப்பியர் 1:2-9

# அதிக கனிகொடுக்கும்படி

'...கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி அதைச் சுத்தம்பண்ணுகிறார்.' (யோவான் 15:2)

'கிறிஸ்துவுக்காய் வாழ எத்தனித்தும், வாழ்வில் கஷ்டங்கள் சோதனைகள் ஏன்' என்று நம்மில் பலர் கேட்கலாம். தோட்டக்காரனின் வெட்டுக் கத்தி, கனிகொடாத மரத்தை வெட்டிப்போட மாத்திரமல்ல, கனிகொடுக்கும் மரத்திற்கும் பாவிக்கப்படுகிறது. ஆனால் இது அழிக்கவல்ல; அது அதிக கனி கொடுக்கும்படி ஆக்கவேலைக்காகப் பாவிக்கப்படுகிறது. நமது வாழ்விலும் ஆண்டவர் இதையே செய்கிறார். அவருக்காக உழைக்கும் பிள்ளைகள், இன்னும் அதிக பலன் கொடுக்கும்படி, சில வெட்டுகள், சுத்திகரிப்புகள் அவர்களுக்குத் தேவை என்று தேவன் காண்கிறார். அது 'அழிவு' எனப்படாமல், ஆக்கத்திற்கு முன்னோடியான "சிட்சை" எனப்படுகிறது. இந்நாட்களில் பிதாவின் நல்ல ஆக்கபூர்வமான செயலுக்கு நம்மை நாமே ஒப்புவிப்போமாக.

உள்ளூர் திராட்சைத் தோட்டங்களிலே, அதிகமான இலைகள் விட்டு, செழித்து வளரும் செடிகளையே தோட்டக்காரனின் கத்தி அதிக கவனமாகப் பதம் பார்க்கிறதை அவதானித்தேன். செடி செழித்தால் கனி குறையுமாம். இந்தச் சுத்திகரிப்புக்கு செழிப்புள்ள செடிகளே தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இதன் கொடி சுத்திகரிக்கப்படும்போது, செடியானது தனது அமைதலான நிலையிலிருந்து அலைக்கழிக்கப்படுகிறது; செடியின் செழிப்பும் அற்றுப்போகிறது.

தேவபிள்ளைகளே, நம் வாழ்வில் துன்ப துயரம் ஏன் என்பது இப்போது புலனாகின்றதல்லவா! நாம் வெறுமனே கனிகொடுத்தால் போதாது; அதிக கனி கொடுக்கவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். இதுவரை அன்பு காட்டிய நாம் சத்துருவையும் நேசிக்கவேண்டுமென்று விரும்புகிறார். இதுவரை பொறுமையாக இருந்த நாம் நீடிய பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். இந்த அற்புதமான குணங்கள் நம்மில் வெளிப்படவேண்டுமானால் நம்மை ஒட்டியிருக்கிற பல காரியங்கள் அகற்றப்படவேண்டும். நமது வாழ்வில் சிலுவை காணப்படவேண்டும். இயேசுவின் சிந்தை வெளிப்படவேண்டும். செழிப்பு அதிகரித்தால் அதுவே அழிவுக்கு வழிவகுத்துவிடும். ஆகவே தேவனின் சிட்சையின் கத்தி நம்மேல் விழுகிறது. பல காரியங்கள் வெட்டப்படும்போது நோவுகள், நிந்தைகள், வெறுப்புகளை நாம் சந்திக்கவேண்டி வரும். ஆனால் கிறிஸ்துவின் நிமித்தமாகவே இவை நேரிடுவதினால் நாம் மெய்யாகவே பாக்கியவான்களே! "அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கு உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது" என்று பவுல் எழுதுகிறார். இது ஒரு கிருபையின் ஈவு. தேவபிள்ளைகளுக்கு உண்டாகின்ற பாடுகள் அவர்களை அழிக்கவல்ல. உருவாக்கவே. ஆகவே, அதிக கனி கொடுக்கும்படி சுத்தம்பண்ணப்பட நம்மை அர்ப்பணிப்போமா?

"பிதாவே, 'ஏன் இந்தப் பாடு' என்று முறுமுறுத்த என்னை மன்னித்து, உமக்காக அதிக கனி கொடுக்கும்படி என்னை இன்னும் சுத்தம்பண்ணியருளும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பு: சங்கீதம் 92:12-15

ஆகஸ்
2
திங்கள்

# இளமை நிலையானதல்ல!

'...இளவயதும் வாலிபமும் மாயையே.' (பிரசங்கி 11:10)

"அறிவு, ஞானம், ஐசுவரியம், வேலை இவை யாவும் மாயை" என்று பிரசங்கி சொன்னாலும், சூரியனுக்குக் கீழே பார்க்கும்போதுதான் அது மாயை; எதையும் நித்தியத்தின் வெளிச்சத்தில் பார்த்து, கர்த்தருக்குள் சகலத்தையும் அனுபவிக்கும்போது சகலமும் ஆசீர்வாதமாயிருக்கும் என்று விளங்கவைத்த பிரசங்கி, இன்னுமொரு மாயையைக் குறித்தும் எழுதுகிறார். இது நம்மைக் குறித்தது. மனுஷனுடைய வாழ்நாளில் அதிக துடிப்புமிகுந்த காலம் இளமைக் காலம்தான். இந்த இளமையை மாயை என்று சொல்லுவது எந்த விதத்தில் நியாயம்? ஆனாலும், இந்த வாலிபப் பருவத்தைக்கூட, பிழையான கண்ணோட்டத்தில் பார்த்தால், அது மாயையாகத்தான் தோன்றும்.

வாலிபம் என்பது வாழ்க்கையின் ஒரு பருவமே தவிர, வாலிபம்தான் வாழ்வல்ல. ஒரு மனிதனுடைய வாழ்வில் எந்தப் பருவம் சந்தோஷத்தைக் கொடுக்கிறது? குழந்தைப் பருவமா? வாலிபப் பருவமா? முதுமைப் பருவமா? இப்படியாக ஒரு பட்டிமன்றம் நடப்பதை தொலைக்காட்சியில் ஒருநாள் கண்டேன். ஒவ்வொருவரும் தமக்குரிய குறிப்பை அழகாக விவாதித்தார்கள். வாலிபப் பருவமே சந்தோஷம் என்று பேசிய ஒரு வாலிப சகோதரி, 'வாலிபம் இல்லையானால் வாழ்வே இல்லை' என்றாள். முதலில் இப்படிப் பருவங்களை பிரித்து பார்ப்பதே தவறு. எல்லாப் பருவங்களும் மனுஷவாழ்விலே வளர்ச்சிக்குரிய படிகளாகவே இருக்கின்றன. எதையும் தனியாகப் பிரித்து பார்க்க முடியாது. அதினதின் காலத்திலே கர்த்தர் சகலத்தையும் நேர்த்தியாகச் செய்திருக்கிறார் (பிர.3:11). வாலிபமும் அதன் காலத்திலே அழகானதும் நேர்த்தியானதும்தான். ஆனால் அதை நேர்த்தியாக வாழும்வரைக்கும்தான் அது அழகாக இருக்கும். அந்தக் காலம் முடிய அது மாறும். இதுதான் இயல்பு. மாறாக, என்றும் நான் வாலிபன் தான் என்ற எண்ணத்தில் வாழ முற்படும்போது பல சங்கடங்கள் உருவாகும். இப்படியிருக்க என்றும் இளமையாகத் தோற்றமளிக்கவேண்டும் என்பது அநேகருடைய அவா. இதற்காக பெரிய விலையும் கொடுக்கிறார்கள். ஆனால் அத்தோற்றத்தைத் தொடர்ந்து தக்க வைக்க முடியாதபோதுதான் தடுமாறிவிடுகிறார்கள். இது தேவைதானா?

தேவபிள்ளையே, உன் இளவயது மாறும். அதைத் தடுக்க அதிக பிரயாசப்பட்டு தடுமாறாதே. இளமை நமக்கு ஒரு விக்கிரகமாக மாறக்கூடாது. "இளமையில் சந்தோஷமாயிரு" என பிரசங்கி எழுதியதற்காக இளமையை அதிகமாக நேசிக்கக்கூடாது. இளமை மாறும். நாங்கள் வளரவேண்டியவர்கள். ஆகவே வாழ்வின் ஒவ்வொரு பருவத்தையும் தேவகரத்தில் ஒப்புவிப்போமாக!

"பிதாவே, மாறிப்போகும் வாழ்வின் பருவங்களை உணர்ந்து, ஒவ்வொரு பருவத்தையும் உமக்கு ஒப்புவித்து, வாழ எனக்குக் கற்றுத்தாரும். ஆமென்."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்
3
செவ்வாய்

வாசிப்பு: லூக்கா 14:25-27

# உறவுகளா?

"...ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து...." (மத்தேயு 16:24)

இந்த நிமிஷம் வரைக்கும் கிறிஸ்துவின் நாமத்துக்காய் நாம் என்ன செய்திருக்கிறோம் என்று சற்று சிந்திப்போமா? ஆராதனைகள், நிகழ்ச்சிகள், பரிசுகள், பாடல்கள், ஜெபங்கள், காணிக்கைகள், கொடைகள், தசமபாகங்கள், இவற்றோடு வைத்தியசாலை ஊழியம், வயோதிபர் ஊழியம் என்று எத்தனை? எல்லாமே நல்லது; தேவையானது. ஆனால் இவற்றையெல்லாம் செய்துவிட்டு நாம் மாத்திரம் ஒதுங்கிக்கொண்டால் பிரயோஜனம் என்ன? ஏனெனில் சகலவித மான நற்கிரியைகளையும் யாரும் செய்யலாம். ஆனால் ஆண்டவர் நம்மிடம் எதிர்பார்ப்பது என்ன? என்னை நான் அர்ப்பணிக்கவேண்டும்.

இவ்வுலகிலே நமக்கிருக்கும் முக்கியமான பிணைப்பு, நமக்கிருக்கும் உறவுதான். ஆண்டவரோ, தகப்பன், தாய், மனைவி, பிள்ளை, சகோதரம் என யாவரையும் விட்டு தம்மைப் பின்பற்றி வரும்படி அழைக்கிறார். தாய் தகப்பனைக் கனம்பண்ணச் சொன்னவர் இப்படி அழைக்கலாமா? கணவன் மனைவி உறவை அமைத்தவர் இப்படிச் சொல்லலாமா? கர்ப்பத்தில் பிள்ளைகளைக் கொடுக்கிற வரே இப்படிக் கேட்கலாமா? ஆனால் அவர் அப்படித்தான் அழைத்தார். அப்படி யானால் ஆண்டவர் சொல்லுவது என்ன? "இந்த உறவுகளை உனக்குக் கிருபை யாய் கொடுத்த என்னிலும் பார்க்க இந்த உறவுகளா உனக்கு முக்கியம்? இந்த உறவுகளைக் கட்டிக்காக்கும் உனக்கு, ஞானமும் பெலமும் தந்த என்னிலும் பார்க்க இந்த உறவுப் பிணைப்புகளா முக்கியம்? நான் உன்னோடு கொண்டுள்ள உறவு முக்கியமா? அல்லது நான் கொடுத்த இந்த உறவுகள் முக்கியமா? அதாவது, உனக்கிருக்கின்ற உறவுகளைப் பார்க்கிலும் நான் முக்கியமற்றுப் போய்விட்டேனா? நித்திய உறவுக்கென்று உன்னை ஏற்படுத்திய என்னைவிட, நாளை மாறிப்போகும் இந்த மனித உறவுகளா உனக்கு முக்கியம்?"

தேவபிள்ளையே, உறவுகள் நமக்கு அருளப்பட்ட பெரிய ஈவுகள். அதைக் கட்டிக்காக்க வேண்டிய பொறுப்பும் நமக்குண்டு. ஆனால், அந்த உறவி லும் பார்க்க நமது ஆண்டவர் பெரியவர் அல்லவோ! உறவுகளை உதறித்தள்ளி எறிந்துவிட ஆண்டவர் நம்மை அழைக்கவில்லை. அந்த உறவுகளைக் கட்டிக் காக்க எடுக்கும் சகல தீர்மானங்களிலும் வழிகளிலும் கிறிஸ்துவுக்கே முதலிடம் கொடுக்க நாம் அழைக்கப்படுகிறோம் என்பதையே நாம் மனதில் நிறுத்த வேண்டும். கிறிஸ்துவுக்கு முதலிடம் கொடுக்கும்போது கட்டாயம் நமக்கு சிலுவை காத்திருக்கும். எதிர்ப்புகளும் ஏளனங்களும் எதிர்பார்த்திருக்கும். ஆனால் அதுவும் ஒரு சுகமாக இருக்கும். நமது உறவுகளுக்கு நாம் கொடுத்தி ருக்கும் முன்னுரிமை எப்படிப்பட்டது?

"கர்த்தாவே, உம்மைச் சேவிப்பதில் என் உறவுகள் தடையாயிருந்தால் அதை யும் மேற்கொண்டு உம்மையே பின்பற்றிவர எனக்குப் பெலன் தாரும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்
4
புதன்

வாசிப்பு: யோசுவா 1:5-9

# தியானம் உறவின் படிக்கட்டு

'உமது கட்டளைகளைத் தியானித்து, உமது வழிகளைக் கண்ணோக்குகிறேன்.' (சங்கீதம் 119:15)

பொதுவாக இருவரிடையே உறவு சீராக வளரவேண்டுமானால், இருவருமே ஒருவரோடு ஒருவர் பேசவேண்டும். ஒருவர் மாத்திரம் பேசுவதால் உறவு வளராது. தேவைகளுக்காக மட்டும் வேண்டிக்கொள்கின்ற அநேகர் தமது ஜெபத்தைத் தவறாது செய்வார்கள். ஆனால் வேதத்தைத் தியானிப்பதையோ அசட்டையாக விட்டுவிடுவார்கள். ஜெபத்தில் எப்படியாக தேவனோடு உறவு கொள்கிறோமோ, அதேபோல தேவனுடைய வார்த்தைகளை நாம் வாசித்து தியானிக்கும்போது அவர் எம்மோடு உறவாடுகின்றார். அவரது வார்த்தைகளை நாம் தியானித்து அவற்றையே எமது வாழ்க்கையாக மாற்றும்போது, அவரோடுள்ள உறவு இன்னும் அதிகமாக நெருக்கமடைகிறது.

வயதுசென்ற தாயார், தனது அனுபவத்தை இவ்விதமாகப் பகிர்ந்து கொண்டார், "இரவில் படுக்கச் சென்றால் எனக்குத் தூக்கமே வருவதில்லை. எல்லாவிதமான யோசனைகளும் மனதில் வந்து படமாக ஓடும். அப்போது எழுந்திருந்து வேதத்தை வாசிக்க யோசித்தால் எங்கிருந்துதான் நித்திரை வருகிறதோ தெரியாது" என்றார். எம்மிலுங்கூட எத்தனைபேரின் அனுபவம் இப்படியாக இருக்கிறதோ தெரியாது. தியானம் என்பது ஒரு போராட்டம். தேவனுடைய வார்த்தைகளைத் தியானிப்பதன் முக்கியத்துவத்தை நாம் உணர்ந்தவர்களாய் அதற்கு நேரம் ஒதுக்கி அதைக் கிரமமாகச் செய்யவேண்டும். தேவன் என்னோடு இன்று என்ன பேசுகிறார் என ஆவலோடு அவரது வார்த்தைகளைத் தியானிக்க வேண்டும். ஒரு கடமைக்காக நாம் வேதத்தை வாசிப்பதாலோ, மந்திரநூல்போல அதைத் திறந்து விரலினால் வசனங்களைத் தொடுவதாலோ, ஒழுங்காக வேதத்தை வாசிக்காமல், வருட இறுதியில் இத்தனைமுறை வேதத்தை முழுவதுமாக வாசித்து முடித்தேன் என பெருமையாகக் கூறுவதற்காகவோ, நாம் வேதத்தை வாசித்தால் அதில் எந்தப் பிரயோசனமும் வரப்போவதில்லை. அது நம்மை நாமே ஏமாற்றுவதுபோலாகும். வேதமே நமது தியானமாகவேண்டும்.

வேதத்தை கிரமமாக வாசிப்பதினால் எமக்கும் தேவனுக்கும் இடையில் உள்ள உறவு வளரும். என்னிலுள்ள பாவமான காரியங்களை நான் விட்டுவிட தீர்மானிக்க முடியும். அவர் என்னோடு பேசி உணர்த்தும் காரியங்களுக்கு நான் கீழ்ப்படிய ஆயத்தமாகி, அந்த வார்த்தைகளே என் வாழ்க்கையாய் மாறுமானால் அது எத்தனை ஆசீர்வாதம். படிக்கட்டின் உச்சிவரை ஏறிச்செல்ல முயற்சிக்க வேண்டும். தடுமாறி கீழே விழுந்தாலும், விழுந்த இடத்தை விட்டெழுந்து மீண்டும் ஏற முயற்சிக்கவேண்டும். அவ் வாஞ்சை எமக்கு இருக்குமேயானால் தேவன் எமக்கு உதவிசெய்வார். முயற்சித்து பார்ப்போமா? வெற்றி காண்போமா?

"வார்த்தையானவரே, வேத வார்த்தைகளைத் தியானித்து, உறவை சீர்ப்படுத்த, பிரியமுள்ள பிள்ளையாய் நடக்க எனக்கு உதவி செய்வீராக. ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்

5

வியாழன்

வாசிப்பு: பிரசங்கி 11:7-8; கொலோசெயர் 1:25-27

# மகிழ்ச்சியின் இரகசியம்

"....மகிழ்ச்சியாயிருந்தாலும், அவன் இருளின் நாட்களையும் நினைக்கவேண்டும்." (பிரசங்கி 11:8)

கடந்துவந்த காலங்களின் இனிமையான சம்பவங்கள், கசப்பான அனுபவங்கள், தெரிந்து செய்த தவறுகள், கண்மூடித்தனமான வாழ்க்கை முறைகள் என்று பலவற்றையும் மீட்டிப்பார்க்கும்போது இப்படியும் நடந்ததா என்று சிந்திக்கத் தோன்றும். துக்க அனுபவங்களைக்கூட, இன்று திரும்பவும் நினைத்துப் பார்க்கும்போது பெருமூச்சோடு கூடிய ஒருவித மகிழ்வையும் தருகிறது என்பதை மறுக்கமுடியுமா! இவற்றையெல்லாம் கடந்து வந்தோமே என்ற சிந்தனை மனதுக்குச் சுமையானாலும் அதுவும் சுகமாகத்தான் தெரியும்.

இப்படிப் பலவித அனுபவங்களுக்கூடாகக் கடந்துவந்த நம்மால், இன்று நாம் வாழும் வாழ்க்கை இனிமையானது என்று உண்மையாகவே சொல்ல முடியுமா? காலையில் எழுந்து ஜன்னலைத் திறந்து சுகமான இதமான காற்றை சுவாசிக்கும்போது, கர்த்தாவே, நான் வாழ இன்னுமொரு நாளைத் தந்தீர் என்று உண்மையாகவே நம்மால் மகிழ்ந்திருக்க முடிகிறதா? 'இருளின் நாட்களை நினைக்கவேண்டும், அவைகள் அநேகம், வந்து சம்பவிப்பதெல்லாம் மாயை' என்று கூறும் பிரசங்கி, இந்த வாழ்நாட்களைக் குறித்து நம்மை சோர்வுறப் பண்ணவில்லை. மாறாக, எந்த சந்தோஷத்தையும் எந்த துக்கத்தையும், நமக்குத் தெரியாத, ஆனால் நாம் நிச்சயம் வாழப்போகிற அந்த நித்தியத்தின் கண்ணோட்டத்தில் பார்க்கவேண்டும் என்றே நம்மை உற்சாகப்படுத்துகிறார். நாம் அடிக்கடி சோர்ந்துபோவதும், விசுவாசத்தில் குன்றிப்போவதும் ஏன்? அநித்தியமான இந்த உலகத்திலும் அதன் காரியங்களிலும் அதிகமாக நாம் தங்கியிருப்பதே அதற்குக் காரணம். நமது விசுவாசம்கூட கொள்கையளவில், அல்லது வாயினால் சொல்லுமளவில் இருப்பதனால்தான் வாழ்வின் சம்பவங்கள் தடுமாறும்போது நாமும் தடுமாறிப்போகிறோம்.

அருமையான தேவபிள்ளையே, நமது வாழ்வின் உண்மையான மகிழ்ச்சியின் இரகசியம் என்பது, தேவனோடு நாம் வைத்திருக்கும் அந்த அன்பின் உறவிலேயே தங்கியிருக்கிறது. அந்த உறவு அவருடைய வார்த்தையிலேயே தங்கியிருக்கிறது. ஆதிகாலங்களுக்கும் தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்து, பரிசுத்தவான்களுக்கு வெளியாகி, இன்று நமக்கும் வெளியாக்கப்பட்டுள்ள அந்த ஒரே இரகசியம், இன்றைய நாளைய நித்திய வாழ்வின் இன்பத்தின் ஒரே இரகசியம் என்ன தெரியுமா? 'கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக நமக்குள் இருக்கிறார்' என்பதே அந்த இரகசியம். இந்நம்பிக்கை நமக்குள் இருக்குமானால் நம்மை யார் அல்லது எது அசைக்கமுடியும்? இப்போது சொல்லுங்கள், உங்கள் வாழ்வு இனிமையாயிருக்கிறதா?

"பிதாவே, கிறிஸ்து எனது நம்பிக்கையாய் இருக்கும்போது, இந்த வாழ்வின் எதுவும், என்னை எதுவும் செய்யமுடியாது. உமக்கே நன்றி ஐயா. ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்
6
வெள்ளி

வாசிப்பு: யோபு 31:1-12

# கண்களோடு உடன்படிக்கை

"அவர் என் வழிகளைப் பார்த்து, என் நடைகளையெல்லாம் எண்ணுகிறார் அல்லவோ?" (யோபு 31:4)

"யார்தான் இந்நாட்களில் மனசுத்தியோடு வாழுகிறார்கள். நம்மைச் சுற்றிலும் பலவித கவர்ச்சிகள் கண்களை இழுத்துக்கொண்டே இருக்கின்றன. மனம் அலை பாய்ந்தாலும் நமது கடமைகளில் தவறாது நடந்தால் அது போதாதா" என்று ஒரு குடும்பத் தலைவர் பெருமூச்சோடு சொன்னார். உண்மைதான், ஒரு தொலைக்காட்சி கலந்துரையாடல் நேரத்தில் தொலை பேசியில் பேசிய நேயர், "நம் கண்களுக்கு முன்னே பெண்கள் கவர்ச்சியாக ஆபாச உடை அணிந்து அலங்காரம் செய்து, வந்து அமர்ந்தால் ஆண்கள் நாம் என்ன செய்வது?" என்று தனது கருத்தை கோபத்தோடு கொட்டினார்.

உண்மைதான், நாம் குருடர்கள் அல்ல, காட்சிகளைப் பார்க்காமல் இருப்பதற்கு; நாம் உணர்வற்றவர்களுமல்ல - எதையும் நினைக்காமல் இருப்பதற்கு; அப்படியானால் நமது இருதயமும் நினைவுகளும் பார்வையும் அசுத்தமடையாமல் இருக்க நாம் என்ன செய்யவேண்டும்? கண்கள் காண்பது தவறல்ல; ஆனால் மறுபடியும் பார்க்கத் தூண்டப்படுவதுதான் ஆபத்தை விளைவிக்கும். மூன்றாம் தரமும் திரும்பிப் பார்க்க முனையும்போது பாவம் நம் கண்களை ஆட்கொள்ளத் தொடங்கிவிட்டது என்பதுதானே அர்த்தம். இப்படியாகக் கண்களைத் தூண்டுவது எது? நமது இருதயமும், அதின் இச்சையும்தானே. இந்த உலகை நாம் மாற்றமுடியாது. ஆனால் நம்மை நாம் கட்டுப்படுத்திக் கொள்ளலாமே. தீய நினைவுகள் வரும்; அது இயல்பு. உடனேயே விழிப்படைந்து நம் நினைவுகளை தேவன்மீதும் நற்காரியங்கள் மீதும் செலுத்தி சிந்தனைகளைத் திசைதிருப்பலாமே. நமது சுக துக்கங்களை யாரோடு பகிர்கிறோம் என்பதிலும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அவற்றை எதிர்பாலரோடு பகிர்ந்துகொள்வதைத் தவிர்ப்பது மிகமிக நல்லது. ஏனெனில் அந்த நேரம் பிரச்சனை இல்லாவிட்டாலும் அந்த நபரின் நினைவு நம் மனதை நிரப்பும். அது நாளடைவில் தவறுகள் நேரிட வழிவகுத்துவிடும்.

யோபு பக்தன் நமக்கு தெளிவான பதில் தருகிறார். நாம் கண்களோடே உடன்படிக்கை செய்துவிட்டால், நமது நினைவுகள் தவறிப்போவது எப்படி என்கிறார். ஆகவே நாம் நமது வழிகளையும், நினைவுகளையும் அறிந்திருக்கிற தேவனிடத்தில் நம்மைத் தாழ்த்துவோமாக. போராட்டமுள்ள மனதோடு தத்தளிக்கும் தேவபிள்ளையே, உதவி செய்ய வல்லவரான ஆண்டவரிடம் நம்மையும் நமது கண்களையும் நினைவுகளையும் மறுபடியும் நாம் இப்போதே திருப்புவோமாக.

"கர்த்தாவே, என்னுடைய கண்களோடு உடன்படிக்கைபண்ணவும், இருதய சிந்தனைகள் அசுத்தமடையாமல் காத்துக்கொள்ளவும் நீரே பெலன் தாரும் ஐயா. ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்
7
சனி

வாசிப்பு: ஆதியாகமம் 21:1-14

# விபசாரத்தின் விளைவுகள்

'கர்த்தருக்குப் பயப்படுகிறவனுக்குத் திடநம்பிக்கை உண்டு: அவன் பிள்ளைகளுக்கும் அடைக்கலம் கிடைக்கும்' (நீதி.14:26)

பாவம் எவ்வளவு கொடியது தெரியுமா? அது எப்போதும் பாவம் செய்கிறவனை மட்டுமல்ல, அது அடுத்தவனையும் பாதிக்கிறது. ஒருவன் களவெடுத்தால், பொருளை இழந்தவன் மட்டுமல்ல எடுத்தவனும் சமாதானத்தை இழந்து விடுகிறான். விபசார பாவமும் அப்படியே, அது செய்தவனையும் அடுத்தவனையும் நேரடியாகவே பாதிக்கிறது. திருமண உறவுக்கு அப்பாற்பட்ட தவறான உறவுகள் யாவுமே விபசார பாவமாகும். எந்தப் பாவமும் கொடியது என்றால், இந்தப் பாவம் ஏற்படுத்தும் விளைவுகளோ மிகவும் கொடியது எனலாம்.

தவறான உறவுகள் மேன்மையான உறவைக் கெடுத்துப்போடுகின்றன. தேவனோடுள்ள உறவு பாதிப்படைகிறது. ஆனால் இன்று எத்தனைபேர் விபசார பாவத்தோடு துணிகரமாய் திருவிருந்தில் பங்குபற்றுகின்றனர். சில வேளைகளில் தேவன் உடனடியாக தண்டிக்காமல் விட்டுப் பார்ப்பார். அன்று தாவீது இரு ஆண்டுகள் தாம் பாவம் செய்த உணர்வின்றி ஜீவித்தாரல்லவா! ஆனால் தேவன் இடைப்பட ஆரம்பித்தாரானால் அதைத் தாங்கிக் கொள்வது கடினம் என்பதை தாவீதின் சம்பவத்தில் கற்றுக்கொள்கிறோம். மாத்திரமல்ல, நாளடைவில் நமது மனசாட்சியே நம்மைக் குத்திக் குதறிப்போடும். மன உளைச்சல் உண்டாக்கும். பிற மனித உறவுகள் உடைந்து போகும்.

அடுத்தது, தவறான உறவுகள் பிள்ளைகள் வாழ்வைச் சீர்குலைத்து விடுகிறது. தேவனுடைய வேளைக்குக் காத்திராமல் ஆபிரகாம் அடிமையோடு சேர்ந்து பெற்றெடுத்த பிள்ளை இஸ்மவேலினால் குடும்பத்திற்குள்ளும் சமாதானம் இல்லை; அவனை வெளியே விட்டபோதும் சமாதானம் இல்லை; இஸ்மவேலுக்கும் ஈசாக்குக்கும் நித்தமும் சண்டை.

தேவபிள்ளையே, என்ன சோதனை வந்தாலும், கர்த்தரை நம்பித் திடன்கொள். அப்போது தேவன் உன் பிள்ளைகளைக் காப்பார். திருமணத்திற்குப் புறம்பான எந்த உறவையும் தேவன் அங்கீகரிக்கவே மாட்டார். இஸ்மவேல் ஆபிரகாமின் பிள்ளை என்றதால், தேவன் அவனை உடன்படிக்கையின் பிள்ளையாக அங்கீகரிக்கவில்லை. இன்று பொறுப்பற்று நடக்கும் பெற்றோரினாலே பிள்ளைகளின் வாழ்க்கை சீரழிகிறது. வெறுப்படைந்த பிள்ளைகள் சமுதாயத்திற்கே சவாலாக மாறிவிடுகிறார்கள். இது தேவைதானா? தேவபிள்ளையே, நீ தேவனை நம்பு. திடமாயிரு. குடும்ப உறவைக் காத்துக்கொள். விபசாரம் என்ற கொடிய அரக்கனிடமிருந்து நம்மைத் தேவன் தப்புவிப்பாராக.

"கர்த்தாவே, கிருபையாய் நீர் தந்த குடும்பத்தையும் பிள்ளைகளையும் சீரான வழியிலே நடத்த என் வாழ்வை முன்மாதிரியாக மாற்றிப்போடும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்
8
ஞாயிறு

வாசிப்பு: யோசுவா 12:1-8

# தவறான வழி பாவமே!

'களவு செய்யாதிருப்பாயாக'(யாத்திராகமம் 20:15)

நமது தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் அடிக்கடி 'ராபின் ஹுட்' காட்சிகள் இடம்பெறுவதை அறிவோம். பிள்ளைகளோடு பெரியவர்களும் அதை விரும்பிப் பார்ப்பார்கள். சட்டத்தை மீறியதால் காட்டுக்குள் தப்பியோடி மறைந்து வாழும் அந்தக் கதாபாத்திரம் பணக்காரர்களைக் கொள்ளை யடித்து ஏழைகளுக்கு உதவிசெய்வதாகவே காட்சிகள் வருகின்றன. இன்று நடக்கும் அநேக சம்பவங்களும், வெளியாகும் படங்களின் கதைகளும்கூட இவ்விதமாகவே அமைந்திருக்கிறது. அதுதான் சரி என்று பார்ப்பவர்களும் வாசிப்பவர்களும் தலையாட்டும் அளவிற்கு கதையைக் கோர்த்து எழுதியிருப் பார்கள். நல்ல காரியமானாலும் அதை அடையும் இந்த வழி களவுதான், பாவம்தான் என்று சிந்திக்கமுடியாத அளவுக்கு மனிதர்களின் மனங்களை பிசாசானவன் திசை திருப்புகிறான் என்பதை நாமாவது உணரவேண்டாமா?

இவ்வுலகிலுள்ள அனைத்தும் கடவுளுக்கு மாத்திரமே சொந்தம். அதனை கடவுள் மனிதனுக்குக் கொடுத்திருக்கிறார். ஆகவே, ஒவ்வொரு மனுஷனும் தனக்கென்றுள்ள சொத்துக்கும் பணத்திற்கும் உரிமையுள்ளவன் என்பதை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். சமுதாயம் சீர்குலையாமலிருக்க இது அவசியம். இல்லையானால் கர்த்தர், கானான் தேசத்தை கோத்திரங் களுக்கு எல்லையிட்டுப் பிரித்துக் கொடுத்திருப்பாரா? மனுஷன் தானாக அதனை இன்னொருவனுக்குக் கொடுக்கும்வரைக்கும் அவனுக்குரியது அவனுக்குரியதுதான். இதன் அடிப்படையில், "இந்த எட்டாவது கற்பனை யானது நேராகவோ சுற்றுவழியிலோ, நேர்மையற்ற முறையில் மற்றொருவரு டைய பொருட்களை அல்லது பணத்தை அடைந்துகொள்ள எடுக்கும் எந்த முயற்சியையும் செயலையும் செய்யக்கூடாது" என்பதாக ராபர்ட்ரீட் தமது புத்தகமொன்றில் எழுதியுள்ளார். ஆம், இந்தக் கட்டளை ஆஸ்தியின் பெறுமதியை நமக்குக் கற்றுத்தருகிறது. களவு என்றதும், நமக்கும் அதற்கும் சம்பந்தமே இல்லை என நாம் நினைப்பதுண்டு. ஆனால் இன்னொருவருடை யதை எடுப்பது, பறிப்பது, திருடுவது, உரிமையாக்குவது, திருப்பிக் கொடுக் கத் தவறுவது, பாதுகாக்கத் தவறுவது, யாவுமே களவுக்குள் அடங்கும்.

ஆம், அடுத்தவருக்கு உரிமையானதை, எனக்கு உரிமையாக்குவது களவுதான். ஏழைக்கு உதவுவதற்காக பணக்காரனின் பணத்தைத் திருடுவ தும் களவுதான். நாம் தேவனிடமும் மனுஷரிடமும் களவு எடுக்கிறோம் என்ப தைக் கேட்பது கசப்பானாலும், அது உண்மை. களவு பாவம். தேவனுக்கும் பிறருக்கும் துக்கம் கொடுக்காதபடி நம்மைக் காத்துக்கொள்வோமாக.

"உமக்குச் சொந்தமானதை எனக்குத் தந்தவரே, எனக்குரியதில் மாத்திரம் திருப்திப்படவும், பிறனுக்குரியதில் ஆசைப்படாமல் இருக்கவும் அருள் செய்யும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்
9
திங்கள்

வாசிப்பு: எரேமியா 21:4-10

# உனது தெரிந்தெடுப்பு

...ஆகையால், நீயும் உன் சந்ததியும் பிழைக்கும்படிக்கு, நீ ஜீவனைத் தெரிந்துகொண்டு...' (உபாகமம் 30:19)

"மாறி மாறி பிரச்சினைகள் வந்துகொண்டுதான் இருக்கிறது. வாழ்க்கையே சலித்துவிட்டது" இது அநேகருடைய மன ஆதங்கம். மறுபுறத்தில் பிரச்சினைகளும் கஷ்டங்களும் மாத்திரமே நமது கண்களுக்குத் தெரிகிறது என்பதுதான் எமது பிரதான பிரச்சினை என்றும் சொல்லலாமே! உலகம் பாவத்தில் விழுந்திருந்தாலும், நமக்காக வைக்கப்பட்ட நன்மைகள் எதையும் தேவன் அகற்றிப்போடவில்லை. அப்படியானால் நமது பிரச்சினைகளுக்கும் தோல்விகளுக்கும் முக்கிய காரணம் நமது தவறான தெரிந்தெடுப்பே என்றால் மிகையாகாது. எந்தவொரு விடயத்திற்கும் இரண்டு பக்கங்கள் உண்டு. இதில் நமது தெரிந்தெடுப்புதான் என்ன? வெளிநாடு போவதற்கு முழுமூச்சாகப் பிரயாசப்பட்ட ஒருவன், அது கிடைக்காததால் மனமுடைந்து, மறுபடியும் பல இலட்சங்களைச் செலவு செய்ய தயாராகிறான். இன்னொருவன், வெளிநாடு மறுக்கப்பட்டதும், உள்நாட்டிலுள்ள நல்லதும் தனக்குத் தகுந்ததுமான ஒரு வழியைத் தெரிந்துகொண்டு முயற்சித்தான். நல்ல நிலைக்கு உயர்ந்தான். வித்தியாசத்தைக் கவனித்தீர்களா!

நமது வாழ்க்கைப் பாதையில் நாம் தோல்விகளைச் சந்திக்கலாம். ஆனால் அதற்குள் மாண்டுபோகக்கூடாது. நமது தெரிந்தெடுப்பிலுள்ள சிறிய, பெரிய தவறுகளை சரிசெய்து முன்னேறிச் செல்லுவதுதான் வாழ்வில் வெற்றியைத் தருகிறது. நன்மை தீமை, ஜீவன் மரணம் இப்படி ஜோடி ஜோடியாக நமக்கு முன் தேவன் வைத்திருந்தாலும், தெரிந்தெடுக்கும் உரிமையை அவர் நம்மிடம் விட்டுவிட்டாலும், அவர் நம்மேல் கண்ணை வைத்து நமக்கு ஆலோசனை சொல்லும் தேவன். நீயும் உன் சந்ததியும் நன்றாய் வாழ்வதற்கு நன்மையை, ஜீவனைத் தெரிந்தெடு என்று நல்ஆலோசனை தருகிறார்.

அன்று யூதாவுக்கு, தேவன் ஒரு தெரிந்தெடுப்பையும் கூடவே நல் ஆலோசனையையும் கொடுத்தார். பாபிலோன் ராஜா சிறைபிடிக்கும்போது, அவனோடு புறப்பட்டுப் போகிறவன் பிழைப்பான்; மாட்டேன் என்று நகரத்திலே தங்கிவிடுபவன் அழிவான். இதிலே எதைத் தெரிந்தெடுப்பது? சிறைபிடிக்கப்படுதல் தோற்றுப்போன மனநிலையைக் கொடுக்கிறது. மனுஷீகம் அதற்கு இடங்கொடாது. ஆனால் கர்த்தரோ அதுவே 'பிழைக்கும் வழி' என்றார். அப்படியே சிறைபிடிக்கப்பட்டபோது எதிர்ப்புத் தெரிவிக்காமல் போனவர்கள் திரும்பவும் யூதா தேசத்திற்குள் வந்தார்கள். தவறான தெரிந்தெடுப்பைச் செய்தவர்களோ அழிந்துபோனார்கள். தேவபிள்ளையே, கர்த்தருடைய வார்த்தை எதைச் சொல்கிறதோ அதை அப்படியே செய்யவேண்டியதே நமது தெரிந்தெடுப்பாக இருக்கட்டும். சுயமாக வழிகளைத் தெரிந்துகொண்டு இதுவரை அனுபவித்த இன்னல்கள் போதுமே!

"கர்த்தாவே, உமது வார்த்தை சத்தியம். அது தீமைபோல தெரிந்தாலும்கூட உமக்கே கீழ்ப்படிவதைத் தெரிந்தெடுக்க அருள்செய்யும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்
10
செவ்வாய்

வாசிப்பு: லூக்கா 19:1-10

# உள்ளது போதுமே!

...நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் (லூக்கா 19:8)

ஒரு பெண்கள் குழுவினரின் ஆராதனையைப் பற்றி ஒரு பிரசங்கியார் எழுதிய குறிப்பு இது. "பலர் எழுந்து கர்த்தர் அருளிய ஆசிகளைக் குறித்துச் சாட்சி கூறினர். நான்கு பெண்கள் கூறிமுடித்த பின் கூட்டத்தை நடத்தியவர் மேலும் ஒருவரை சாட்சி சொல்லும்படி கேட்டுக்கொண்டார். அங்கிருந்த ஒரு பெண் எழும்பி: 'இங்கே சாட்சி சொன்ன நான்கு பேரும் எனக்குப் பணம் திருப்பிக் கொடுக்கவேண்டியவர்கள். நானும் என் குடும்பமுமோ மிகுந்த கஷ்டத்தில் அரைப்பட்டினியாய் இருக்கிறோம். இப்படியிருக்க நான் எப்படி எதை சாட்சி சொல்லுவது?' என்று வேதனையோடு கூறி அமர்ந்தாள்". 'ஊழியத்திற்கு அதிகமாகக் கொடுத்ததில் பணம் குறைந்துவிட்டது. தர வேண்டிய ரூபாய் இரண்டாயிரத்தை மிக விரைவில் தந்துவிடுவேன்' என்று ஒருவர் ஒரு விதவைத் தாயாருக்குச் சாட்டுச் சொன்னாராம்.

பிரியமானவனே! பிறருடைய புத்தகங்கள் எத்தனை நம்மிடத்தில் உண்டு? பிறருடைய பாத்திரங்கள் எத்தனை நம்மிடத்தில் உண்டு? நம்மில் எத்தனைபேர் அலுவலக நேரங்களைக் களவாடுகிறோம். பிந்திப்போய் முந்தி கையெழுத்திடுகிறோம். வேலை நேரம் 9 மணிக்கு ஆரம்பம் என்றால், 9 மணிக்குத்தான் காலை ஆகாரம், தேனீர் எல்லாம்; அதன்பின் அழகுபடுத்தி, பின்னர் பத்திரிகையை, தியானப் புத்தகத்தை, அன்றைய வேதப்பகுதியைக் கூட அலுவலகத்திற்கு வந்துதான் வாசிக்கின்றனர். இவை களவில்லையா?

தரம் குறைந்த பொருட்களை விற்பதும், ஒரு விலைக்கு சாமான் வாங்கிவிட்டு வேறொரு விலையைச் சொல்லி அம்மாவிடம் காசு வேண்டுவதும்கூட களவுதான். இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம். இவை யாவும் பிறரிடம் செய்யும் களவுகள். மனந்திரும்பிய ஒருவன் தான் செய்த வற்றை உணரும்போது, களவு எடுத்ததற்காக மன்னிப்புக் கேட்பது மாத்தி ரமல்ல, எடுத்ததைத் திரும்பக் கொடுக்கவும்வேண்டும். அதைத்தான் சகேயு நாலத்தனையாய் செய்துகாட்டினார். அதுதான் உண்மையான மனந்திரும் புதல். ஆனால் இன்று மனந்திரும்பிவிட்டதாகக் கூறுபவர்களே மாறுபாடாக நடக்கிறார்கள். அந்த வஞ்சகத்தில் நாம் விழாதிருப்போமாக.

விசுவாசியே, திருப்பிக் கொடாத கடன்கள் - பொருட்கள் இருந்தால் அவற்றைக் கொடுத்து சரிசெய்வோமாக. நமது பிதா ஐசுவரிய சம்பன்னராக இருக்கும்போது நமக்கு மற்றவர் பொருள் எதற்கு? மற்றவர் பணம் எதற்கு? பிறருடைய முறுமுறுப்புக்கு நாம் ஏன் ஆளாகவேண்டும்? நமக்கு உள்ளது போதும் என்ற மனதுடன், அதற்குள் மனரம்மியத்துடன் வாழுவோமாக.

"கர்த்தாவே, நீர் எனக்குத் தந்தது போதும் என்ற மனதுடன், உள் இருப்ப வற்றுடன், மனரம்மியத்துடன் வாழ எனக்குக் கற்றுத்தாரும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்
11
புதன்

வாசிப்பு: எரேமியா 2:21-29

# அடக்கிக்கொள்

'...அடக்கிக்கொள் என்றால், நீ: அது கூடாத காரியம், நான் அப்படிச் செய்யமாட்டேன் ...என்கிறாய்.' (எரேமியா 2:25)

பல சந்தர்ப்பங்களில் நாம் நம்மையே சமாதானப்படுத்திக்கொண்டு, நமது சுயவிருப்பங்களின்படி நடப்பதுண்டு. சிகரட் குடிக்கக்கூடாது, சினிமா பார்க்கக்கூடாது, நவநாகரீகமாக உடுத்தக்கூடாது என்று வேதத்திலே எழுதப்பட்டிருக்கிறதா? இப்படியான கேள்விகளை அநேகர் கேட்பதுண்டு. இது அறிந்து கொள்வதற்காகக் கேட்கப்படும் கேள்விகளல்ல; தமது செயல்களை நியாயப் படுத்துவதற்காகக் கேட்கப்படும் கேள்விகள். உண்மைதான், வேதாகமத்திலே இதற்குரிய நேரடியான பதில்கள் இல்லை. ஆனால் நாம் நடப்பதற்கான செம்மையான வழியைக் குறித்த தெளிவான போதனைகள் உண்டு. மேலும், புகை பிடிப்பதா? இல்லையா? என்பதைத் தெரிந்துகொள்ள சிகரட் பெட்டியே நமக்கு ஆலோசனை கொடுக்கிறதே! "சிகரட் குடிப்பது உடம்பைக் கெடுக்கும்" என்ற அறிவுரையை அப்பெட்டியிலே காணலாம். அதைவிட வேறு என்ன அறிவுரை தேவை, நாம் குடிப்பதா இல்லையா என்பதைத் தீர்மானிக்க?

இனப்பெருக்கக் காலத்தில் ஜோடிக்காக தறிகெட்டு அலையும் மிருகங்களுக்கு தமது மக்களை ஒப்பிட்டுக் கூறுமளவிற்கு தேவனுடைய வேதனை எரேமியாவின் வார்த்தைகளில் வெடித்து வெளிவந்தது. கட்டுப்பாடின்றி, தாம் நினைத்ததைச் செய்துமுடிக்கும் அந்தக் குணம்; பணத்திற்காக, புகழுக்காக, சுயஆசைகளை நிறைவேற்றுவதற்காக, எந்தவொரு காரியத்தையும் செய்யத் தயங்காத குணம், இவற்றையெல்லாம் தேவன் கண்டிக்கிறார். தீமையும் பாவமும் மனிதனைத் தேடிவருவதில்லை. தேவனுடைய ஸ்தானத்தைக் களவாடும் எந்தவொரு விக்கிரகமும் நம்மைத் தன்னிடம் இழுப்பதில்லை. நாமேதான் அதைத் தெரிந்தெடுத்து இழுப்புண்டு போகிறோம். பின்னர் பயமின்றி அந்தப் பாவத்தைச் செய்கிறோம். நாளடைவில் அதற்கு அடிமையாகிவிடுகிறோம். இப்போது என் தெரிந்தெடுப்புகள் தவறு, அதிலிருந்து விடுதலையாக வேண்டும் என்ற எண்ணத்திலும் பார்க்க, என் தவறுகள் வெளியே தெரியக் கூடாதே என்ற ஆதங்கம்தான் நமக்குள் அதிகமாகின்றது. இது தேவைதானா?

'அடக்கிக்கொள்' என்று தேவன் நமக்கு அறிவுறுத்துகிறார். சிலசமயம் நமது நினைவுகள் தவறலாம். ஆனால் அதை உணர்ந்து நல்வழிக்குத் திரும்ப வேண்டும். நமது ஆசைகள் தெரிந்தெடுப்பாகாது. நாம் எதையாவது விரும்பி, அதை அடைவதற்காக எதையும் செய்வேன் என்றதொரு நிலை நமக்குள் இருக்குமானால் அந்த நினைவுக்கு நாம் அடிமையாகிறோம் என்பதோடு, நாம் தேவனைவிட்டு விலகுகிறோம் என்பது உண்மையாகும். நல்லது கெட்டது இவ் உலகில் இருக்கும். ஆனால் அவற்றில் நீ எதைத் தெரிந்தெடுக்கப்போகிறாய்?

"பிதாவே, என் தவறான ஆசைகளை வெறுத்து, என்றும் உம்மையே பிரியப் படுத்தி நடப்பதையே தெரிந்தெடுக்க எனக்கு உதவிபுரியும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்
12
வியாழன்

வாசிப்பு: நீதிமொழிகள் 1:26-33

# ஜெபம் ஒரு பொருட்பட்டியலல்ல

"என் தேவனே, நான் பகலிலே கூப்பிடுகிறேன், உத்தரவுகொடீர், இரவிலே கூப்பிடுகிறேன், எனக்கு அமைதலில்லை." (சங்கீதம் 22:2)

மளிகைக் கடைக்குப் போகும்போது சிலர் ஒரு பொருட்பட்டியலையும் கொண்டு போவார்கள். எல்லாப் பொருட்களையும் ஒன்றுவிடாமல், ஒரே முறையில் வாங்கி வருவதே அதன் நோக்கம். இதேபோல ஒரு பட்டியலை மனதில் வைத்துக்கொண்டு ஜெபத்தை ஆரம்பித்து, ஒன்று விடாமல் எல்லாவற்றையும் சொல்லி, அவற்றை அனுப்பிவிடும் என்று ஜெபத்தை முடிப்பவர் அநேகர்.

ஜெபம் ஒரு பொருட்பட்டியலல்ல. ஜெபத்திலே ஆராதனை இருக்க வேண்டும். அதாவது தேவன் யார், அவரது மகத்துவம் என்ன, அவரது வல்லமை, மகிமை இவற்றை உணர்ந்து அவரைத் துதித்தலும் நன்றிகூறுதலும் இருக்கவேண்டும். அவர் செய்த நன்மைகளுக்காக, அவரது ஈவுகளுக்காக, அவர் எமக்குத் தந்த மீட்புக்காக நன்றி செலுத்துதல்; பாவ அறிக்கை, அவர் சமுகத்துக்கு முன்னால் நிற்கும்போது நாம் பாவிகள் என்பதையும், குறைவுள்ளவர்கள் என்பதையும் உணர்ந்து மன்னிப்புக் கோருதல்; அடுத்து பிறருக்காக நமக்காக மன்றாடுதல்; அத்தோடு, எம்மை முழுமையாக அவர் சித்தத்திற்காக ஒப்புக்கொடுத்தல் எல்லாமே இருக்கவேண்டும். இத்தனை அம்சங்கள் ஜெபத்தில் அடங்கியிருக்க, மளிகைக்கடை பட்டியலைப்போல தேவைகளுக்கு மாத்திரம் இன்னமும் ஜெபித்துக்கொண்டிருக்கலாமா?

பொருட்கள் தேவைப்படும்போது பொருட்பட்டியலைப் போட்டுக்கொண்டு அதை வாங்குவதற்காக கடைக்குப் போவதுபோல தேவைகளும், நெருக்கங்களும், பிரச்சினைகளும் தலைக்குமேல் வெள்ளம்போல வரும்போதுதான் சிலர் ஆண்டவரின் பாதத்தைத் நோக்கி ஜெபத்துக்காகப் போவார்கள். சிலர் அப்படிப் போக விரும்பாமல் தங்கள் ஜெபப்பட்டியலைத் தூக்கிக்கொண்டு ஒவ்வொரு ஊழியக்காரரையும் நோக்கி ஜெபத்துக்காகப் போவார்கள். இன்றைய வாசிப்புப் பகுதி இப்படிப்பட்ட ஜெபங்களை ஏறெடுக்காதபடி எச்சரிக்கிறது.

அன்பானவர்களே, ஜெபம் என்பது ஒரு உறவு. அது நாளாந்தம் கட்டப்படவேண்டியது. தேவை ஏற்படும்போது மட்டும் தொலைபேசியைச் சுழற்றிக் கதைப்பதுபோல ஜெபத்தைச் செய்யாதீர்கள். தேவனோடு உறவுகொண்டு அவருக்குச் செவிகொடுப்பவன் விக்கினமின்றி வாசம்பண்ணி, ஆபத்திற்குப் பயப்படாமல் அமைதியாய் இருப்பான் என்பது தேவனுடைய வார்த்தை. அதை எமது வாழ்விலும் உண்மையாக்குவோம். பொருட்பட்டியல் போன்ற எமது ஜெபங்களை மாற்றி ஆராதனையோடு ஆரம்பித்து ஒப்புக்கொடுத்தலோடு முடிவடையும்படியான, தேவன் அங்கீகரிக்கும் ஜெபங்களை ஏறெடுப்போம்.

"அன்பின் ஆண்டவரே, நான் கூப்பிடும்போது நீர் செவிகொடுக்கும்படி, உமக்கு நான் செவிகொடுத்து, உம்மோடு அனுதினமும் உறவுகொள்ளும்படியாக எனது ஜெபங்களை மாற்ற எனக்கு உதவிசெய்வீராக. ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்
13
வெள்ளி

வாசிப்பு: தானியேல் 1:1-17

# தெரிந்தெடுப்பும் தீர்மானமும்

"...தன்னைத் தீட்டுப்படுத்தலாகாதென்று, தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணிக்கொண்டு, தன்னைத் தீட்டுப்படுத்தாதபடி ....வேண்டிக்கொண்டான்." (தானியேல் 1:8)

வாலிபனான தானியேலின் வாழ்விலே ஒரு வித்தியாசமான தெரிந்தெடுப்பை நாம் காண்கிறோம். தானியேலுக்கும் பெரியதொரு இக்கட்டு வந்தது. வாலிப வயதில் சிறைபிடிக்கப்பட்டு, பாபிலோனுக்குக் கொண்டுசெல்லப்பட்டார். குடும்பத்தை இழந்து வாலிப வயதின் சுதந்திரத்தை இழந்து நின்றார். அதற்காக தேவனைக் குறைகூறினாரா? இல்லை. எதிர்காலமே இருண்டுபோன நிலையிலே அரண்மனைக்குக் கொண்டுசெல்லப்பட்ட அவருடைய பெயரும் மாற்றப்பட்டது. இவ்வளவையும் பொறுத்துக்கொண்ட தானியேல் உணவுவிடயம் வந்ததும் விழித்துக்கொண்டார். இங்கு ராஜாவின் கட்டளையா? அல்லது ராஜாதி ராஜாவின் பிரமாணங்களா? எதற்கு இணங்குவது? தானியேலுக்குத் தெரிந்தெடுப்பது கடினமாக இருக்கவில்லை. ஏனெனில் அவருடைய மனம் தெளிவானதாயிருந்தது. அவரின் இந்த உறுதியை உடைத்துப்போடக்கூடிய சூழ்நிலை அமைந்தபோதும், அந்த சூழ்நிலை அவரைத் தன் கையில் சிறைபிடிக்க முன்னர், சூழ்நிலையை அவர் தன் கையில் எடுத்துக்கொண்டார். இக்கட்டான சூழ்நிலை அவருடைய தெரிந்தெடுப்பையும் உறுதியையும் உடைத்தெறியமுன்னர், இதுவரை சந்தித்திராத இந்தச் சூழ்நிலையிலும் தேவனையே பற்றிப்பிடிக்கத்தக்க தருணமாக அதை மாற்றிக்கொண்டார்.

தேவனுக்குரிய காரியங்களை தெரிந்தெடுத்தால் போதாது. அதிலே உறுதியாய் நிற்கத் தீர்மானிக்கவேண்டும். அன்று தானியேலுக்கு ஏற்பட்ட சூழ்நிலை இன்றும் அநேக வாலிபர்களுக்கு ஏற்படுகிறது. தவிர்க்கமுடியாத காரணங்களினால் பெரியவர்களும்கூட குடும்பத்தைவிட்டு நாட்டைவிட்டு தூரமாகப்போகவேண்டிய நிலையேற்படுகிறது. இந்நிலையில் நமக்கு வருகின்ற சோதனைகளில் நாம் எவ்வளவு தூரம் உறுதியாக நிற்கிறோம்? உணவு எல்லோருக்கும் பிடித்தமானதொன்று. அதிலும் ராஜபோஜனமோ கிடைக்காத ஒன்று. அப்படியிருந்தும் தானியேல் தடுமாறவில்லை. உணவிலே கட்டுப்பாடாய் இருக்க தன்னைப் பழக்கப்படுத்திக்கொண்ட தானியேலுக்கு, தானே சிங்கத்திற்கு உணவாகப் போடப்பட்டபோது எந்தவித பிரச்சனையும் இருக்கவில்லை.

தேவபிள்ளையே, சோதனை நேரமே நமது தெரிந்தெடுப்பைப் பயிற்றுவிக்கின்ற நேரம். கவர்ச்சி உடைகளிலும் ருசியான உணவிலும் மயங்கியது போதும். சிங்கக்கெபி போன்ற சோதனையில் நாம் மாண்டுபோவதற்குக் காரணமே இந்த மயக்கம்தான். நமது தெரிந்தெடுப்பு தடுமாறிப்போக விடக்கூடாது. கர்த்தருக்குள்ளான தீர்மானங்கள், நற்பண்புகள், தவறிப்போக விடக்கூடாது. தவறவிட்டால் ஆவிக்குரிய, சரீரத்திற்குரிய சகல சுகங்களையும் இழந்துவிடுவது உறுதி. தெரிந்தெடுப்பில் எப்போதும் உறுதியாக இருப்போமாக.

"கர்த்தாவே, சூழ்நிலைகள் நமது தெரிந்தெடுப்புகளைச் சிதைத்துவிடாமல் எப்போதும் நான் உமக்குள் உறுதியாயிருக்கப் பெலன் தாரும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்
**14**
சனி

வாசிப்பு: ஏசாயா 30:18-21

# ஒரு சோடி பாதச்சுவடு

'...வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று ...சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்.' (ஏசாயா 30:21)

தம்மை இவ்வுலகிற்கு வெளிப்படுத்தச் சித்தம்கொண்ட தேவன், ஆபிரகாமை தெரிந்தெடுத்து, அவர்மூலமாக ஒரு சந்ததியை உருவாக்கினார். அதாவது அந்த ஜாதி என்ன செய்தாலும், அவர்களுக்கு என்ன நேர்ந்தாலும் அது, "அவர்களுடைய தேவன் யார்?" என்ற கேள்வியை எழுப்புமளவுக்கு தாக்கத்தைக் கொண்டுவரக்கூடியது. ஆகவேதான், அப்பப்போ அவர்கள் செய்த தவறான தெரிந்தெடுப்புகள், நடக்கைகளின் காரணமாக, தேவன் அவர்களை சிறையிருப்புக்கும் சிதறடிப்புக்கும் ஒப்புக்கொடுத்தார். ஒரு குறிப்பிட்ட கால எல்லைவரை இஸ்ரவேல் என்றதொரு தேசமே உலக வரைப்படத்தில் காணப் படாத அளவுக்கு யூத மக்கள் கிறிஸ்துவின் முன்னரும் பின்னரும் துன்பத்தின் அப்பத்தையும் உபத்திரவத்தின் தண்ணீரையும் அனுபவித்தார்கள். தவறான வழிகளைத் தெரிந்தெடுக்கும்போது தேவன் தமது பிள்ளைகளைத் திருத்தும்படி அவர்களுக்கு பாடங்களை படிப்பிக்கிறார். ஆயினும் துன்பத்தின் மத்தியிலும், தேவன் அவர்களைக் கைவிடவில்லை. 1948ம் ஆண்டு திரும்பவும் இஸ்ரவேல் தேசம் உருவானது. இன்றும் அது நிலைத்திருக்கிறது.

'பாதச்சுவடுகள்'*(Footprints)* என்ற தலைப்பில் ஒரு சிந்தனை பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது: ஒருவர், ஆண்டவரோடுகூட கடற்கரையோரமாக நிற்பதாக ஒரு கனவு கண்டார். அப்போது, கடந்துசென்ற தன் வாழ்வின் சில காட்சிகளை இருண்ட மேகங்களுக்கூடாகப் பார்த்தார். அவை ஒவ்வொன்றிலும் இரண்டு சோடி பாதங்கள் மணலிலே பதிந்திருந்த அடையாளத்தைக் கண்டார். கடைசிக் காட்சிக்கு வந்தபோது, திரும்பி அந்தப் பாதச்சுவடுகளைப் பார்த்தார். அங்கே அந்தப் பாதையிலே பல இடங்களில் ஒருசோடி பாதச்சுவட்டை மாத் திரம் கண்டார். அந்த வேளைகள்தான் தன் வாழ்வில் துன்பமான வேளைகள் என்று உணர்ந்த அவர், தேவனிடம் 'ஆண்டவரே, உம்மைப் பின்பற்றுவேன் என்று தீர்மானம் செய்தபோது, என் வழிகளெல்லாம் என்னோடு பேசுவேன் நடப்பேன் என்று சொன்னீரே; ஆனால் அதிக துன்பத்தில் நான் நடந்த நாட்களில் ஒரேயொரு பாதச்சுவட்டையே காண்கிறேன். நீர் எனக்குத் தேவைப் பட்டபோது நீர் என்னை விட்டுவிலகி விட்டீரே' என்று ஜெபித்தாராம். அதற்குக் கர்த்தர்: "என் மகனே, நான் உன்னை ஒருபோதும் விட்டுவிலகமாட்டேன். முன்னர் நீ கண்டது என்னுடையதும் உன்னுடையதுமான பாதச்சுவடுகள். பின்பு நீ கண்டது உன் துன்பநேரத்தில் உன்னைத் தூக்கிச் சுமந்த என்னுடைய பாதச் சுவடுகள்" என்றார். ஆம், நம்முடைய தேவன் நம்முடனே நடக்கிறவர்; முடியாத போது தூக்கிச் சுமக்கிறவர். அவர் நம்முடன் இருக்கும்போது, நாம் வேண்டு மென்றே தவறான பாதைகளைத் தெரிவு செய்வது ஏன்? சிந்திப்போமாக.

"பிதாவே, துன்பமோ இன்பமோ, வலது இடதுபுறம் சாயாமல் நீர் கூப்பிட்டுச் சொல்கின்ற உத்தம வழிநடக்க அடியேனுக்கு உதவிசெய்யும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்
15
ஞாயிறு

வாசிப்பு: யோவான் 15:1-8

# கிறிஸ்துவில் கனிகொடுங்கள்

"ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்துபோவான்."
(யோவான் 15:6)

என் வீட்டுத் தோட்டத்தில் அழகிய பூஞ்செடி ஒன்றின் ஒரு கிளை வாடிப் போயிருந்தது. என்ன நடந்தது என்று அவதானித்தபோது, அக்கிளை சிறிதளவு ஒடிந்து மரத்தைவிட்டு விலகிக் காணப்பட்டது. இதைத்தானா நமது ஆண்டவர், செடியாகிய தம்மிலே நிலைத்திராத எந்தவொரு கொடியும் உலர்ந்து, கனி கொடுக்காதபடி பிரயோஜனமற்றதாகிவிடுகிறது என்று கூறினார் என சிந்தித்தேன். அது எத்தனை உண்மையாகப்பட்டது.

செடியில் கொடி நிலைத்திராமல் போவதற்கு இரு காரணங்களை நாம் கூறலாம். ஒன்று, ஏதாவது காரணத்தினால் கிளை மரத்திலிருந்து ஒடிந்து, வாடி, பயனற்றதாகி விழுந்துபோகிறது. அடுத்தது, செடியிலே கொடி இன்னும் இணைந் திருந்தாலும், கனிகொடுக்காமல், வெளிப் பகட்டுடன் காணப்படுவதால் தோட்டக் காரனே அதை வெட்டி எறிந்துவிடுகிறான். இவை இரண்டையும் விட இன்னொரு விடயமும் உண்டு. இந்தக் கிளைகள் எந்த மரத்தைச் சார்ந்திருக்கின்றனவோ, அந்த மரம் கெட்டதானால், நல்ல கனிகொடாத அந்த மரமே வெட்டப்பட்டு அக்கினிக்கு இரையாக்கப்படுகிறது (மத்.7:18). அப்போ கிளையின் கதி என்ன?

மெய்க் கிறிஸ்தவனின் வாழ்வானது, "இல்" என்ற இரு எழுத்துகளுக் குள் தள்ளாடுகிறது எனலாம். இயேசு'வில்', என்'னில்', பிற'ரில்', இம்மூன்றிலும் உள்ள 'இல்' தான் நமது ஆவிக்குரிய வாழ்வுக்கு அத்திபாரமிடுகிறது. "என்னில் கனிகொடாத" என்று ஆண்டவர் சொன்னாரெனில், 'இயேசுவில்' அல்லாமலும் கனி கொடுக்கமுடியும் என்பது தெளிவு. அது கனியாக இருந்தாலும் ஆவிக்குரிய கனியாயிருக்குமா? எல்லா மனுஷரிலும் நற்குணங்கள் உண்டு; நற்கிரியைகளும் உண்டு. ஆனால், அவற்றின் ஊற்று எங்கிருந்து புறப்படுகிறது என்பதே காரியம். திராட்சைச்செடியின் கொடியில் அத்திப்பழம் பழுக்குமா? மாமரத்தின் கிளையிலே புளியம் பூ பூக்குமா? எந்த மரத்தைச் சார்ந்திருக்கிறோமோ அதன் தன்மைகள் தான் நம்மிலே வெளிப்படும். ஆகவே நம்மில் வெளிப்படும் காரியங்களும் நாம் யாரைச் சார்ந்திருக்கிறோம் என்பதையே பொறுத்திருக்கிறது.

பிரியமானவனே, நீ யாரில் நிலைத்திருக்கிறாய் என்பதை இந்நாளிலே நிதானித்துக்கொள். கிறிஸ்துவிலா? நமது சுயத்திலா? அல்லது பிற மனுஷரிலா? தம்மில் நிலைத்திருந்து கனிகொடுக்கும்படி ஆண்டவர் நம்மை அழைக்கிறார். அதாவது அவருக்கே கீழ்ப்படிந்திருந்து அவருக்குள் நாம் பயனுள்ளவர்களாக வாழவேண்டும். அவரிடமிருந்தே பெற்றுக்கொண்டு அவருக்காகவே கொடுக்க வேண்டும். அவரில் நிலைத்திராத வாழ்வு இலகுவானதாகவிருக்கலாம். ஆனால் ஒருநாள் அது வெட்டப்பட்டு அக்கினிக்கு இரையாக்கப்படும் என்பது உறுதி.

"பிதாவே, உம்மிலே நிலைத்திருக்கவும், உம்மிலே மாத்திரம் கனிகொடுக்கவும் இந்நாளிலே என்னை உமது பாதத்திலே தருகிறேன். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்
16
திங்கள்

வாசிப்பு: ரோமர்7:23-8:2

# வேறுபட்ட மனநிலைகள்

'தேவன் செய்வது எதுவோ அது என்றைக்கும் நிலைக்கும்...'
(பிரசங்கி 3:14)

நமது மனதில் எழுகின்ற நினைவுகளைக் குறித்து நாம் எப்போதாவது ஆராய்ச்சி பண்ணியிருக்கிறோமா? அல்லது சிந்தித்தாவது இருக்கிறோமா? நமது மனது கடிவாளம் இல்லாத குதிரையைப்போன்றது. நாம் விழிப்போடு அதை அடக்கவில்லையானால் அது எங்கேயோ பறந்து செல்லும். 'மனதின் யோசனைகள் மனுஷனுடையது' (நீதி.16:1). அதேசமயம், 'பட்டணத்தைப் பிடிக்கிறவனைப் பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன்' (நீதி.16:32) என்றும் வேதம் சொல்லுகிறது. நமக்குள் எழும் சிந்தனைகளை நினைவுகளை சீர்தூக்கிப் பார்த்தால், அநேகமான வேளைகளிலே இரண்டு நேர் எதிரான நினைவுகளுக்கிடையில் நாம் போராடுவதை நாமே கவனிக்கலாம். "சரியா பிழையா? போவதா இல்லையா? கர்த்தருடைய வார்த்தையா? எனது விருப்பமா?" பவுலுக்கும் இந்தப் பிரச்சனை இருந்தது. தேவனுடைய பிரமாணத்தை நிறைவேற்ற நினைக்கும் மனதின் போராட்டத்திற்கும், பாவபிரமாணத்திற்கு அடிபணியத் துடிக்கும் மாம்சத்தின் போராட்டத்திற்கும் இடையே பவுல் போராடினார்.

நமக்கும் சிலசமயம் 'இது என்ன வாழ்வு' என்றிருக்கும். அதேசமயம் 'வாழ்விற்கு அர்த்தமும் இருக்கும்' என்ற எண்ணமும் வரும். அன்றைய பிரசங்கியும் இப்படித்தான் இருந்தார். பிரசங்கி புத்தகம் முழுவதையும் நாம் படித்தால், இருவேறுபட்ட மனநிலைகளுக்கிடையில் பிரசங்கி போராடியதை புரிந்துகொள்ள முடியும். 'மாயை, மாயை, மாயை' என்று ஏறத்தாழ 37 முறை புலம்பியிருக்கிறார் பிரசங்கி. அதேசமயம், தேவனுக்குப் பயந்தவர்கள் நன்றாயிருப்பார்கள், தேவன் அதினதின் காலத்தில் சகலத்தையும் நேர்த்தியாகச் செய்திருக்கிறார் போன்ற வார்த்தைகளையும் தெளிவாகவே எழுதியிருக்கிறார்.

தேவபிள்ளையே, நீயும் குழம்பியிருக்கிறாயா? தேவனை நம்பக்கூடிய விதத்திலே காரியங்களும் இல்லை; அதேசமயம் அவரை நம்பாமல் இருக்கவும் முடியாது. ஒருபுறம் விசுவாசம், மறுபக்கம் அவிசுவாசம். குழப்பம் வரட்டும். ஏனெனில் அதுதான் தெளிவைத் தரும். மனதில் குழப்பம் வரும்போதெல்லாம், பவுலடியார் இயேசுவின்மூலம் தான் விடுதலையானதை நினைப்பார். அந்த நினைவே அவருக்கு வெற்றியைத் தந்தது. எல்லாம் மாயை என்ற பிரசங்கிகூட இறுதியில் தேவனுக்குப் பயந்து நடப்பது ஒன்றே நம்மை வாழவைக்கும் என்று எழுதுகிறார். பின்னர் நமக்குள் போராட்டம் எதற்கு? அவிசுவாசம் எதற்கு? ஏன் இரண்டு நினைவுகள்? எல்லாமே பாதகமாகத் தோன்றினாலும், அவற்றுக்கூடாக சகலத்தையும் சாதகமாக்கும் தேவனுடைய கரத்தை நோக்கிப் பார்க்க பழகினோமானால், அதுவே நமக்குக் கிடைக்கும் பெரிய வெற்றியாகும்.

"பிதாவே, எனக்குள் போராடும் மனநிலைகளை உம்மிடம் ஒப்படைக்கிறேன். குழப்பத்தை நீக்கி தெளிவையும் மனத்திடத்தையும் தந்தருளும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்
17
செவ்வாய்

வாசிப்பு: பிரசங்கி 12:12-14

# மாற்றுமருந்து

'ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்.' (பிரசங்கி 12:14)

வாழ்க்கையே அர்த்தமற்றது என்று ஒருவன் அலுத்துக்கொள்ளுவான் என்றால், அவன் தான் வாழும் வாழ்வின் நோக்கத்தை அறியாமற்போகிறான் என்றுதான் சொல்லவேண்டும்; அது அவனது தற்கால வாழ்வைப் பாதிக்கிறது. அதற்குரிய மாற்றுமருந்தாகிய தேவபயத்தோடும், தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிகின்ற மனதோடும் அவன் தேவனிடம் திரும்பவேண்டும். இல்லையானால் வியாதிகள் அவனைப் பிடித்துவிடும். அதாவது, இந்த வாழ்வைக் குறித்த ஒரு வெறுப்பு உண்டாகும். தொடர்ந்து எல்லாமே அநியாயம் என்ற முடிவுக்கு அவன் வந்துவிடுவான். அது அவனது மிகுதியான வாழ்வையும் நித்திய வாழ்வையும் பாதித்துவிடுகிறது. உதாரணமாக, 'ஒருவனுக்கு தேவன் செல்வத்தையும் சம்பத்தையும் கனத்தையும் கொடுக்கிறார்; அவன் என்ன இச்சித்தாலும் அதெல்லாம் அவனுக்குக் குறைவில்லாமல் கிடைக்கும்; ஆனாலும் அவைகளை அனுபவிக்கும் சக்தியைத் தேவன் அவனுக்குக் கொடுக்கவில்லை. அந்நிய மனுஷன் அதை அநுபவிக்கிறான்.' (பிரசங்கி.6:2) நமது மனுஷ கண்களுக்கு இதைப் பார்த்தால் அநியாயம் போலத்தானே தெரிகிறது. ஆனால் பிரசங்கி நமக்கு ஒரு காரியத்தை மாற்று மருந்தாகத் தந்துள்ளார். வாழ்க்கை அநியாயம் என்று எண்ணும் ஒவ்வொருவரும் அறியவேண்டியது என்னவெனில், ஆணோ பெண்ணோ, யார்யார், தேவபயமுள்ளவர்களாக, உணர்வுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பதைத் தீர்மானிப்பதற்கு தேவன் ஒவ்வொருவருடைய வாழ்வையும் செயலையும் நியாயத்தின் முன் நிறுத்துவார். அப்போது நாம் என்ன பதில் சொல்லுவோம்? யோபு பக்தனும் ஆதங்கத்தில் ஒருமுறை பேசினார். ஆனால் தேவன் வாய் திறந்தபோது யோபு வாயடைத்துப்போனார். அப்படியே நமது சிந்தனைகளையும் செயல்களையும் அறிந்தவர் நம்மை நியாயத்தில் நிறுத்தி கேள்வி கேட்பாரானால், நாம் அநியாயம் என்று எண்ணியவற்றின் நியாயங்கள் வெளிப்படும். அப்போது தலைகுனிய நேரிடுமே! ஆகவே, எல்லாவற்றிலும் தேவனைச் சார்ந்திருப்பதே நல்ல மருந்தாகும்.

தேவபிள்ளையே, நாம் யாவரும் நியாயத்தின்முன் ஒருநாள் நிறுத்தப்படுவோம். அன்று நியாயச்சட்டப் புத்தகமாகிய இந்த வேதவாக்கியங்களின் அடிப்படையிலேயே எல்லாம் விசாரிக்கப்படும். எழுதிக்கொடுக்காத நூதனங்களால் தேவன் நம்மைத் தண்டிக்கமாட்டார். ஆகவே, இன்றே இப்போதே கிறிஸ்துவண்டை சேருவோம். கடந்தகால பாவங்களை தேவனாகிய கர்த்தர் மறந்து மன்னிப்பார். ஆனால் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் கிறிஸ்துவின் பாதத்தில் அர்ப்பணித்துவிடுவோமாக. தேவன் நமக்கென்று கிறிஸ்துவுக்குள் வைத்திருக்கின்ற அந்தத் தகுதியைப் பெற்றுக்கொள்வோமாக!

"பிதாவே, உமது பிள்ளைகள் வாழ்வில் நீர் யாவையும் சரியாகவே செய்கிறவர். ஆகவே என்றும் உம்மைச் சார்ந்து வாழ கிருபை தாரும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பு: தானியேல் 1:8-20

# தீர்மானித்துச் செயற்படுங்கள்!

'நீ அவர்களுக்குப் பயப்படவேண்டாம், உன்னைக் காக்கும் படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன்...'(எரேமியா 1:8)

எமது மீட்புக்கான சகலவற்றையும் தேவன் செய்து முடித்துவிட்டார். அந்த மீட்பைப் பெற்றுக்கொள்ள நாம், எமது வாழ்வில் தீர்மானம் எடுக்க வேண்டும். எமது இதயக் கதவின் வாசலில் நின்று தட்டிக்கொண்டிருக்கும் இயேசுவை உள்ளே அழைக்க கதவைத் திறப்பதா? வேண்டாமா? கதவைத் திறந்து அவரை உள்ளே அழைப்போமானால், வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் நாம் தீர்மானங்கள் எடுக்கவேண்டியவர்களாக இருப்போம். தேவன் வலுக்கட்டாயமாக எதையும் எமக்குள் திணிக்கிறவர் அல்ல. எமக்கு முழுச் சுதந்திரத்தையும் அவர் கொடுத்திருக்கிறார். நாம் அவர் சித்தத்திற்குள் எம் வாழ்வைத் தத்தம் செய்தால் அவர் எம்மில் சுயாதீனமாகக் கிரியை செய்வார். இல்லையானால் அவர் நம்மைக் கட்டாயப்படுத்தமாட்டார்.

தானியேல் இராஜ போஜனத்தால் தன்னைத் தீட்டுப்படுத்தல் ஆகாது எனத் தீர்மானம் செய்துகொண்டான். அதைத் தேவனும் ஆதரித்தார். பாபிலோனுக்குச் சிறைப்பிடிக்கப்பட்டுப் போன தானியேலுக்கு இத்தீர்மானம் தொடர்ந்தும் தேவனுக்காய் உறுதியோடு நிற்க மிகவும் உதவி செய்தது. சிங்கக் குகையிலும் அவர் தன் விசுவாசத்தைக் கைவிட்டுவிடவில்லை. அதே போல் காணாமற்போன மகன், மீண்டும் தன்னுடைய தகப்பனிடத்துக்குப் போய் இன்னின்ன பிரகாரமாய்ச் சொல்லுவேன் என ஒரு தீர்மானம் பண்ணிக்கொண்டு புறப்பட்டுப் போனான். அந்தத் தீர்மானமே அவனுக்கு ஒரு புதிய வாழ்வைக் கொடுத்தது. தனது தந்தையின் பாசமிகு பிள்ளையாக வாழ மீண்டும் ஒரு அருமையான சந்தர்ப்பத்தைத் தேடிக் கொடுத்தது. எனவே தீர்மானம் எடுப்பதும் அதைச் செயற்படுத்துவதும் கிறிஸ்தவ வாழ்வுக்கு இன்றியமையாதது என்றால் அது மிகையாகாது.

நாம் கிறிஸ்துவை எம் இரட்சகராக ஏற்றுக்கொண்டதோடு எம் கிறிஸ்தவ வாழ்வு முடிந்துவிடவில்லை. தொடர்ந்தும் சாட்சியாக வாழவேண்டிய பொறுப்பு எமக்குண்டு. வாழ்வில் நாம் எடுக்கும் ஒவ்வொரு தீர்மானங்களுமே எமக்கு உதவி செய்கின்றன. எமது தீர்மானங்கள் வேதத்தின் அடிப்படையில் இருத்தல் அவசியம். தேவ வழிநடத்துதலோடு இருக்கவேண்டியதும் அவசியம். நமக்கு ஒரு தொழிலைத் தெரிந்தெடுக்கும்போதும், வாழ்க்கைத் துணையைத் தெரிவுசெய்யும் முக்கியபடிகளிலும், நிச்சயமாகவே தீர்மானம் முக்கிய பங்கு வகிக்கிறது. எமது கிறிஸ்தவ ஓட்டத்தில் ஒவ்வொரு கட்டத்திலும் தீர்மானமே எம் வாழ்வை நிர்ணயிக்கிறது. நாம் செய்யும் திடமான தீர்மானங்களே பாவத்தில் நாம் விழுந்துவிடாமல் உறுதியாக இருக்க எமக்குத் துணை புரிகின்றது.

“பிதாவின் சித்தத்தை நிறைவேற்ற திடமான தீர்மானத்தோடு உலகிற்கு வந்து வெற்றியடைந்த ஆண்டவரே, உம்மைப்போல நானும் உமது சித்தத்திற்கேற்ப தீர்மானங்கள் எடுத்து உறுதியோடு வாழ என்னை உறுதிப்படுத்தும். ஆமென்.”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்
19
வியாழன்

வாசிப்பு: எஸ்தர் 2:10,20

# கீழ்ப்படிந்திருக்கிறாயா?

...அவன் சொற்கேட்டு நடந்ததுபோல, இப்பொழுதும் அவன் சொற்கேட்டு நடந்து வந்தாள். (எஸ்தர் 2:20)

எஸ்தர் அழகுள்ளவள் மாத்திரமல்ல, அடக்கமும் ஒழுக்கமும் கீழ்ப்படிவுமுள்ள பெண்ணாகவும் வளர்ந்து வந்தாள். ராஜஸ்திரீ தெரிவுக்காக அரமனைக்குள் அழைத்துச் செல்லப்பட்ட எஸ்தர், தன் பூர்வீகத்தையும் தன் குலத்தையும் குறித்து யாருக்கும் தெரிவிக்காதிருந்தாள். ஏனெனில் மொர்தெகாய் அதைத் தெரிவிக்கவேண்டாமென்று சொல்லியிருந்தான். எஸ்தரோ அதைக்குறித்து ஏன் என்று கேள்வி எழுப்பவில்லை. எஸ்தர் மொர்தெகாயிடத்தில் வளரும்போது அவன் சொற்கேட்டு நடந்ததுபோலவே இப்பொழுதும் அவன் சொற்கேட்டு நடந்து வந்தாள். ஆம், பெற்றோர் இல்லாத தன்னை வளர்த்த அவன் காரணமின்றி எதுவும் செய்யமாட்டான் என்ற நம்பிக்கை அவளுக்குள் உண்டாயிருந்திருக்கும்.

சிறுவயதிலிருந்து கீழ்ப்படிந்து பழக்கப்பட்ட எஸ்தருக்கு, அவள் இப்போ ராஜாவுக்கு மனைவியாக தெரிந்தெடுக்கப்பட்டபோதும், அந்தக் கீழ்ப்படிவில் நிலைத்திருப்பது கடினமாக இருக்கவில்லை. “நான் இப்போது பட்டத்தரசியாகி விட்டேன். இனி உன் சொற்கேட்டு நான் நடக்கவேண்டிய அவசியமில்லை” என எஸ்தர் இறுமாப்படைந்து, மொர்தெகாயை அற்பமாக எண்ணிவிடவில்லை. தொடர்ந்தும் அமைதியாகவே இருந்தாள். “பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள்” (எபேசி.6:1) என வேதம் கூறுகிறது.

எஸ்தருடைய புத்தகத்தில் கர்த்தர் என்ற பெயரோ அல்லது நாமமோ காணப்படாவிட்டாலும், கர்த்தருடைய கரம் அங்கே இருந்ததையும், தேவனுடைய ராஜரீகமும் அவருடைய திட்டமும் அவருடைய பிள்ளைகள் மூலமாக செயற்பட்டதையும் நாம் உணரலாம். எஸ்தர் தான் யார் என்பதை மறைத்து வைக்கும்படி மொர்தெகாய் சொன்னது தேவதிட்டத்தினுள் அமைந்ததாயினும், எஸ்தர் மொர்தெகாய்க்குக் கீழ்ப்படிந்தது, அவளுடைய கீழ்ப்படிவின் நற்குணம் என்றால் மிகையாகாது. அவள் கீழ்ப்படியாமல் பெருமையினிமித்தம், தான் ஒரு யூத ஸ்திரீ என்று வெளியிட்டிருந்தால், காரியம் என்னவாகியிருக்கும்? அவளது கீழ்ப்படிவின் நிமித்தம், அவளைக் கர்த்தர் தன் திட்டத்தில் பாவித்தார்.

நாம் ஒவ்வொருவரும் தேவனுடைய திட்டத்துக்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அவருடைய திட்டம் நிறைவேறும்வரை சிலசமயங்களில் நாம் நமது பெருமைகளைவிட்டு, அவருடைய கரத்துக்குள் ஒளித்திருக்க வேண்டியிருக்கலாம். அதற்காக சாட்சியுள்ள நமது வாழ்வில் சறுக்கிவிடக் கூடாது. கீழ்ப்படிவு என்ற நற்பண்பு நமக்கு மிகமிக அவசியம். எல்லாவிதத்திலும் ஆண்டவருக்கும், பெரியோருக்கும் கீழ்ப்படியும்போது தேவன் நம்மைக்கொண்டும் பெரிய காரியங்களைச் செய்வார்.

“கர்த்தாவே, உமக்கும், உமக்குள் என் பெற்றோருக்கும் எப்பொழுதும் கீழ்ப்படிந்து இருக்கக் கற்றுத் தாரும். ஆமென்.”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்
20
வெள்ளி



# 'ஏன்' என்று இனி இல்லை!

"...உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவனைப்போலப் பூமியில் ஒருவனும் இல்லை என்றார்." (யோபு 1:8)

யோபு குற்றஞ்சாட்டப்பட முடியாத அளவுக்கு உத்தமமாக வாழ்க்கை நடத்தியவர். எதற்கும் பயப்படாதவர். நீதியாக வாழ்ந்தவர். ஆபிரகாம் காலத்தில் வாழ்ந்த யோபுவுக்கு மெய் தேவன் யார் என்பது தெரியாமல் இருந்திருக்கலாம். ஆனாலும் அவருடைய வாழ்வில் நீதிநெறி, ஒழுக்கம் காணப்பட்டது. அத்துடன், தன் நீதியில் பெருமையும் இறுமாப்பும் கொள்ளாமல் தனக்கும் மேலே ஒருவர் இருக்கிறார் என்ற பயத்தோடே வாழ்ந்து வந்தவர். அருமையான குடும்பம், ஏராளமான செல்வம், எல்லாமே இருந்தும் அவர் இறுமாப்படையவில்லை. மொத்தமாகச் சொன்னால், உண்மைத்துவத்துக்கும் கடவுளுக்குக் கீழ்ப்படிவதற்கும் யோபு ஒரு 'முன்மாதிரி' எனலாம். கர்த்தர் யோபுவைக் குறித்து, அதிலும் சாத்தான் முன்னிலையில் சொன்ன சாட்சி மெய்யானது. ஆம், கர்த்தர் யோபுவைக் குறித்துக் கொடுத்த நற்சான்றிதழ்தான் இவைகள்.

இன்று நம்மிடம் உத்தமம் உண்டா? இன்று கிறிஸ்து எங்களுடைய நீதியாக இருந்தும் நமது வாழ்வு குற்றமற்றதாகக் காணப்படுகிறதா? தேவபயம் உண்டா? கொலை, கொள்ளை, மூர்க்கம், கோபம், அநியாயம், ஆத்திரம், என உலக ஆசாபாசங்களுக்கு வளைந்து கொடுத்து, நாம் வாழ்ந்துகொண்டிருப்பது தேவனை எவ்வளவாய் துக்கப்படுத்தும். பண விஷயத்தில் உண்மையற்ற தன்மை, தவறான உறவுகளை வைத்துக்கொண்டு பயபக்தியாக நடித்துக் கொண்டிருப்பது, பரிசுத்தமில்லாமல் கர்த்தருடைய வார்த்தையைப் பிரசங்கிப்பது, திருவிருந்தை பரிமாறுவதும், அதைப் பெற்றுக்கொள்வதும் போன்ற பயமற்ற வாழ்வு நமக்கு நல்லதல்ல. இந்தத் துணிகரம் நமக்கு வேண்டாம். கர்த்தரை நாம் உண்மையாக நேசித்து அவருக்கே உண்மையாக இருப்போமாக. அப்போது தேவனும் நம்மைக் குறித்து நிச்சயம் நற்சான்றிதழ் தருவார்.

இன்னொரு பக்கத்தில், "யோபு இத்தனை நல்லவராய் இருந்தும் இத்தனை துன்பம் ஏன் வந்தது?" என்று கேட்பவர்களுண்டு. நாம் தேவனுடைய பிள்ளைகளாயினும் உலகத்தில் ஏற்படும் ஆபத்துக்கள் துன்பங்களுக்கு நாம் விலகினவர்கள் அல்ல. துன்பங்கள் யாவருக்கும் பொதுவானதே. ஆனால் நமக்கு நேரிடும் துன்ப உபத்திரவங்களில் அவர் நம்மைத் தப்புவிக்க வல்லவராயினும், அதிலும் மேலாக விசுவாசத்தில் நாம் நிலைத்து நின்று, அவரை நாம் உலகுக்கு வெளிப்படுத்தும் சாட்சிகளாக விளங்கவேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். ஆகவே இனிமேல் நாம் "ஏன்?" என்ற கேள்வியை விட்டுவிட்டு, "என்னை எடுத்துப் பாவிப்பீரோ?" என்று ஜெபிப்போமா? உண்மையில், நமது உண்மை நிலைமை வெளிவருவது, நமக்கு நேரிடும் சோதனைகளில்தானே!

"கர்த்தாவே, உமக்கேற்றபடி நான் வாழவும், சோதனைகளில் விழுந்திடாது ஜெயமெடுக்கவும் என்னை வழிநடத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்
21
சனி

வாசிப்பு: யோபு 1:4-5

## குடும்பத்திற்கு முன்மாதிரி

யோபு ...அவர்களை அழைத்தனுப்பி, பரிசுத்தப்படுத்தி, அதிகாலமே எழுந்து, அவர்கள் எல்லாருடைய இலக்கத்தின்படியேயும் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்துவான். (யோபு 1:5)

யோபு நிறைந்த செல்வங்களும், பொறுப்புகளும் மிகுந்த ஒருவர். என்றாலும் தேவனோடு உறவுகொண்டு, அவருக்குப் பயந்து ஜீவித்ததுடன் தனது பிள்ளைகளையும் தேவசமுகத்தில் கொண்டுவந்து, அவர்களுக்காகவும் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்திய ஒரு நல்ல தகப்பனாகவே வாழ்ந்தார். யோபு கர்த்தரோடு வைத்திருந்த உறவுக்கு அடுத்ததாக, தனது குடும்பத்திற்கே முதலிடம் கொடுத்திருந்தார். தன் குடும்பத்தின் சாதாரண தேவைகளைச் சந்திப்பதுடன் நின்றுவிடாமல், அவர்களது ஆத்மீக ஜீவியத்தில் அக்கறையுடைய வராகவும் இருந்தார். எந்தவொரு மனுஷனும், தனது ஆவிக்குரிய ஜீவியத்திற்கே முதலிடம் கொடுக்கவேண்டும் என்பதற்கு யோபு தன்னுடைய குடும்பத்திற்கு மாத்திரமல்ல, நமக்கும் முன்மாதிரியாக ஜீவித்தார்.

குடும்பத் தலைவனே, நீ தேவனுக்குப் பயப்படுபவனாக, தேவனுக்குப் பிரியமுள்ளவனாக, தேவபாதத்தில் அமர்ந்து, ஜெபித்து, வேதம் வாசித்து, உன் ஆவிக்குரிய ஜீவியத்தில் உனது பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக ஜீவிக்கி றாயா? பெற்றோரே, பிள்ளைகளுடைய எதிர்கால வாழ்விற்கு, ஆவிக்குரிய வளர்ச்சிக்கு வழிகாட்ட ஏதுவாக நம் ஜீவியம் அமையாவிட்டால், நமது பிள்ளை கள் கர்த்தருடன் வைத்திருக்கவேண்டிய தனிப்பட்ட உறவில், அவருடன் நடக்க வேண்டிய வழிகளில் விழுந்துபோவது நிச்சயம். பிள்ளையின் வளர்ச்சி, கல்வி, எதிர்காலம் என்பவற்றைக் குறித்து கரிசனையுடன் இருப்பது நல்லது! அதிலும் மேலாக பிள்ளைகளை கர்த்தருக்குப் பயப்படும் பயத்திலும், அவரை நேசிக்கும் நேசத்திலும், அறிகிற அறிவிலும் வளர்த்து வருகிறோமா? பிள்ளைகளின் உலகப் பிரகாரமான தேவைகளுக்காக மாத்திரம் ஜெபிப்பதுடன் நின்றுவிடாமல், தினமும் அதிகாலையில் அவர்களைத் தேவகரத்தில் ஒப்படைத்து, அவர்களது ஆத்மீக வளர்ச்சிக்காக ஜெபிக்கிறீர்களா? இன்று பிள்ளைகளுக்குப் பயந்து வாழும் பெற்றோர் அதிகரித்து வருவது துக்கத்திற்குரிய காரியம்.

தினமும் குடும்பத்திலுள்ளவர்களுக்காக ஜெபியுங்கள். அவர்களுடைய ஆவிக்குரிய தேவைகளைக் கவனியுங்கள். "நீ அவைகளை (கட்டளைகளை) உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய் போதித்து நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிற போதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிற போதும் அவைகளைக் குறித்து.." (உபா.6:6-9) பேசும்படி கூறப்பட்டுள்ளது. பெற்றோரே! உங்கள் பிள்ளைகளின் ஆவிக்குரிய வளர்ச்சியைக் குறித்து நீங்கள் காட்டும் அக்கறை எப்படிப்பட்டது? உங்கள் முதல் வாஞ்சை உலக ஆசீர்வாதங்களிலா? அல்லது தேவனுடைய முகத்தைத் தேடுவதிலா? நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போமாக.

"கர்த்தாவே, அதிகாலையில் தூங்கும் என்னைத் தட்டி எழுப்பும். எனது குடும்பத் துக்கு நான் ஒரு முன்மாதிரியாக ஜீவிக்க பெலன் தாரும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்
22
ஞாயிறு

வாசிப்பு: ரோமர் 8:28-32

# வாழ்வின் ஒரே நோக்கம்

...அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்.' (ரோமர் 8:29)

'மாயை, மாயை, எல்லாம் மாயை என்று பிரசங்கி சொல்லுகிறான்'. இன்றும் ஏராளமானோருடைய பிரச்சினையும் இதுதான். நாமும்கூட பல சந்தர்ப் பங்களிலே எல்லாமே பொய் என்று சொல்லிவிடுகிறோம். நமது சூழ்நிலை அப்படி நினைக்கவும் சொல்லவும் செய்கிறது. வாழ்வே வெறுத்து, கடவுள் ஏன் மவுனமாக இருக்கிறார் என்று கேட்குமளவிற்கு சிலசமயம் மனமொடிந்து போகி றோம். திகைக்க வைக்கும் வியாதிகள், நம்பிக்கைத் துரோகங்கள், மலிந்துவிட்ட சாவுகள், உறவுகள் தொலைந்துபோகும் அவலநிலைகள்; இப்படிப்பட்டதான நெருக்கடிகளுக்குள் அகப்படுகிறவர்களால் கேள்விகளை எழுப்பாமல் இருக்க முடியாதுதான். அதற்காக அன்றைய பிரசங்கியைப்போல தேவபிள்ளைகளாகிய நாமும் இந்த சூழ்நிலைகளில் தடுமாறலாமா?

நம்மில் பலர் அறிந்ததொரு உதாரணம் இது. தன் வேலையை மகனின் தொந்தரவின்றி செய்வதற்காக, ஒரு உலக வரைப்படத்தை துண்டு துண்டாகக் கிழித்துவிட்டு, திரும்பவும் ஒன்றுசேர்க்கும்படி மகனிடம் கொடுத்தார் அப்பா. இதனைப் பொருத்துவது சிறுவனுக்குக் கடினம் என்பது அப்பாவின் எண்ணம். ஆனால் ஒரு சில நிமிடத்துள், 'முடிந்தது' என்ற சத்தம்கேட்டு திடுக்கிட்டார் அப்பா. "அவ்வளவு சீக்கிரத்தில் எப்படி முடித்தாய்?" என்றார் அப்பா. 'அப்பா, இத் துண்டுகளின் மறுபக்கத்தில் ஒரு மனிதனின் பகுதிகளைக் கண்டேன். மனிதனைச் சரியாகப் பொருத்தினேன்; உலகப்படம் வந்துவிட்டது' என்றான் மகன். மனிதன் சரியானால் உலகம் சரியாகும் என்பது உண்மைதான். ஆனால் மனிதன் சரியாக, அவன் தன்னை, தன் நோக்கத்தைத் தானே அறியவேண்டுமே!

சூழ்நிலைகளையும் சூழ்ந்திருக்கிறவர்களையும் நோக்குவதால்தான் அநேக குழப்பங்களுக்கு பதில் கிடைப்பதில்லை. முதலாவது நம்மையும் நமது பார்வையையும் சரிப்படுத்தவேண்டும். அதற்கு நமது வாழ்வின் நோக்கத்தை நாம் புரிந்துகொள்ளவேண்டும். உலகம் பல மாயையான நோக்கங்களை நமக்கு முன்னே வைக்கும். ஆனால், தேவகுமாரனுடைய சாயலுக்கு நாம் ஒப்பாகவேண்டும் என்பதுதான் நம்மைப் படைத்தவருடைய ஒரே நோக்கம் என்பதை வேதாகமம் நமக்குத் தெளிவாகப் போதித்திருக்கிறது. நமது ஒவ்வொரு அசைவும் மூச்சும் அந்த ஒரே நோக்கத்தையே வெளிப்படுத்தவேண்டும். பாடுகள் துயரங்களுக்கூடாகவும் அந்த ஒரே நோக்கத்தை நோக்கியே நாம் ஓடுகிறோம் என்பதைச் சரியாகப் புரிந்துவிட்டால், இந்த வாழ்வைப்போல ஒரு இனிய அனுப வத்தை, நாம் வேறு எங்கும் காணவேமுடியாது. தேவபிள்ளையே, தேவன் நம் மீது வைத்திருக்கும் அந்த இனிய நோக்கத்தையே நாமும் நோக்குவோமா!

"பிதாவே, இந்த ஏழைமீது நீர் வைத்திருக்கும் உயர்ந்த நோக்கை மறந்து, இவ் உலகைப் பார்த்து சோர்ந்துவிடாதபடி என்னைக் காத்தருளும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆகஸ்**
**23**
**திங்கள்**

வாசிப்பு: யாக்கோபு 4:5-10

# எதிர்த்து நில்

'பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள். அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்.' (யாக்கோபு 4:7)

நம் வாழ்வில் கஷ்ட துன்பங்கள் நேரிடுவதற்கு பல காரணங்களுண்டு. முதலாவது, *நமது பாவம்.* அதனாலே நான் மாத்திரமல்ல, என்னைச் சேர்ந்தவர்களும் தாக்கப்படுவார்கள். ஆகவே நான் மனந்திரும்புவதைத் தவிர இத்துன்பத்திலிருந்து தப்பித்துக்கொள்ள வேறுவழியே இல்லை. அடுத்த காரணம், *மற்றவர்களுடைய பாவம்.* அதாவது ஒருவர் பாவம் செய்யும்போது அடுத்தவரும் அதை ஆமோதித்து அனுமதிக்க நேரிடும்போது அவரும் பாவம் செய்கிறவராகிறார். இது இருவரையும் பாதிக்கும். இதற்கு என்ன செய்யலாம்? பாவம் செய்பவரை வெறுத்து ஒதுக்காவிட்டாலும், அவர் செய்யும் காரியம் தப்பானால் தயங்காமல் அதற்கு எதிர்த்து நிற்கவேண்டும். மூன்றாவது, ***தவிர்க்கக்கூடிய சில காரியங்கள்.*** அளவுக்கு மிஞ்சி சாப்பிட்டால் அதன் பலனை அனுபவிக்கத்தானே வேண்டும். ஆகவே தடுக்கக்கூடியவைகளைத் தடுத்தும், தடுக்கமுடியாதவைகளை எதிர்க்கவும் பழகவேண்டும். இறுதிக் காரணம் ***தவிர்க்கமுடியாத அழிவுகள்.*** இதற்கு விளக்கம் தேவனிடமும் சாத்தானிடமுமே இருக்கும். இங்கு தேவனை முற்றுமாக நம்புவதைவிட வேறெதுவும் செய்ய முடியாது. ஏனெனில் தேவன் அறியாமல் எதுவும் நடக்காது. அவர் அனுமதியாமல் சாத்தானும் நம்மைத் தொடமுடியாது.

சாத்தான் என்பவன் சத்துராதி, எதிராளி. அவன் தேவனுடைய கட்டுப்பாட்டுக்குள் இருந்தாலும் அவன் தேவனுக்கு எதிராளி. ஆகவே அவன் தேவனுடைய பிள்ளைகளுக்கும் எதிராளி. பொய்யினாலும் வஞ்சகத்தாலும் அவன் தேவ பிள்ளைகளை தேவனிடமிருந்து பிரித்துப்போடுவதில் கைதேர்ந்தவன். அதிலும் தேவனுக்கென்று வைராக்கியமாய் ஜீவிக்க பிரயாசப்படும் அனைவரையும் அவன் குறிவைத்திருக்கிறான் என்பதை நாம் மறக்கக்கூடாது. அந்த வகையில் அவன் யோபின் மீது கண்வைத்தது ஆச்சரியமில்லை. ஆனால் ஒன்று தெரியுமா? இன்று அவன் தோற்கடிக்கப்பட்டவன். தேவபிள்ளைகள் தேவனுடைய வல்லமையைக் கொண்டு அவனை எதிர்த்து நின்றால், அவனால் எதுவும் செய்ய முடியாது. அவன் ஓடிவிடுவான்.

பிரியமானவனே, 'எனக்கு ஏன் கஷ்டம்? நான் என்ன பாவம் செய்தேன்' என்று குழம்பித் தவிக்கும் உன் மனதைத் திடப்படுத்து. அமர்ந்திருந்து ஆராய்ந்து பார்த்து, சரிசெய்ய வேண்டியவற்றைச் சரி செய். காரணம் எதுவுமே தெரியாவிட்டால், தேவனுக்குக் கீழ்ப்படியவும், அவரிடத்திலே சேர்ந்து அவரைச் சார்ந்து, அவருக்குக் காத்திருக்கவும் கற்றுக்கொள். எந்தப் பிரச்சனையும் உன்னை எதுவும் செய்யமுடியாது. இறுதி ஜெயம் உனக்கே, இது நிச்சயம்.

"கர்த்தாவே, என்ன துன்பம் வந்தாலும் உம்மையே சார்ந்து நின்று உமக்கே கீழ்ப்படிந்து பிசாசை எதிர்த்து நிற்க பெலன் தாரும் ஐயா. ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்
24
செவ்வாய்

# எதிர் நீச்சல்

'நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல் ...உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.' (ரோமர் 12:2)

கீழ்ப்படியும் கிறிஸ்தவன் எல்லாவேளைகளிலும், உலகத்தோடு ஒத்து ஓடமுடியாது. அவன் எதிர்நீச்சல் போடவேண்டிய சந்தர்ப்பங்கள் அநேகமுண்டு. ஓடும் நீரில், அது செல்லும் திசையில் நாமும் செல்வது மிகவும் இலகு. சில வேளைகளில் நாம் சும்மா இருக்கும்போதே, தண்ணீர் எம்மைத் தன் பக்கமாக இழுத்துச்செல்லவும் வாய்ப்புண்டு. ஆனால் நீரின் திசைக்கு எதிர்நீச்சல் போடுவதென்பது, மிகவும் கடினமான விடயம். நீர் நம்மை தன் சக்தியால் இழுக்க இழுக்க, அதை எதிர்த்து நாம்தான் எதிர்நீச்சல் போடவேண்டியிருக்கும்.

இப் பிரபஞ்சத்தில் தேவனுக்கும் அவரது வார்த்தைகளுக்கும் கீழ்ப்படிகின்ற ஒரு கிறிஸ்தவனின் வாழ்வும் எதிர்நீச்சல் போடும் ஒரு வாழ்க்கைதான். உலகம் தன் பக்கம் இழுக்கும். ஆனால் அதனோடு ஒத்து வாழாமல், அதை எதிர்த்து நீச்சல் போடவேண்டும். உலகத்தோடு ஒத்து வாழ்ந்தால், எமக்கு எந்தப் பிரச்சனையும் இருக்கமாட்டாது. எதிர்நீச்சல் சற்றுக் கடினமானதுதான்.

இயேசு சொன்னார். "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்"(யோவா.16:33). தேவனின் வார்த்தைகளுக்கு உண்மையாய்க் கீழ்ப்படிகிறவன்தான் உலகத்தை எதிர்ப்பான். ஏனெனில் அவனுக்குத்தான் உலகத்தின் பொல்லாத காரியங்கள் கண்ணுக்குத் தெரியும். ஆனால் தான் கிறிஸ்தவன் என்று சொல்லிக்கொண்டு, உலகத்துக்கு ஒத்தவேஷம் தரித்திருப்பவனோ, உலகத்தை எதிர்க்கமாட்டான். அவன் உலகத்தோடு சேர்ந்து ஓடுவதால் அவனுக்கு உலகத்தால் எவ்வித பிரச்சனையும் வராது.

மீன் தண்ணீரில் எதிர்நீச்சல் போடும்போது அதற்குக் கடினமாயிருக்கும். ஆனால் செத்த மீனுக்கு எவ்விதக் கஷ்டமும் இல்லை. அது தண்ணீர் அடிக்கும் பக்கமெல்லாம் அடிபட்டுச் செல்லும். உலகத்துக்கொத்த வேஷம் தரித்திருப்பவனும் இந்த செத்த மீனைப்போலவே இருக்கிறான்.

பேதுரு எமக்குத் தரும் சவால் என்ன? கிறிஸ்து எமக்காக மாம்சத்திலே பாடுபட்டதால், நாமும் அப்படிப்பட்ட சிந்தையை ஆயுதமாய் தரித்துக்கொள்ளுவோம்(1பேது.4:1) என்பதே. பாடுபடும் சிந்தையோடு நாம் வாழ அழைக்கப்பட்டிருக்கிறோம். தேவனுடைய வார்த்தைக்கு உண்மையாய் கீழ்ப்படியும் மனதையுடைய ஒரு மெய்யான கிறிஸ்தவன், நிச்சயமாய் பாடுகளையும், துன்பங்களையும், அவமானங்களையும் எதிர்நோக்க ஆயத்தமுள்ளவனாய் இருக்கவேண்டியது அவசியம். இப்படியிருக்க, நாம் இப்பிரபஞ்சத்துக்கு ஒத்தவேஷம் தரியாமல் எதிர்நீச்சல் போட ஆயத்தமாக இருக்கின்றோமா?

"இந்த உலகத்தில் வாழ்ந்து முன்மாதிரி காட்டிச் சென்ற ஆண்டவரே, நீர் சென்ற பாதையை நானும் பின்தொடர கிருபை தாரும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்

25

புதன்

வாசிப்பு: எரேமியா 1:1-10

# உனக்கென ஒரு நோக்கம்

'நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்குமுன்னே உன்னை அறிந்தேன்.' (எரேமியா 1:5)

நாங்கள் தற்செயலாகப் பிறந்தவர்களல்ல; ஒரு நோக்கத்தோடு உருவாக்கப்பட்டவர்கள். இப்படியாக நம்மை உருவாக்கினவர் நம்மை உருவாக்கும் முன்னதாகவே நம்மை முழுமையாக அறிந்தவராயிருக்கிறார் என்ற உண்மை நமக்கு எத்தனை ஆச்சரியமும் ஆறுதலானதுமான செய்தியாயிருக்கிறது. தினம் தினம் நாம் தேவனுடைய வழியில் நடப்பதற்கு இந்த ஒரு உண்மையே போதும். அத்தோடு, தேவனுடைய பிள்ளைகளாகிய நம் ஒவ்வொருவருடைய வாழ்விலும் தேவன் ஒரு நோக்கம் வைத்திருக்கிறார் என்ற உண்மையையும் நாம் சிந்தித்துப் பார்ப்போமானால், அந்த சிந்தனை, 'நாம் என்ன செய்துகொண்டிருக்கிறோம்' என்று சிந்திக்கத் தூண்டும். சிந்தித்தால் நம்மில் அநேகர் நம்மைக் குறித்தே வெட்கப்படவேண்டியிருக்கும். ஏனெனில் தேவன் நம்மில் கொண்டிருக்கும் நோக்கத்திற்கு நேர்மாறாக நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் உண்மை நமக்கே தெரியவரும். அப்பொழுது நாம் என்ன செய்யப்போகிறோம்?

இன்னும் ஒரு உண்மையும் உண்டு. தமது பிள்ளைகள் யாவருடைய வாழ்விலும் ஆண்டவர் ஒரு நோக்கம் வைத்திருந்தாலும், சிலரை பிரத்தியேகமான சில தேவைக்காக விசேஷமாக நியமிக்கிறவ்ராயிருக்கிறார். இஸ்ரவேலை ஆள தாவீதையும், பயமின்றி வார்த்தையை உரைக்க எரேமியாவையும், கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்த யோவான் ஸ்நானகனையும், புறஜாதிகளுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க பவுலையும் தேவன் விசேஷமாக அழைத்தார். தமக்காகப் பாடுபடவென்று சிலரைத் தெரிந்தெடுத்திருக்கிறார்.(அப்.9:16) அவர்களும் தத்தமது பணியில் உண்மையாயிருந்தார்கள்.

கிறிஸ்தவனே, நீ கிறிஸ்துவின் பிள்ளை என்பது மெய்யானால், அவர் உனக்காகவும் ஒரு நோக்கம் வைத்திருக்கிறார். அந்த நோக்கத்தில், அவர் உனக்காக வைத்திருக்கிற பணியில் நீ உண்மையாகவே நிற்கிறாயா? என்பதை சிந்தித்து மனந்திரும்புவாயாக. அல்லது, ஒரு பிரத்தியேகமான பணிக்காக உன்னை அழைத்திருப்பாரானால், பலவிதங்களிலும் அது உனக்கு உணர்த்தப்படுமானால் தாமதியாதே. உனக்குத் தகுதி இல்லை என்று எண்ணாதே. திக்குவாயன் என கூறிய மோசே செய்த பிரசங்கங்கள் எத்தனை? சிறுபிள்ளை என்று சொன்ன எரேமியா சொல்லி முடித்த தீர்க்கதரிசனங்கள் எத்தனை? இறுதியாக, பிரத்தியேக அழைப்பு எதுவும் தெளிவில்லையாயின், அது தெளிவுறும்வரைக்கும் அன்புசெலுத்தவும், தேவனைச் சேவிக்கவும், கீழ்ப்படிந்திருக்கவும் என்று நமக்கெல்லாம் பொதுவான பணி உண்டே. அதிலே நிலைத்திருக்கலாமே. பொதுவாக நம் யாவருக்கும் ஒரு பணி உண்டு. அது என்ன? சிந்திப்போமா?

"ஒரு நோக்கத்தோடு என்னை சிருஷ்டித்த கர்த்தாவே, நீர் எனக்கென்று வைத்திருக்கும் நோக்கத்தை அறிந்து ஜீவிக்கக் கிருபை செய்யும்.. ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்

26

வியாழன்

வாசிப்பு: ஏசாயா 51:1-6

# என் மீட்பு

"...அவர் எனக்கு இரட்சிப்புமானவர்." (யாத்திராகமம் 15:2)

எந்தவொரு மனுஷனும் தன்னுடைய சொந்த ஜீவியத்தினாலோ, கிரியையினாலோ தன்னைத்தானே இரட்சித்துக்கொள்ளமுடியாது. நம் பெலனும், பாதுகாப்பும் கேடகமுமாயிருக்கிற கர்த்தர் ஒருவரே நமது வாழ்வின் இரட்சகரும், இரட்சிப்புமாய் இருக்கிறார். அன்று இஸ்ரவேலருக்கு வாக்குத்தத்தமும் வழி நடத்துதலும் கிடைத்தது. தேவபிரசன்னம் அவர்களை சூழ்ந்திருந்தது. தப்பிவிட முடியாதபடி நாற்புறமும் நெருக்கப்பட்ட வேளையிலும் கர்த்தர்தாமே எழும்பி, இரட்சிப்பின் கிரியையை செய்துமுடித்தார். எகிப்திய ஒடுக்கத்திலிருந்து விடுவித்து அவர்களை இரட்சித்து விசாலத்திலே வைத்தார். அடிமைத்தனத்தை நீக்கி சுதந்தரவாளியாக்கினார். அந்த தேவனே இன்று நம்முடைய தேவன்.

இன்று எப்பக்கம் திரும்பினாலும் போராட்டங்களைக் காணலாம். இனங்களுக்குள் போராட்டம், எல்லைப் போராட்டம், சுதந்திரப் போராட்டம், கெரில்லா போராட்டம் என ஏராளம். இவை யாவும் பட்டினி, அகதி நிலைமை, வியாதி என்று பல விளைவுகளைத் தோற்றுவிக்கின்றன. சற்று ஆழமாக நாம் சிந்திப்போமாயின் ஏதோவொரு விடுதலைக்காக, மீட்பிற்காக மனிதன் சக மனிதனுடனேயே போராடிக்கொண்டிருக்கிறான். தனக்கு விடுதலை கிடைக்கும் என்று எண்ணுகிறான். இவற்றினால் கிடைக்கும் விடுதலை அல்லது இரட்சிப்பு கூட நிலையானதல்லவே. நாடும் நிலையற்றது. எல்லைகளும் நிலையற்றது. கடைசிநாளிலே இப்பூமியானது அழிக்கப்படும்போது, மனிதன் தனக்கென்று பெற்ற சுதந்திரங்கள் எதுவும் அவனுக்கு உதவப்போவதில்லை.

பிரியமானவர்களே, உலகம் முழுவதையுமே ஆதாயப்படுத்திவிட்டாலும் கூட ஒவ்வொரு தனிமனிதனும் தன்தன் ஆத்துமாவை இழந்துவிட்டானேயானால் முடிவு என்ன? தேவன் கொடுக்கும் இரட்சிப்போ என்றென்றைக்கும் இருக்கும் (ஏசா.51:6). ஏனெனில் அது சிலுவையிலிருந்து அருளப்பட்ட இரட்சிப்பு. ஜீவனைப் பலியாகக் கொடுத்து பாவப் பரிகாரம் செய்யப்பட்டதால் ஏற்பட்ட பரிசுத்தமான இரட்சிப்பு அது. ஒவ்வொரு தனி மனிதனுக்காகவும் கொடுக்கப்பட்டுள்ள இரட்சிப்பு அது. அந்த இரட்சிப்பின் ஊற்றில் தண்ணீர் மொண்டுகொள்பவன் என்றென்றைக் கும் மகிழ்ந்திருப்பான். நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே இயேசுகிறிஸ்துவின் நாமமேயல்லாமல் வேறொரு நாம மும் கட்டளையிடப்படவில்லை(அப்.4:12). பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு தனது சொந்தப் பிள்ளையாக மாற்றும் உலக இரட்சகராகிய அவரை உன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளாயா?

"என் இரட்சகரும், இரட்சிப்புமாகிய நேச கர்த்தாவே, உமது இரட்சிப்பின் நீரூற்றின் அண்டைக்கு நீரே என்னை வழிநடத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்
27
வெள்ளி

வாசிப்பு: மாற்கு 14:23-25

# என் தேவன்

"...அவரே என் தேவன். ...அவரே என் தகப்பனுடைய தேவன். அவரை உயர்த்துவேன்." (யாத்திராகமம் 15:2)

உண்மைக் கடவுளுக்கு எபிரேயர் இரு பதங்களைப் பாவித்தார்கள். 'ஏலோகீம்' மற்றது, 'யேகோவா'. 'ஏலோகீம்' என்னும் பதம் 'கடவுள்' என்றும், 'தேவன்' என்றும் மொழிபெயர்க்கப்படுகிறது. 'ஏலோகீம்' என்றால், 'மேலான தேவன்', 'எதற்கும் அப்பாற்பட்டவர்', 'எல்லாச் சக்திக்கும் அப்பாற்பட்ட வல்லமையுள்ளவர்' என்று பொருள்படும். இதனாலேதான் சிருஷ்டிப்பிலே 'தேவன்' என்னும் நாமம் உபயோகிக்கப்பட்டுள்ளது. மோசே, 'பரலோகத்தில் வாசம் பண்ணுகின்ற சர்வ வல்லமையுள்ள அந்த தேவன் என் தேவன்' என்று பாடுகிறார். 'நான் யேகோவா, இருக்கிறவராக இருக்கிறேன்' என்று மோசேக்குத் தம்மைத்தாமே வெளிப்படுத்திய தேவன், அன்று இஸ்ரவேலோடு இருந்து வழிநடத்தினார்.

அத்தகைய மகத்துவமுள்ள தேவன்தாமே நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராக நமது தேவனாகவும் இருக்கிறார். தேவன் ஆபிராமை அழைத்து, மிருகத்தைத் துண்டிக்க வைத்து, அதன் இரத்தத்தினாலே உடன்படிக்கையை ஏற்படுத்தினார் (ஆதி.15:9-21). அதே தேவன் தமது ஒரேபேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த இரத்தத்தினாலே புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தி, பாவிகளான நாமும்கூட தமக்குப் பங்காளிகளாகும்படி கிருபை அளித்திருக்கிறார். அன்று இஸ்ரவேலர் மத்தியில் மகத்தான மீட்பின் கிரியையை நடப்பித்து நின்றவர், தமது குமாரனை ஈந்து நித்திய அழிவினின்று நம்மையும் மீட்டுக்கொண்டார். அதனாலேயே 'அப்பா' என்று அழைக்கக்கூடிய புத்திர பாக்கியத்தை கிறிஸ்துவினால் நாம் பெற்றுக்கொண்டோம். பவுலடியான் இதனை விளக்கும்போது, "முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்" (எபே.2:13) என்று எழுதுகிறார். இது எத்தனை பெரிய பாக்கியம்!

"மகத்துவமுள்ள தேவனை நான் உயர்த்துவேன், அவர் நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன்." இந்த உணர்வும், துதி கீதமும் உன் உள்ளத்தின் ஆழத்திலிருந்து புறப்படவேண்டும். அவர் என் தேவன் என்று நீ உன் வாயினால் அறிக்கைபண்ணும்போது அவரது மகத்துவமான கிரியைகளை வெளிப்படுத்துகிறாய். தேவபிள்ளையே! நாம் கிட்டிச்சேரமுடியாத தூய பரிசுத்த தேவன் தாமே, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மீட்பின் கிரியையின் மூலமாக புத்திர சுவீகாரத்தின் ஆவியை நமக்குத் தந்து 'அப்பா' - 'பிள்ளை' என்னும் நெருக்கமான உறவுக்குள் நம்மைச் சேர்த்துக் கொண்டுள்ளார். இந்த தேவன் என்றென்றுமுள்ள சதாகாலமும் நமது தேவன். மரணபரியந்தமும் நம்மை நடத்திடுவார் என்று தைரியமாக உன்னாலும் சொல்லமுடியுமா?

"அநாதி தேவனே! நீர் என் தேவன் மாத்திரமல்ல, நீரே என் தகப்பன், நான் உமது பிள்ளை. இந்த உறவுக்காக உம்மை ஸ்தோத்திரிக்கின்றேன். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்

28

சனி

வாசிப்பு: லூக்கா 17:11-19

# நன்றியுள்ளவர்களாய் இருங்கள்.

'நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து...' (எபேசியர் 5:20)

ஒருவர் எமக்கு உதவி செய்தால் சாதாரணமாக அதற்கு நாம் நன்றி சொல்வது வழக்கம். இன்றும் எமது தமிழ் கலாச்சாரத்தில் பதிலுபகாரம் செய்வது ஊறிப்போன விடயம். ஒருவர் ஏதாவது உணவுப்பண்டத்தை ஒரு பாத்திரத்தில் வைத்து அனுப்பிவிட்டால் அப்பாத்திரத்தைக் கவனமாய் வைத்திருந்து அதில் வேறேதாவது வைத்து அனுப்பாவிட்டால் சிலருக்குத் திருப்தியிராது. இப்படியிருக்க, எமது நடைமுறை வாழ்விலே தேவன் செய்யும் நன்மைகளை நாம் இலகுவில் மறந்துவிடுவது ஏன்?

வாழ்விலே இன்பமும், துன்பமும் மாறி மாறி வரத்தான் செய்யும். இன்பம் வரும்போது தேவனைப் போற்றி வாழும் நாம், துன்பம் வரும்போது கடந்த நாட்களில் அவர் செய்த நன்மைகளை எண்ணிப்பாராது அவரைத் தூற்றி வாழ முற்படுகிறோம். அதுமட்டுமல்ல, தேவையான நேரத்தில் அவரைத் தேடுகிறோம். மற்றப்படி நாம் எம் பாதையில் போய்க்கொண்டே இருக்கிறோம்.

ஒருமுறை தேவையோடிருந்த பத்துப்பேர் இயேசுவை நோக்கிக் கூப்பிட்டனர். தேவை தீர்ந்ததும் ஒன்பதுபேரும் காணாமல் போய்விட்டனர். ஆனால் நன்றியறிதலுள்ள ஒரு மனுஷன் மாத்திரம் நன்றிசொல்ல இயேசுவைத் தேடி வந்தான். இயேசு அவனை நோக்கி "மிகுதி ஒன்பது பேரும் எங்கே?" என்று கேட்டார்.

நாம், தேவைகள் இருக்கும்போது மட்டும் தேவனைத் தேடுகிறோமா? மற்றவேளைகளில் எம் விருப்பம்போல வாழ்கிறோமா? ஒருகணம் நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம். நாம் எங்கே நிற்கிறோம்?

கடன் தொல்லை தலை தூக்கும்போதுதான் கணவன் தேவனைத் தேடுகிறார். குடும்பத்தில் வியாதி வரும்போதுதான் மனைவி தேவனிடம் ஓடுகிறார். பரீட்சை நெருங்கும்போதுதான் பிள்ளைகள் தேவனை நினைக்கிறார்கள். அப்படியானால் இப்படிப்பட்ட குடும்பத்தில் தேவன் எங்கே? பொதுவாக அருகில் இல்லாத ஒருவரைத்தான், தேவை வரும்போது தேடி ஓடவேண்டி வரும். எம் குடும்பத்தில் தேவன் இருந்தால் அவரை ஆராதிக்கும் ஆராதனையும் அவர் எம் வாழ்வில் செய்த நன்மைகளை நினைத்து, எப்போதும் அவரைத் துதிக்கும் துதியும் நம் வாயில் இருக்கவேண்டும். "அவர் செய்யும் நன்மைகளை எண்ணி..." என்று நாம் சொல்லுவதுண்டு. அது தவறு. அப்படியானால் தீமையும் செய்வார் என்று கருதத் தோன்றும். அவர் செய்வது யாவுமே நன்மைக்குத்தான். ஆகவே, எப்போதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து நன்றியறிதலுள்ளவர்களாய் வாழக் கற்றுக்கொள்ளுவோம்.

"கர்த்தாவே, எப்பொழுதும் எல்லாவற்றிலும் எல்லா நேரத்திலும் நன்றியறிதலுள்ள பிள்ளையாய் வாழ என்னைத் தாழ்த்தி ஒப்புவிக்கிறேன். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்
29
ஞாயிறு

வாசிப்பு: ஆதியாகமம் 26:12-30

# எது உங்கள் தெரிவு?

"அவன் அவர்களுக்கு விருந்துபண்ணினான். அவர்கள் புசித்துக் குடித்தார்கள்." (ஆதியாகமம் 26:30)

தனது ஒன்றுவிட்ட சகோதரன் செய்த சில தவறான காரியங்களினால், தங்கள் குடும்பகௌரவத்திற்குக் கேடு வந்துவிட்டது என்பதால் அவனை இனி வீட்டிலே சேர்க்கமுடியாது என்று ஒருவர் கூறினார். நாம் வாழ்நாளில் கடக்காத ஒரு சேற்றுப்பள்ளத்திலா அந்த சகோதரன் புதிதாக விழுந்துவிட்டான்? தேவன் கிருபையாய் நம்மைத் தூக்கி சேர்த்துக்கொண்டார் என்றால் அந்த சகோர்தரன் காரியம் என்ன? நமக்கு விரோதமாக ஒருவர் நடந்துவிட்டால், அவருக்கு எதிராக நமக்குள் எழுகின்ற மனஎண்ணம் என்ன? நமது முதல் செயற்பாடு என்ன? நம்மைக் குற்றமற்றவர்களாகக் காட்டி, மற்றவர்களின் அனுதாபத்தைப் பெற்றுக்கொள்ள நாம் முயற்சிக்கலாம். நமக்குள் மறைந்திருக்கிற ஆத்திரத்தை எப்படியாவது சந்தர்ப்பம் பார்த்துக் கொட்டிவிடுகிறோம். அடுத்தவனுடைய பிரச்சினையைக் குறித்தோ, ஏன் அவன் அவ்வாறு நடக்கிறான் என்றோ நாம் சிந்தித்துப் பார்ப்பதில்லை. அதுதான் நாம் செய்யும் பெரிய தவறு.

பணக்காரரான ஈசாக்கின்மீது பெலிஸ்தருக்குப் பொறாமை உண்டான போது, அவர்கள் ஆபிரகாம் வெட்டின தண்ணீர் துரவுகளை மூடி ஈசாக்கை அவ்விடத்தைவிட்டு அபிமலேக்கு துரத்திவிட்டான். ஆனால் ஈசாக்கோ, அமைதியாக புறப்பட்டு சென்றார். மூன்றுதடவை ஈசாக்குக்குச் சொந்தமான தண்ணீர் துரவுகளை பெலிஸ்தர்கள் தூர்த்துப்போட்டார்கள். ஒவ்வொருமுறையும் ஈசாக்கு பதில் எதுவும் செய்யாமல் அமைதியாக எழுந்து அடுத்த இடத்திற்குப் போனார். இது எவ்வளவு மனத்தாக்கத்தைக் கொடுத்திருக்கும். ஆனால் ஈசாக்கோ, பதில் தாக்கம் கொடுக்கவில்லை. ஈசாக்கிடம் ஏதோ வல்லமையுண்டு என உணர்ந்த அபிமலேக்கு, ஈசாக்கோடு சமாதானம் பேச வந்தான். தனது கோபத்தையெல்லாம் வெளிக்காட்டி அபிமலேக்கிற்கு தீங்குசெய்ய ஈசாக்கிற்கு இது நல்லதொரு தருணம். ஆனால் ஈசாக்கு என்ன நினைத்தாரோ, வஞ்சம் தீர்ப்பதற்குப் பதில், தன்னை நாடி வந்தவன் சத்துருவானாலும் அவனை விருந்தாளியாகக் கருதி, அன்போடு உபசரிப்பதையே தெரிந்துகொண்டார். ஈசாக்கும் உத்தமர் அல்ல. தன் மனைவியை சகோதரி என்று சொன்னவர்தானே. அபிமலேக்கும் அதைப் பொறுத்துக் கொண்டான்தானே. நாம் நல்லவர்கள் அல்லாதபோதும் தேவன் நம்மைக் கண்காணிக்கிறார், கவனிக்கிறார்.

நாம் யாரும் நல்லவர்கள் அல்ல. நமக்கு தீங்கு நடந்துவிட்டது என்று ஆத்திரப்படும் போதெல்லாம் "தேவன் நம்மில் காட்டிய அன்பை நினைவு கூருவோமானால், பிறருக்கு அன்பு காட்டவேண்டும்" என்கிற தெரிவு நமக்குக் கடினமாயிராது. இப்போது சொல்லுங்கள்; நமக்கு ஏற்பட்ட தாக்கத்திற்கு மறுதாக்கமா? அல்லது அன்பின் செயற்பாடா? எது உங்கள் தெரிவு?

"கர்த்தாவே, நீர் எனக்களித்த மன்னிப்பை உணர்ந்து, பிறர்மீது உமது அன்பை வெளிப்படுத்துவதை நானும் தெரிந்தெடுக்க என்னை வழிநடத்தும். ஆமென்."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்
30
திங்கள்

வாசிப்பு: கலாத்தியர் 6:6-9

# கிறிஸ்துவின் அடிச்சுவடு

'நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக'
(கலாத்தியர் 6:9)

கிறிஸ்துவுக்குள் ஜீவிக்கும் ஒருவன், தானும் கிறிஸ்துவைப்போல ஜீவிக்கவேண்டுமென்றே எப்போதும் விரும்புவான்; அதற்காக முயற்சிப்பான். அந்த ஆவல் உங்களுக்கும் உண்டா? அப்படியானால் கிறிஸ்து எப்படிப்பட்டவர் என்பது நமக்குத் தெரியவேண்டும். பாவமற்றவராக உலகிற்கு வந்து, மனுக் குலத்தின் பாவத்தைத் தம்மேல் சுமந்து, மனிதனுக்காகவே மரித்து, உயிர்த் தெழுந்து இன்றும் எம்மோடு ஜீவித்துக்கொண்டிருக்கிற நமது ஆண்டவரே இயேசுகிறிஸ்து என்பதை நாம் அறிவோம். இந்தக் காரியத்தை அவர் வெகு இலகுவாக செய்துமுடிக்கவில்லை. இந்த மீட்பைச் சம்பாதித்துக் கொடுப்பதற் காக இவ்வுலகிலே பல நிந்தைகள், அவமானங்கள், எதிர்ப்புகள், கோபங்கள் போன்றவற்றை அவர் எதிர்நோக்க வேண்டியிருந்தது. ஆனாலும், தாம் வந்த நோக்கத்திலிருந்து அவர் பின்வாங்கவில்லை. தாம் வந்த நோக்கத்தை நிறைவு செய்யும்வரை சோர்ந்துபோகாமல் அவர், "நன்மை செய்கிறவராகச் சுற்றித் திரிந்தார்" (அப். 10:38).

கிறிஸ்து நிறைவேற்றிய மகா இரட்சிப்பின் கிரியையை அவரைத் தவிர யாராலும் செய்யமுடியாது; அதற்கு அவசியமும் இல்லை. ஆனால் அவர் நடந்த பாதையில் நடக்கவே நாம் அழைக்கப்பட்டுள்ளோம். கிறிஸ்து நடந்த பாதை எதிர்ப்புகள், போராட்டங்கள், அவமானங்கள், நிந்தைகள் நிறைந்த வாழ்க்கை என்றாலும் அவர் பாதையில் நடக்க வாஞ்சிக்கும் நம்மையும் அவை யாவும் நிச்சயம் எதிர்கொள்ளும். அவற்றின் மத்தியிலும் நாம் ஆண்டவரைப்போல நன்மை செய்கிறவர்களாக வாழமுடியுமா? நமக்குத் தீமை செய்த ஒருவன் ஆபத்திலே சிக்கித் தவிக்கும்போது அவனுக்கு நன்மை செய்ய நம்மால் தீவிரமாக செல்லமுடியுமா? இது கடினம், இது கூடுமான காரியம் இல்லை என்று நீ சொல்வாயானால் கிறிஸ்துவின் சாயலைத் தரித்துக்கொள்வதும் உனக்குக் கடினமாகவே இருக்கும்.

கிறிஸ்துவுக்குள் வாழ வாஞ்சிக்கும் மகனே, மகளே, "உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக. தீமையை வெறுத்து நன்மையைப் பற்றிக்கொண்டிருங் கள். நீங்கள் தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லுங்கள்" (ரோம. 12:9,21). "ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்" (யாக். 4:17). ஆகவே, நன்மை செய்வதால் பாடுகள், நெருக்கங்கள், அவமானங்கள் வந்தா லும், சோர்ந்துபோகாமல் கிறிஸ்துவைப்போல, நீ உயிரோடு இருக்கும்வரை நன்மை செய்கிறவனாகவே வாழத் தீர்மானம் செய்துகொள்வாயாக.

"அவமானங்கள், போராட்டங்களைச் சந்தித்தாலும் ஆண்டவரே, உமது பாத அடிச்சுவட்டைப் பின்பற்றி, நன்மை செய்து வாழ கிருபை செய்யும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்

31

செவ்வாய்

வாசிப்பு: யாத்திராகமம் 32:30-35

# மன்றாட்டு ஜெபம்

"....மன்னித்தருளும். இல்லாவிட்டால் நீர் எழுதிய உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரைக் கிறுக்கிப்போடும் என்றான்." (யாத்திராகமம் 32:30)

மன்றாடுவது என்பது, ஒன்றுக்காக மிகவும் இரந்து, கெஞ்சிக்கேட்பதைக் குறிக்கும். இதன் உச்சக் கட்டமாக சிலர் பொருத்தனைகளைச் செய்து ஜெபிப்ப துண்டு. எமது உள்ளத்தில் அதிகம் விசாரங்கள் பெருகுகையில் நாம் தேவனின் சமுகம் சென்று, மன்றாடி ஜெபிப்பதுண்டல்லவா? அதேபோல் ஆலயங்களில் "இப்போது மன்றாட்டு ஜெபம் ஏறெடுக்கப்படும்" என கூறும்வேளையில் பலதரப் பட்ட தேவைகளுக்காக பலர் மன்றாடி ஜெபிப்பதையும் நாம் கேட்டிருக்கிறோம்.

இன்றைய வாசிப்புப் பகுதியில், மோசே, தேவனிடம் சென்று இஸ்ரவேல் ஜனங்களின் பாவத்தை அவர்களுக்கு மன்னிக்கும்படியாக மன்றாடுவதைக் காண்கிறோம். இந்த மன்றாட்டு ஜெபம் வெறும் வார்த்தைகளாகவோ அல்லது கடமைக்காகவோ செய்யப்பட்ட ஒன்றல்ல. மோசே ஜெபித்த விதத்திலிருந்து அது அவர் உள்ளத்தின் ஆழத்திலிருந்து வந்த ஒரு மன்றாட்டு ஜெபம் என்பதை விளங்கிக்கொள்ளலாம். "இந்த ஜனங்களை மன்னிக்கக்கூடுமானால் மன்னியும், இல்லாவிட்டால் என் பேரை ஜீவ புஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போடும்" என அவர் ஜெபித்தார். அதாவது தான் தண்டிக்கப்பட்டாலும் பரவாயில்லை; தனது ஜனங்கள் மன்னிப்படைய வேண்டும் என்பதே ஜெபம். ஜனங்களுக்காக மன்றாடி எப்படியா வது தேவனுடைய கோபாக்கினையில் இருந்து அவர்களைத் தப்புவிக்கவேண் டும் என்பதே மோசேயின் ஜெபத்தின் நோக்கமாய் இருந்தது.

நாம் எமது தேவைகளுக்காக ஒருவேளை மன்றாடி ஜெபித்திருக்கலாம். ஆனால் பிறருடைய தேவைகளுக்காக மன்றாடி ஜெபிப்பதுண்டா? மற்றவர்களுக் காக நாம் ஜெபிக்கும் ஜெபங்கள் பலதடவைகளிலும், கடமைக்காக ஜெபிப்பது போன்றே அமைந்துவிடுகிறது. ஒருவர் தனக்காக ஜெபிக்கும்படி கேட்டால், அவருக்கு சரி என்று சொன்னதுக்காக ஜெபிப்பதுபோல அன்று ஜெபித்துவிட்டு, பின்னர் அதை மறந்தேவிடுவோம். அவருக்காக நாம் பாரப்பட்டு தொடர்ந்து ஜெபிப்பதோ அல்லது அவரின் தேவையை நமது தேவையாகக் கருதி உணர்வு டன் ஜெபிப்பதோ கிடையாது. அடுத்தமுறை அவரைச் சந்திக்கும்போது, "எனது தேவை நிறைவேறிவிட்டது; நீங்கள் ஜெபித்ததற்காக மிகவும் நன்றி" என்று அவர் கூறுவார். அப்படியா என்று சொல்லி அவர் தரும் நன்றிகளையும் கூசாமல் பெற்றுக்கொள்ளுவோம். ஆனால் எவ்வளவு தூரம் அவருக்காய் பாரப்பட்டு நாம் மன்றாடி ஜெபித்தோம் என்பது கேள்விக்குறியே.

அருமையானவர்களே, எப்போதுமே சுயநலமான ஜெபங்களை ஏறெடுப் பதை விடுத்து, மற்றவர்களுக்காக பாரத்தோடு மன்றாடும் மன்றாட்டு ஜெபங் களை ஏறெடுக்கப் பிரயாசப்படுவோம்.

"என் அன்பின் ஆண்டவரே, மற்றவர்களைப் புண்படுத்தும் நாவையல்ல, மற்றவர் களுக்காய் மன்றாடும் நாவை எனக்குத் தந்தருளும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெபியுங்கள்!




**எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன்பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள். (எபேசியர் 6:18)**

→ உங்களுக்குத் தெரிந்த ஊழியர்களின் பெயர்களை எழுதி வைத்து அவர்களுக்காக தேவனுடைய பாதத்தில் பரிந்துபேசி ஜெபியுங்கள்!

→ உங்கள் நண்பர்கள், உறவினர்களினது பெயர்களை எழுதி வைத்து அவர்களுக்காக விண்ணப்பம் செய்யுங்கள்!

→ உங்கள் குடும்பத்திலுள்ள அங்கத்தினர் அனைவரின் பெயர்களையும் எழுதி வைத்து வேண்டுதல் செய்யுங்கள்!

→ உங்கள் சபைக்காக வாரத்தில் ஒருநாள் அரைமணி நேரமாவது சிறுபிள்ளைகள், வாலிபர்கள், சபையிலுள்ள இரட்சிக்கப்படாத மக்கள், சபையிலுள்ள விதவைகள், திக்கற்ற பிள்ளைகள் ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்!



→ இலங்கை தேசத்திற்காகவும் ஒவ்வொரு மாகாணங்கள், நகரங்கள், மாவட்டங்களுக்காகவும், அவற்றிலே ஆளுகை செய்கின்ற அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்காகவும் மன்றாடுங்கள்!

→ இலங்கையிலுள்ள தமிழ், சிங்கள, ஆங்கில மொழி பேசும் இன மக்களிடையேயான சகோதர ஐக்கியம் மேம்பட ஜெபியுங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவுபடுத்துகிறோம்

எமது வெளியீடுகளை
புதிதாக பெற
விரும்புகிறவர்கள் மற்றும்
எமது வெளியீடுகளை
தொடர்ந்து பெற்றுவரும்
சந்தாதாரர்களுக்காக எமது
சந்தா கட்டண விபரங்கள்
கீழே தரப்பட்டுள்ளன.




## ஒரு வருடத்திற்கான சந்தா

| | |
|---|---|
| இலங்கையில் உள்ளவர்களுக்கு | - ரூ. 500.00 |
| தென்னாசிய நாடுகளில் உள்ளவர்களுக்கு | - ரூ. 1,000.00 |
| மத்திய கிழக்கு நாடுகளில் உள்ளவர்களுக்கு | - ரூ. 1,000.00 |
| ஐரோப்பிய நாடுகளில் உள்ளவர்களுக்கு | - ரூ. 2,000.00 |
| அமெரிக்க நாடுகளில் உள்ளவர்களுக்கு | - ரூ. 2,000.00 |

## உங்கள் சந்தா பணத்தை

**மணியோடர் மூலம் பணம் அனுப்புவதாயின்:** "கொடுபட வேண்டிய இடம்" என்ற இடத்தில் சினமன் கார்டின்ஸ் (**CINNAMON GARDENS POST OFFICE**) என்றும், பணம் பெறுபவரின் பெயர் என்ற இடத்தில் (**BACK TO THE BIBLE**) என்றும் குறிப்பிட்டு அனுப்பவும்.

**காசோலை மூலம் அனுப்புவதாயின்:** (**BACK TO THE BIBLE**) என்ற பெயருக்கு காசோலை எழுதவும்.

*மேலே குறிப்பிடப்பட்ட விதங்களில் பணம் அனுப்புவதில் உங்களுக்கு சிரமம் அல்லது சிக்கல்கள் ஏதும் இருக்குமானால் எம்மோடு தொடர்புகொள்ளுங்கள்.*

***இங்கிலாந்து மற்றும் கனடாவில் உள்ளவர்களுக்கு***
பணம் அனுப்பிவைக்க விசேஷ ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விபரங்களுக்கு எம்மோடு தொடர்புகொண்டு விசாரிக்கவும்.

*(சந்தாதாரருக்கான படிவம் மறுபக்கத்தில் உள்ளது)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தா படிவம்



எமது வெளியீடுகளை புதிதாக பெற்றுக்கொள்ள விரும்புகிறவர்கள், அல்லது உங்களுக்குத் தெரிந்த புதியவர்களுக்கு இப்புத்தகத்தை அறிமுகப்படுத்த விரும்பினால் இந்த படிவத்தை தெளிவாக நிரப்பி அனுப்பவும்.

நீங்கள் ஏற்கனவே எமது வெளியீடுகளைப் பெற்றுவரும் சந்தாதாரராயின் உங்கள் பெயர், முகவரியுடன் உங்கள் கணனி இலக்கத்தையும் குறிப்பிட்டு எழுதியனுப்புங்கள். உங்கள் முகவரியில் மாற்றம் ஏதும் இருக்குமானால் உங்கள் புதிய முகவரியுடன் உங்கள் பழைய முகவரியையும் குறிப்பிட மறவாதீர்கள்.

(முடிந்தால் ஆங்கிலத்தில் நிரப்பவும்)

பெயர் :.......................................... கணனி இல.: ...................

முகவரி :..............................................................................

.........................................................................................

.........................................................................................

.........................................................................................

எந்த மாதத்திலிருந்து எமது வெளியீடுகளைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறீர்கள்? [ ]

நீங்கள் புதிய சந்தாதாரரா, பழைய சந்தாதாரரா? [ ]

இப் படிவத்துடன் ரூபா..............................ஐ காசோலை / மணி ஓடர் மூலம் அனுப்பி வைத்துள்ளேன்.

அனுப்பியவர் பெயர்: .....................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்


FEBA 31 MB 7.15 a.m. (திங்கள், செவ்வாய்)
கந்துரட FM 6.45 p.m.
(சனி தவிர்ந்த ஏனைய நாட்களில்)
SLBC வர்த்தகசேவை - ஞாயிறு 5.30 p.m.
வெற்றி FM தினமும் 5.45 a.m.

# சிங்களம்

SLBC கிதுனு லமா ஹமுவ
ஞாயிறு 5.35 p.m. (ஒன்றுவிட்ட ஞாயிறுதோறும்)
ருகுணு FM 107.4 - ஜீவன நதிய - ஞாயிறு 11.30 a.m
ருகுணு FM 107.4 குருலு கெதல - புதன் 4.45 p.m.
ரஜரட்ட FM 102.4 - ஜீவன நதிய - ஞாயிறு 4.15 p.m.
கந்துரட்ட FM 102.4 - குருலு கெதல - புதன் 4.45 p.m.
ரஜரட்ட FM - குருலு கெதல - சனி 11.00 a.m.
சியத FM 90.9/ 98.6 - லகிரு கிரண தினமும் 5.45 p.m.

# ஆங்கிலம்

ஆசிய சேவை SLBC 7.00 - 7.30 a.m.
திங்கள் முதல் வெள்ளி வரை 19 MB, 31MB, 49MB



# எமது வானொலி நிகழ்ச்சிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசுத்த வேதாகமத்தை ஓராண்டிற்குள்
வாசித்து முடிப்பதற்கான கால அட்டவணை

## ஆகஸ்ட்

| திகதி | காலை | மாலை |
|---|---|---|
| 01 | யோபு 32,33,34 | அப் 27:21-44 |
| 02 | யோபு 35 - 38 | அப் 28 |
| 03 | யோபு 39 - 42 | ரோமர் 1 |
| 04 | சங் 1 - 7 | ரோமர் 2 |
| 05 | சங் 8 - 14 | ரோமர் 3 |
| 06 | சங் 15 - 18 | ரோமர் 4 |
| 07 | சங் 19 - 24 | ரோமர் 5 |
| 08 | சங் 25 - 30 | ரோமர் 6 |
| 09 | சங் 31 - 34 | ரோமர் 7 |
| 10 | சங் 35 - 37 | ரோமர் 8:01-17 |
| 11 | சங் 38 - 42 | ரோமர் 8:18-39 |
| 12 | சங் 43 - 48 | ரோமர் 9 |
| 13 | சங் 49 - 52 | ரோமர் 10 |
| 14 | சங் 53 - 58 | ரோமர் 11:01-12 |
| 15 | சங் 59 - 65 | ரோமர் 11:13-36 |
| 16 | சங் 66 - 69 | ரோமர் 12 |
| 17 | சங் 70 - 73 | ரோமர் 13 |
| 18 | சங் 74 - 77 | ரோமர் 14 |
| 19 | சங் 78,79 | ரோமர் 15 |
| 20 | சங் 80 - 85 | ரோமர் 16 |
| 21 | சங் 86 - 89 | 1கொரி 1 |
| 22 | சங் 90 - 94 | 1கொரி 2 |
| 23 | சங் 95 - 101 | 1கொரி 3 |
| 24 | சங் 102 - 104 | 1கொரி 4 |
| 25 | சங் 105,106 | 1கொரி 5 |
| 26 | சங் 107 - 110 | 1கொரி 6 |
| 27 | சங் 111 - 117 | 1கொரி 7:01-24 |
| 28 | சங் 118-119:1-72 | 1கொரி 7:25-40 |
| 29 | சங் 119:73-176 | 1கொரி 8 |
| 30 | சங் 120 - 131 | 1கொரி 9 |
| 31 | சங் 132 - 138 | 1கொரி 10 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "Sathiya Vasanam" - Supplimentary

Registered in the Department of Posts of Sri Lanka under
No. QD/101/News/2010

இந்நூலை புதிதாக வாசிப்பவர்கள் தொடர்ந்தும் இந்நூலைப் பெற்றுக் கொள்ள விரும்பினால் விபரங்களுக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

நீங்கள் எமது வெளியீடுகளை பெற்றுவரும் சந்தாதாரரானால் நீங்கள் எம்முடன் தொடர்பு கொள்ளும் ஒவ்வொருமுறையும் உங்கள் கணனி (கம்பியூட்டர்) பதிவு இலக்கத்தையும் குறிப்பிட்டுத் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம். உங்கள் கணனி பதிவு இலக்கம், உங்களுக்கு எமது வெளியீடுகள் அனுப்பப்படும் உறையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எமது வெளியீடுகள் ஏதாவது தவறுதலாக இரண்டு பிரதிகள் உங்களுக்கு கிடைத்தால் தயவுசெய்து உங்களுடைய கணனி பதிவு இலக்கத்துடன் எமக்கு அறியத்தரும்படி அன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.

நீங்கள் வீடு மாறும்போது உங்கள் புதிய முகவரியுடன் உங்கள் பழைய முகவரியையும் குறிப்பிட்டு அறியத்தாருங்கள்.

எமது வெளியீடுகள் உரிய காலத்தில் உங்களுக்கு வந்து சேராவிடில் அது குறித்து உடனடியாக அறியத்தாருங்கள்.



நேரில் எமது முகவரி
*120A ,Dharmapala Mawatte*
*Colombo 7*
*Sri Lanka*

BACK TO THE BIBLE
சத்தியவசனம்
த பெ 1012, கொழும்பு, இலங்கை
**T - 011 2695441, 011 2698843**
**E - svsl@sltnet.lk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org